REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 1 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 92 இல. 155 | Monday 01, July, 2024 | 20பக்கங்கள் | 50/-

## மதுபானம் அருந்தி ரயில் ஓட்டிய சாரதி மடக்கிப் பிடிப்பு

கொழும்பில் இருந்து கண்டி நோக்கி நேற்று (30) முற்பகல் 10.40 மணியளவில் பயணத்தை ஆரம்பித்த ரயிலின் சாரதி அளவுக்கு அதிகமாக மதுபானம் அருந்திவிட்டு அமைதியற்ற வகையில் நடந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சாரதி, கண்டி நகருக்கு அருகில் சுதுஹும்பொல என்ற இடத்தில் ரயிலை நிறுத்திவிட்டு ரயிலில் இருந்து இறங்கி ஓடிய போது ரயிலில் இருந்த

06

### அரச நிறைவேற்று சேவை பிரிவு அதிகாரிகளுக்கு

# விசேட மாதாந்த கொடுப்பனவாக ரூ. 25,000 வழங்க அரசு தீர்மானம்

### இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் சுற்றறிக்கை வெளியீடு

அரச சேவையின் நிறைவேற்று பிரிவு அதிகாரிகளுக்கு இன்று (01) முதல் அமுலுக்கு வரும் வகையில் 25,000 ரூபா விசேட மாதாந்த கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதுவரையில் சேவைக் காலத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட விசேட கொடுப்பனவுக்குப்பதிலாக, சேவைக் காலத்தை கருத்தில்கொள்ளாது 25,000 ரூபாவை விசேட மாதாந்த கொடுப்பனவாக வழங்குவதற்கு கடந்த (24) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த கொடுப்பனவு இலங்கை பொறியியல் சேவை, இலங்கை கட்டடக்கலை சேவை மற்றும் இலங்கை நில அளவையாளர் சேவை அதிகாரிகளுக்கும் கிடைக்கவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன கையெழுத்துடன் அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக சேவையில் / பதவியின் விசேட தன்மையை கவனத்தில்கொண்டு விசேட கொடுப்பனவுக்கு அங்கீகரிக்கப்பட்ட சேவைகளுக்கு/பதவிகளுக்கு உரித்தான அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும். விதிகளுக்கு உட்பட்ட கொடுப்பனவு / கொடுப்பனவு 25,000 ரூபாவிலும் பார்க்க குறைவு எனில், அவர்களுக்கு அந்த கொடுப்பனவு இந்தச் சுற்றறிக்கையின்படி கூறப்பட்ட கொடுப்பனவுகள் திருத்தப்படாது என்றும் கூறப்பட்டுள்ளது.

அதற்கமைவாக 07.01.2020 திகதியிடப்பட்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை 18/2015 (IV) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 07.12.2019 திகதியிட்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை எண். 18/2015 (III) 30.01.2024 முதல் இரத்துச் செய்யப்படுவதுடன் 12.12.2011 திகதியிட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 28/2011 இன் படி,

06



### தனிநபர், கட்சி சார்பு அரசியலை புறந்தள்ளி

# அனைவரும் நாட்டுக்காக முன்னோக்கி செல்வோம்

### சகலரையும் ஒன்றிணைத்து நாட்டை கட்டியெழுப்பும் பாடத்தை என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். பின்னர் அரசியல் செய்யலாம்; ஜனாதிபதி எதிர்க்கட்சிக்கு தெரிவிப்பு

மூழ்கவிருந்த கப்பலை என்னிடம் ஒப்படைத்ததாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ கூறினார். ஆனால், என்னிடம் டைடானிக் கப்பல் ஒன்றே ஒப்படைக்கப்பட்டது. அதனை நான் தற்போது துறைமுகத்துக்கு கொண்டு வந்திருக்கிறேன். இருந்த மாலுமிகள் அனைவரும் தப்பியோடிவிட்டனர். பனிப் பாறைக்கு

06



புதிய அரசியல் பயணத்தை நேற்று மாத்தறையில் ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி

### நாளை விசேட பாராளுமன்ற அமர்வு

## அமைச்சர்கள், ஆளுந்தரப்பு எம்.பிக்களை பங்கேற்க வலியுறுத்தல்



பாராளுமன்றம் நாளை 02 ஆம் திகதியும் நாளை மறுதினம் 03 ஆம் திகதியும் கூடுமென பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காகவே, நாளை 02 மற்றும் நாளை மறுதினம் 03 ஆம் திகதிகளில் விசேட பாராளுமன்ற அமர்வை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க

06

## கடலில் மிதந்த திரவத்தை அருந்தி உயிரிழந்தோர் ஐந்தாக அதிகரிப்பு

கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றிலிருந்த திரவத்தை மதுபானம் என்ற எண்ணத்தில் அருந்திய 05 மீனவர்கள், உயிரிழந்துள்ளதாக கடற்படையின் ஊடகப் பணிப்பாளர் கப்டன் கயான் விக்கிரமசூரிய தெரிவித்தார். இந்த திரவத்தை அருந்திய மற்றுமொரு மீனவர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவரை மீட்டு கரைக்கு அழைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

திரவத்தை அருந்திய Devon 5 என்ற ஆழ்கடல் வள்ளத்திலிருந்த மீனவர்கள் 06 பேரில் மூவர் நேற்று முன்தினம் மரணமாகினர். அத்துடன் மற்றுமொரு மீனவர் நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தின் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் ஒருங்கிணைப்புடன் "டெவோன் 5" என்ற இந்த ஆழ்கடல் மீன்பிடி வள்ளத்திலுள்ள 02 மீனவர்களே சிங்கப்பூர் கப்பலினால் மீட்கப்பட்டனர். தேவேந்திர முனையிலிருந்து சுமார் 365 கடல் மைல்களுக்கு அப்பால்

06



## கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நேற்று திறப்பு



கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்துக்கான குமண தேசிய பூங்கா ஊடான காட்டுப்பாதை விசேட பூஜைகளுடன் நேற்று (30) ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று காலை 6.00 மணியளவில் இதனை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனும் கலந்து கொண்டார்.



## 1,460 ஐஸ் போதைப்பொருள் பக்கற்றுகளுடன் ஒருவர் கைது

03

## பஸ் கட்டணங்கள் நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு

### இன்று பிற்பகல் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



### ஆகக் குறைந்த கட்டணம் 28 ரூபாவாகிறது

பஸ் கட்டணங்கள் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளதாக, அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள்

06

## பொருளாதாரம் வங்குரோத்தடையும் எனப்பயந்தே எதிர்க்கட்சி பின்வாங்கியது

### ஜனாதிபதியின் திறமையால் கடன்களை மீளச் செலுத்தி வருகிறோம்

நாட்டின் பொருளாதாரம் ஆறு மாதங்களில் வெடித்துச் சிதறுமெனப் பயந்து, நாட்டை பொறுப்பேற்க எதிர்க்கட்சியினர் பின்வாங்கிய வேளையிலேயே, ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றதாக வெளிநாட்டமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

மாத்தறையில் நடைபெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்: "ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுடன் இணைந்து பொதுக் கூட்டத்தில் நான் உரையாற்றுவது இதுவே முதல் தடவையாகும். 2019 இல், சட்டத்தரணியாக பணியாற்றியவாறு நாட்டை முன்னேற்றவும் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காகவும் செயற்பட்டேன். ஆனால் கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, எரிபொருள் மற்றும் எரிவாயு

06



### பிரேமதாசவின் மகானாக இல்லாதிருப்பின்

## மாநகர சபை உறுப்பினராகும் தகுதியும் சஜித்துக்கு இருக்காது

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் மகனாக இருப்பதே, கட்சித் தலைவராக சஜித் பிரேமதாச இருப்பதற்கான ஒரே தகுதி என பலரும் எண்ணுகின்றனர். அவர் ஆர்.பிரேமதாசவின் மகனாக இல்லாவிட்டால் சில வேளைகளில் மாநகர சபையின் உறுப்பினர் பதவிக்குக் கூட பொருத்தமாகமாட்டார் என்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். களுத்துறையில் (29) நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து

06



## திறைசேரி உண்டியல் ஜூலை 03இல் ஏல விற்பனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



திறைசேரி உண்டியல்களை எதிர்வரும் ஜூலை 03 இல், ஏல விற்பனை செய்யவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அந்த வகையில் மேற்படி திகதியில் 190,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக்

06

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய சக்தியாக அமையும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணியே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தீர்மானமிக்க சக்தியாக அமையும் என, அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டணி ஆதரவு வழங்கும் ஒருவரே அடுத்த ஜனாதிபதி வேட்பாளராவார் என்றும், அடுத்த ஜனாதிபதியை இந்த கூட்டணியே தேர்ந்தெடுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மேற்படி கூட்டணியின் முக்கிய

06

## தெஹிவளை விலங்கியல் பூங்காவின் 88 ஆண்டுகள் பூர்த்தி விழா ஜூலை 03இல்

தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்காவின் 88 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 03 இல், வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

தனி நபருக்குச் சொந்தமான உயிரியல் பூங்கா 1936 ஜூலை 03இல், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வரும் தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்கா, 88ஆவது ஆண்டு நிறைவு விழாநாளை 03 இல் கொண்டாடப்படவுள்ளது.

மூன்றாம் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகள்

06

### கற்பிட்டி, நுரைச்சோலை பகுதிகளில்

## 1,713 கிலோ பீடி இலை மூடைகள் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



கற்பிட்டி – முதலைப்பாளி, நுரைச்சோலை பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1,713 கிலோ பீடி இலைகள் (28) கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி கடற்படையினர், முதலைப்பாளி கடற்பிரதேசத்தில் விஷேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது அங்கு 14

06

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜூலை 1 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.34
ளுஹர் - 12.15
அஸர் - 03.42
மஃரிப் - 06.30
இஷா - 07.47

**இன்றைய சுபதினம்**
குரோதி வருடம் ஆனி 15
ராகுகாலம் : காலை : 7.26 - 8.56வரை
சுபநேரம் : காலை : 11.56 - 01.26வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# அந்நியச்செலாவணியை அதிகளவு ஈட்டுவதற்கு வர்த்தகர்களுக்கு வாய்ப்பு



ஏற்றுமதி மூலம் அந்நியச்செலாவணியை ஈட்டுவதற்கு வர்த்தகர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் திறக்கப்படும் என, பிரதமர் தினேஷ்குணவர்தன தெரிவித்தார்.பெல்மடுல்ல

சில்வர் ரே ஹோட்டலில் நடைபெற்ற "சர்வதேச இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கண்காட்சி 2024" இல் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர்:

தேயிலை, தென்னை, இரப்பர் போன்றவற்றை விட இரத்தினங்களுக்கு நம் நாடு புகழ் பெற்றிருந்தது. முற்காலத்தில் நாட்டின் இரத்தினங்கள் பல்வேறு நாட்டு அரசர்கள் மற்றும் வணிகர்கள் மத்தியில் புகழ் பெற்றிருந்தன. நமது இரத்தினங்கள் புனிதமான மற்றும் உன்னதமான மதிப்பைக் கொண்டிருந்தன. ஆனால், இரத்தினங்களால் யாரும் நம் நாட்டைக் கைப்பற்ற வரவில்லை. வேறு பொருட்களைப் பெற்றுக் கொள்ளவே எங்களை ஆக்கிரமித்தார்கள்.

அதன்பிறகு, தேயிலை, தென்னை மற்றும் இரப்பர் ஆகியவை நமது நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கும் முக்கிய ஏற்றுமதிப் பயிர்களாக பங்களித்தன. கிராமங்களை மாற்றி, நாட்டின் புவியியல் வரைபடத்தை மாற்றி தேயிலை, தென்னை, இரப்பர் பயிரிடப்பட்டது. ஒன்றரை நூற்றாண்டு காலமாக நாம் அதனை செய்து வருகிறோம்.

ஜே. ஆர். ஜயவர்தன அரசாங்கத்தின் போது, ஆடைத் தொழில் மற்றும் சுற்றுலாத் தொழில் நிறுவப்பட்டது. தென்னை இரப்பரைத் தவிர, அந்த இரண்டு புரட்சிகளைப் பற்றி மட்டுமே நாம் பேச முடியும்.

ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியைப் பெற புதிய கதவுகளைத் திறக்க வேண்டும். இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண தொழிலுக்கு நல்ல வாய்ப்பு உள்ளது. மேற்கூறிய இரண்டு வாயில்களை விட இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணத் தொழிலில் அதிக அழுத்தம் கொடுத்தால், அதிக அளவு அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும்.

இது அரசின் வழிகாட்டுதலுடனும் பங்கேற்புடனும் தனியார் துறையால் முன்னோக்கி கொண்டு வரப்பட்ட தொழிலாகும் .

மேலும் ஒரு நல்ல எதிர்காலத்தைக் கொண்ட, பல்வகைத்தன்மை கொண்ட மற்றும் பல்வேறு துறைகளில் மதிப்பை உருவாக்கப் பயன்படும் ஒரு தொழிலாகவும் இது உள்ளது.

நமது நாட்டு வர்த்தர்கள் அதிகளவு அந்நியச்செலாவணியை ஈட்டும் நோக்கில்,

புதிய வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

## சர்வதேச நாணய நிதிய உதவியின்றி அந்நியச் செலாவணியை ஈட்ட முடியாது





"EV MOTOR SHOW 2024" என்ற விஞ்ஞான வாகன கண்காட்சி, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் ஆரம்பமானது. ஆரம்பமானது.போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்; கலாநிதி பந்துல குணவர்தனவின் எண்ணக்கருத்துக்கு அமைவாக இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இங்கு உரையாற்றிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன; நாட்டின் போக்குவரத்து வரலாற்றின் போக்கை மாற்றுவதற்கு, அதிக காலம் தேவைப்பட்டது. மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்றதாக உலகை மாற்றும் வகையில், சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும்.

பரீஸ் மாநாடு போன்ற சர்வதேச மாநாடுகள் இதற்கான

கட்டமைப்பை செயற்படுத்துகிறது.இதன் அடிப்படையிலேயே,உலகின் பல நாடுகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான போக்குவரத்து கட்டமைப்பு செயல்படுத்தப்படுகிறது. நம்மை விட தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்ட அந்த நாடுகள், அந்த நாடுகளின் கொள்கை வகுப்பாளர்கள் எரிபொருட்களைப் பயன்படுத்தாமல் போக்குவரத்துகளை பயன்படுத்துகின்றனர்.

இலங்கையில் மின்சாரக் கார்களின் தயாரிப்புக்கள் சுற்றுச்சூழலின் பாதுகாப்புக்கு உதவும்.

கைத்தொழில் மேம்பாடு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு ஆகியவற்றுக்கான மிகவும் துல்லியமான, நிலையான போக்கைப் பிரதிபலிக்கும் ஒரு வரைபடத்தை பாராளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை செயற்படும் என நான் நம்புகிறேன்.

1977 க்குப் பிறகு, நாட்டின் கொடுப்பனவு சமநிலையில் பெரும் பற்றாக்குறையை எதிர்கொள்கிறோம். இதன்பிறகு, நாட்டுக்குத் தேவையான இறக்குமதிகளை மேற்கொள்ளும் அளவுக்கு டொலர் வருமானம் எங்களுக்கு கிடைக்கவில்லை. அதனால்தான் பெறப்பட்ட வருமானத்திற்கும் இறக்குமதிக்கான செலவினத்திற்கும் இடையிலான வேறுபாடு ஒவ்வொரு ஆண்டும் எதிர்மறையாக அமைந்திருந்தது. எனது நம்பிக்கைக்கு அமைவாக , மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதை விட, கல்வி நடவடிக்கைகளுக்காக நாட்டிலிருந்து அதிக அந்நிய செலாவணி வெளி நாடுகளுக்கு சென்றன.நாட்டின் அந்நியச் செலாவணிக் கொடுப்பனவுப் பற்றாக்குறை ஒவ்வொரு முறையும் சர்வதேச நாணய நிதியம் மூலம் தீர்க்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின்றி எந்த ஒரு சர்வதேச பரிவர்த்தனையும் செய்ய முடியாது. கடந்த வாரம் சர்வதேச கடன் வழங்குநர்களுடன் நேர்மறையான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதால், நாடு பெரும் வெற்றி கண்டது.

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# 92
வருடங்களுக்கு முன்
## தினகரன்
இன்று 01 ஜூலை 1932



முஸ்லிம்களின் கோரிக்கை

திரு. பொன்னம்பலம் அவர்களின் அபிப்பிராயம்

சிறுபான்மையோர் பிரச்னை

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமல்ல ஜனத் தொகைக்கேற்ற பிரதிநிதித்துவமே வேண்டும்

நேற்று முன்தினம் மாலை சுமார் 7 மணிக்கு முஸ்லிம் லீக் மண்டபத்தில் திரு. டீ. பீ. ஜாயா அவர்களின் அவைத்தலைமையின் கீழ் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமவர்கள் "சிறுபான்மையோர் பிரச்னை" என்னும் விஷயமாகச் சிறந்ததோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். அத்தருணம் பல முஸ்லிம் பிரமுகர்கள் அஜராயிருந்தார்கள். திரு. அ. மகாதேவா அவர்களும் விஜயஞ் செய்திருந்தார்.

...னும் அறியக்கூடியதாகச் செய்ய வேண்டும். ஒரு நாட்டு அரசியல் விஷயங்களில் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு.

பெரும் பான்மையோருடன் ஒத்துழைக்க முன்வரும் ஒரு சமூகத்தினருக்கு அவர்கள் விரும்பிய கோரிக்கைகளை ஏன் கொடுக்கக் கூடாது?

டொனமூர் குழுவினர் மாகாண வாரியான பிரதிநிதித்துவத்தைச் சிபார்சு செய்திருக்கிறார்கள். இதை...

### முஸ்லிம்களின் கோரிக்கை

**திரு. பொன்னம்பலம் அவர்களின் அபிப்பிராயம்**

### சிறுபான்மையோர் பிரச்னை

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமல்ல ஜனத் தொகைக்கேற்ற பிரதிநிதித்துவமே வேண்டும்

நேற்று முன்தினம் மாலை சுமார் 7 மணிக்கு முஸ்லிம் லீக் மண்டபத்தில் திரு.டீ.பீ. ஜாயா அவர்களின் அவைத்தலைமையின் கீழ் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமவர்கள் "சிறுபான்மையோர் பிரச்சனை" என்னும் விஷயமாகச் சிறந்ததோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். அத்தருணம் பல முஸ்லிம் பிரமுகர்கள் ஆஜராயிருந்தார்கள். திரு. அ. மகாதேவா அவர்களும் விஜயஞ் செய்திருந்தார்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# பாதுகாப்பு அச்சுறுத்தல், சவால்களின் அனுபவங்களை பகிர்ந்துகொள்ள தயார்

## ஐ.நா.பொலிஸ் பிரதானிகள் மாநாட்டில் உரை



பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் சவால்களை எதிர்கொண்டுள்ள நாடுகளுடன் அறிவு, அனுபவத்தை பகிர்ந்து கொள்வதற்கு இலங்கை தயாராகவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு எதிராக போராடுவதற்காக விசேட பொலிஸ் பிரிவுகளுக்கு பங்களிப்புச் செய்வதற்கும் இலங்கை விருப்பத்துடன் உள்ளதாகவும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை பொலிஸ் பிரதானிகளின் மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.இங்கு உரையாற்றிய அமைச்சர்:

வன்முறைகள்,சைபர் குற்றங்கள் மற்றும் ஆயுத தொழினுட்ப செயற்பாடுகள் பாரம்பரியமற்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளல் ஆகியன, உலக பாதுகாப்பு சவால்களுக்கு அடிப்படையாக உள்ளது.

திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் குழுக்களாக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.இது சர்வதேசத்தின் அமைதிக்கு ஏற்படும் பாரிய அழுத்தமாகும்.

சர்வதேச பாதுகாப்புக்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

அமைப்பு ரீதியான குற்றங்கள் மற்றும் குழுக்களாக மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுப்பதற்காக விசேட பொலிஸ் பிரிவை ஈடுபடுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் இது தொடர்பில் வேண்டுகோள் முன்வைக்கிறேன்.

இவ்வாறான அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக இலங்கையில் அனுபவமுள்ள பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சட்ட வல்லுநர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை விருப்பத்துடன் உள்ளது.

இதுபோன்ற பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ள இலங்கை,ஏனைய நாடுகளுடன் இதுகுறித்த அனுபவம் மற்றும் அறிவை பகிர்ந்து கொள்வதற்கு தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பதில் சட்ட மாஅதிபராக

## மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க பதவி பிரமாணம்

*லோரன்ஸ் செல்வநாயகம்*

சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க பதில் சட்ட மாஅதிபராக இன்று பிரதம நீதியரசர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார்.

முன்னாள் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்னம் ஓய்வு பெறும் நிலையில், ஏற்படும் வெற்றிடத்துக்கே பதில் சட்ட மாஅதிபராக அவர் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார்.

அதே வேளை முன்னாள் சட்ட மாஅதிபர் சஞ்சய் ராஜரத்னத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு பேரவைக்கு இரண்டு தடவைகள் பரிந்துரைகளை முன்வைத்த போதும், அரசியலமைப்பு பேரவை அந்த வேண்டுகோளை நிராகரித்துள்ளது.

இரண்டாவது தடவையாக அரசியலமைப்பு பேரவையில் இதற்காக மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் ஜனாதிபதியின் பரிந்துரை தோற்கடிக்கப்பட்டது. இந்த பரிந்துரை யோசனைக்கு ஆதரவாக மூன்று வாக்குகளும் எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பதில் சட்டமா அதிபராக நியமிக்கப்படும் பாரிந்த ரணசிங்கவை சட்டமா அதிபராக நியமிப்பது தொடர்பிலான ஜனாதிபதியின் பரிந்துரை அரசியலமைப்பு பேரவைக்கு சமர்ப்பிக்கப் படவுள்ளது. சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரலான பாரிந்த ரணசிங்க முன்னாள் பிரதம நீதியரசரான கே.ஏ. பாரிந்த ரணசிங்கவின் புதல்வராவார்.

## எஹலியகொடை SLFP அமைப்பாளராக நியமனம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எஹலியகொடை தொகுதியின் பிரதம அமைப்பாளராக சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சாலித கருணாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வாவிடமிருந்து அமைப்பாளர் பதவிக்கான நியமனக் கடிதத்தை இவர் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவும் கலந்துகொண்டார்.





ராம் சமூக சேவைகள் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கொழும்பு வடக்கிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## ஐஸ் போதைப்பொருள் பக்கற்றுகளுடன் ஒருவர் கைது

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் 1,460 பக்கற்றுகளுடன் சந்தேக நபர் ஒருவர் (29) கைது செய்யப்பட்டதாக பண்டாரவளை பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பண்டாரவளை, மவுண்ட் பகுதியில் வசிக்கும் 33 வயது ஒருவரே, கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடம் 440 ஐஸ் போதைப்பொருள் பக்கற்றுகளும் 1,020 ஹெரோயின் போதைப்பொருள் பக்கற்றுகளும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, பண்டாரவளை, ஹப்புத்தளை, வெலிமடை, எல்ல மற்றும் ஏனைய பல பகுதிகளுக்கு விநியோகிப்பதற்காக, இந்த போதைப்பொருட்கள் கொண்டுவரப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த சந்தேக நபர் தனது சகோதரிக்கு பிறந்தநாள் பரிசு கொடுக்கும் போர்வையில் போதைப்பொருளை பார்சல் செய்து, வரைபடத்தின் உதவியுடன் விநியோகித்தபோதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இந்த பகுதிகளிலுள்ள மின்கம்பங்கள், தொலைபேசி கம்பங்கள் போன்ற இடங்களில் குழிகள் தோண்டி போதைப்பொருள் பக்கற்றுகளை புதைத்து வைப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டபோது குழிகள் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட மண்வெட்டியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணையின் பின்னர் சந்தேக நபரை பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

**கந்தானை சென். செபஸ்தியன்**

# தேவாலயத்தின் அபிவிருத்தி பணிகள்; ஜனாதிபதி நேரில் சென்று ஆராய்வு!







ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (29) பிற்பகல் கந்தானை சென். செபஸ்தியன் தேவாலயத்திற்குச் சென்று அதன் அபிவிருத்தி பணிகள் குறித்த நேரில் ஆராய்ந்தார்.

கந்தானை சென். செபஸ்தியன் தேவாலயம் பெருமளவான கிறிஸ்தவ மக்கள் வணங்கும் இடமாக காணப்படுவதோடு, இதன் திருவிழா காலத்திலும் நாடளாவிய ரீதியிலிருந்து இலட்சக்கணக்கிலான மக்கள் வருகை தருவர்.

தேவாலயத்தின் சுற்று வட்டாரத்தில் நிறையும் தண்ணீரை அருகிலுள்ள வயலுக்கு அனுப்புவதற்கான திட்டம் குறித்த கோரிக்கைகள் நீண்ட நாட்களாக முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், அதற்காக 6 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்ட ஏற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக 02 இலட்சம் ரூபாய் காசோலையை ஜனாதிபதி தேவாலயத்தின் தலைமைப் பாதிரியார் லலித் எக்ஸ்பெடிடஸிடம் வழங்கினார்.

தேவாலயத்திலிருந்து நீர்கொழும்பு வரையிலான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதோடு, அதனை மறுசீரமைத்து தருமாறு நீண்ட காலம் விடுக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி அவ்விடத்திலேயே போக்குவரத்து, பெருந்தெ ருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்ச ர் பந்துல குணவர்தனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீதியை விரைவில் மறுசீரமைத்து கொ டுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அதேபோல் நீர்க்கொழும்பு வலய கிறிஸ்தவ பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் குறித்து பாதிரியார்களிடம் கேட்டறிந்துகொண்ட ஜனாதிபதி, கிறிஸ்தவ பாடசாலைகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதனையடுத்த சென். செபஸ்தியன் தேவாலயத்திற்கு வருகை தந்திருந்த மக்களோடும் ஜனாதிபதி சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

**"கல்விக்குக் கை கொடுப்போம்"**

## வெற்றிகரமாக இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வுகள்





**பேருவளை விசேட நிருபர்**

தர்காநகர் ரூமி ஹாசிம் பவுண்டேசன் அனுசரணையில், பேருவளை, மருதானை அல் பாஸியதுல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலையின் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான இலவச மேலதிக வகுப்புக்களை நடத்தும் செயற்றிட்டத்தின் ஆரம்பவிழா, கடந்த 23 ஆம் திகதி பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி யஹ்யா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு, பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் அயராத முயற்சியில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை மருந்தக கூட்டுத்தாபன முன்னாள் தலைவரும், ரூமி ஹாசிம் பவுண்டேசன் ஸ்தாபகருமான பிரபல சமூக சேவகர் கலாநிதி ரூமி ஹாசிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில், ரூமி ஹாசிம் பவுண்டேசன் செயலாளர் ஐசூக் அஹமட், தர்காநகர் அல் ஹம்ரா தேசியப் பாடசாலை முன்னாள் அதிபர் M.Z.M நயீம் மற்றும் ஒருங்கிணைப்பாளர் ரபீஸ் ஹம்ஸா ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டதோடு பாடசாலை ஆசியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர், புத்திஜீவிகள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 17ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 24

### குறள் தரும் சிந்தனை

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு

*மாசற்றவர்களின் உறவை மறக்கவும் கூடாது; துன்பத்தில் துணை நின்றவர் நட்பைத் துறக்கவும் கூடாது.*

## மக்களுக்கான மற்றொரு நிவாரணமாக பயணிகள் பஸ் கட்டணம் குறைப்பு

மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு பொதுப்போக்குவரத்து கட்டணங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஆக குறைந்த கட்டணமாக இருக்கும் ரூ. 30.00 இன்று முதல் ரூ. 28.00 ஆகக் குறைக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ள சங்கத்தின் செயலாளர் அன்ஜன பிரியஞ்ஜித், இது 5.27 சதவீதமாக அமையும் என்றுள்ளார். இக்கட்டண குறைப்பு தொடர்பில் அரசாங்கம் இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கவிருக்கிறது.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையின் பின்புலத்தில் இப்பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அதனால் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களதும் விலைகள் பெரிதும் அதிகரித்தன. எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு சந்தையில் பெரும் தட்டுபாடு நிலவியது. எரிபொருள், சமையல் எரிவாயு என்பவற்றுக்காக நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருக்கும் நிலைக்கு மக்கள் உள்ளாகினர். பெருந்தொகையானோர் தொழில் வாய்ப்புக்களையும் கூட இழந்தனர்.

அதனால் அன்றைய ஆட்சியாளர்கள் அந்த வீழ்ச்சிக்கு மத்தியில் மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் தங்கள் பதவிகளை விட்டு விலகினர். இந்நிலையில் நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கும் மக்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக் கொடுப்பதற்கும் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத சூழ்நிலை ஏற்பட்டது.

அந்த சூழலில் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் ஆரம்பித்தார். அதன் பிரதிபலனாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாட்டில் நிலவிய அசௌகரியங்களும் நெருக்கடிகளும் கட்டம் கட்டமாக குறுகிய காலம் முதல் நீங்கத் தொடங்கின. அதன் ஊடாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாட்டில் நிலவிய அசௌகரியங்களும் பாதிப்புக்களும் நீங்கலாகின. பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற்று நாடு மறுமலர்ச்சி பாதையில் நம்பிக்கையுடன் முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பொருளாதார மீட்சியின் பிரதிபலன்களை மக்களுக்கு நிவாரணங்களாகவும் சலுகைகளாகவும் சம்பள உயர்வுகளாகவும் அவ்வப்போது பெற்றுக்கொடுக்கின்றது. இந்நடவடிக்கைகளின் ஊடாக மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதை அரசாங்கம் தொடர்ந்தும் உறுதிப்படுத்தி வருகின்றது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி சிரமங்களுக்கு முகம் கொடுத்த போதிலும் அந்த நெருக்கடி காலத்தில் பெரும்பாலான மக்கள் பொறுமை காத்தார்கள். அதனால் பொருளாதார ரீதியில் மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பயணிப்பதன் ஊடாக நாடு அடைந்து கொள்வதன் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

அந்த வகையில் எரிபொருள் விலைத் திருத்தத்தின் கீழ் கடந்த இரண்டொரு மாதங்களாக டீசல் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பின்புலத்தில் தற்போது பஸ் கட்டணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. இது பயணிகளுக்கு நிவாரணமாகவும் ஆறுதலாகவும் அமையும்.

அதேநேரம் பல பொருளாதார நலத்திட்டங்கள் ஏற்கனவே மக்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ளன. அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு திட்டம் அறிமுகப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழான கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காலகட்டத்தில் நாட்டில் பெரிதும் அதிகரித்து காணப்பட்ட எரிபொருள் மற்றும் எரிவாயு உட்பட பல பொருட்களின் விலைகள் கட்டம் கட்டமாக குறைக்கப்பட்டுள்ளன. அரசாங்க ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டதோடு அதன் முதற்பகுதி கடந்த ஜனவரி மாதமே பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு நாடு அடைந்து கொள்ளும் பொருளாதார முன்னேற்றத்தின் நலன்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தான் பயணிகள் பஸ் போக்குவரத்து கட்டணம் தற்போது குறைக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையை பயணிகள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

ஆகவே மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டுவரும் அரசாங்கம் தற்போதைய பஸ் கட்டணக் குறைப்போடு மாத்திரமல்லாது தற்போதைய கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் மூலம் நாடு அடைந்து கொள்ளும் பொருளாதாரப் பிரதிபலன்களையும் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க பின்நிற்காது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்பதில் மக்கள் உறுதியாக உள்ளனர் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# எமது நாட்டின் இன்றைய தருணத்தில் ஐ.எம்.எப் தவிர மாற்றுவழி இல்லை

**ஜனாதிபதி நாட்டிற்கு விடுத்துள்ள அறிக்கை, நாளை பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ள விடயங்கள், தேசிய ரீதியில் முக்கியமான பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வுகள் மற்றும் தற்போதைய நிலையில் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மக்களின் பொறுப்பு என்ன? போன்ற விடயங்கள் குறித்து ஜனாதிபதி சட்டத்தரணி யு. ஆர். டி சில்வாவுடனான கலந்துரையாடல்.**



## ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர்.டி சில்வா

**பரந்த முதலீடுகளுக்கு நாடு திறக்கப்பட வேண்டும்; விற்பனை செய்வதற்குப் பதிலாக நீண்ட கால குத்தகைக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும்**

**கே: கடந்த சில ஆண்டுகளாக கடனை செலுத்தத் தவறியதாலும், கையிருப்பு இல்லாததாலும் நமது நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியது. அண்மையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, இது தொடர்பில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டார். அன்றைய மற்றும் இன்றைய நிலைமை குறித்து உங்கள் கருத்து என்ன?**

*பதில்:* உண்மையில், 'வங்குரோத்து' என்ற வார்த்தை மிகவும் பொருத்தமான வார்த்தை அல்ல. ஏப்ரல் 2022 இல், மத்திய வங்கியின் ஆளுநர், அந்த நேரத்தில் நாடு வாங்கிய கடன்களை செலுத்துவதற்கு போதுமான திறன் நம் நாட்டிற்கு இல்லை என்றே குறிப்பிட்டார். அந்த அறிக்கையால்தான் நம் நாடு வங்குரோத்து அடைந்து விட்டது என்ற எண்ணம் வந்தது. இந்த வார்த்தை உண்மையில் பொருத்தமான வார்த்தை அல்ல, இதன் காரணமாக நம் நாட்டின் பாதகமான நிலை மேலும் அதிகரித்தது. உண்மையில், நாட்டின் வருமானம் ஏறக்குறைய முற்றிலுமாக நின்று போனதே இந்த நிலைக்குக் காரணம்.

அது வங்குரோத்து என அழைக்கப்பட்டதால் நாட்டின் இமேஜ் மேலும் பாதிக்கப்பட்டது. உண்மையில், இன்று மேலோட்டமாகப் பார்ப்பவர்கள், கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைத் தோல்வியடையச் செய்துவிட்டார் என்று குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால், அது நியாயமான குற்றச்சாட்டு அல்ல. 1977 இல், நாட்டில் ஒரு புதிய பொருளாதார முறை தொடங்கியது. அதன் மூலம் அதுவரை மூடப்பட்டிருந்த பொருளாதாரம் முழுமையாகத் திறக்கப்பட்டது. நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நாடாக நாம் கடனில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்கி, வாங்கிய கடனை அடைக்கும் முறைக்குப் பதிலாக, வந்த ஆட்சியாளர்கள் அனைவரும் கடன் வாங்கி, சாப்பிட்டு, குடித்துவிட்டு, மீண்டும் கடன் வாங்கும் முறையை அமுல்படுத்தினர். அதன் உச்சகட்டமாக 2022 இல் நாம் பெரும் கடன் வலையில் சிக்கித் தவித்தோம். கடனைப் பெற்றே வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறைகள் நிரப்பப்பட்டன. அவை எம் மீதான நேசத்தால் அல்ல. அதிக வட்டி கிடைக்கும் என்பதால், உலக கடன் வழங்கும் நிறுவனங்கள் தொடர்ந்து எங்களுக்கு கடன் கொடுத்தன. நாங்களும் எப்படியோ 2022 வரை கடன் தவணையைச் செலுத்தினோம்.

கொவிட் தொற்று மற்றும் ஈஸ்டர் தாக்குதல் போன்ற நெருக்கடிகளால், இந்த நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை தடைப்பட்டது. உலகில் நமது தொழிலாளர்கள் இந்த நாட்டுக்கு அனுப்பும் பணத்தின் அளவு குறைந்தது. பொருளாதார ரீதியில் பெரிய பொறிக்குள் விழுந்து விட்டோம் என்பதே இறுதி முடிவு. மேலும் இந்தக் காலகட்டத்தில், ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டன. இவற்றின் விளைவு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமையாகும்.

**கே: பொருளாதார நெருக்கடியின் விளைவாக, அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டது, இல்லையா?**

*பதில்:* ஆம். இதன் விளைவாக நாட்டில் ஒரு ஒழுங்கமைக்கப்படாத, ஆனால் சக்திவாய்ந்த மக்கள் எழுச்சி ஏற்பட்டது. அந்த எழுச்சியின் விளைவாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முதலில் பதவியில் இருந்து விலக நேரிட்டது. அதனையடுத்து ஜனாதிபதி கோட்டாபய தனது பதவியை இராஜினாமா செய்ய நேரிட்டது. இருப்பினும், போராட்டத்தின் பக்கத்திலிருந்து ஒரு மாற்றுத் தலைவர் உருவாகவில்லை. ஆனால், அந்த நேரத்தில் நாடு பெரும் நெருக்கடியில் இருந்தது. அரசின் இருப்புக்கு பெரும் சவால் ஏற்பட்டது. அந்த நேரத்தில்தான் ரணில் விக்கிரமசிங்க முதலில் பிரதமர் பதவியை ஏற்றார். பின்னர் அவர் ஜனாதிபதியாக பதவியேற்றார். உண்மையில் அவர் அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட அரசியல்வாதி. அவர் நாட்டில் ஆட்சியை ஏற்ற பின்னர் நெருக்கடியை முறையாகத் தீர்க்க ஒரு அமைப்பை வகுத்தார்.

**கே: அவ்வாறு வந்த தீர்வுகள் குறித்து சமூகத்தில் பல விவாதங்கள் எழுந்தன அல்லவா?**

*பதில்:* ஆரம்பத்தில், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் அந்நிலைமை ஏற்பட்டது. அரசுக்கு வருமானம் பெற்றுத் தரும் வரி முறைகளை நீக்கப்பட்டன. அதற்கு அன்றைய நிதி அமைச்சின் அதிகாரிகளே பொறுப்பு. சீனிக்கான வரி நீக்கம் போன்றவற்றால், அரசுக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தில் பெரும் பகுதியை அரசு இழந்தது. இந்நிலையில், வரிக்கொள்கையை முறையாக நிறைவேற்ற வேண்டும் என நிதியமைச்சு கோரிக்கை விடுத்தது. அன்று வரிக்கொள்கைகளை முறையாக அமுல்படுத்தியிருந்தால், சாதாரண மக்கள் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க மாட்டார்கள்.

இன்றும் வரி ஏய்ப்பு செய்பவர்கள் இருக்கிறார்கள். இது போன்றவர்களைக் கண்டுபிடித்து வரி வசூலிப்பதன் மூலம் மக்கள் சிரமத்தைத் தவிர்க்கலாம். தலைவலிக்கு தலையணைகளை மாற்றும் முறையை இனியும் மேற்கொள்ள வேண்டியதில்லை. இனி செய்ய வேண்டியது புதிய நெருக்கடிகளுக்கு நிரந்தரத் தீர்வை உருவாக்குவதுதான். ஜனாதிபதியின் உரையில் கூட அது பற்றிய விடயம் இருந்தது. மீண்டும் ஐ.எம்.எப் இடம் செல்லாதிருக்க வேண்டுமானால் நாட்டில் புதிய உற்பத்தி பொருளாதார முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவரும் நம்புகிறார்.

**இப்போது செய்ய வேண்டியதெல்லாம் நெருக்கடிக்கு நிரந்தர தீர்வை உருவாக்குவதுதான்; நாட்டில் புதிய உற்பத்திப் பொருளாதார முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.**

**கே: கடன் நெருக்கடி முகாமைத்துவத்தை குறை கூறும் தரப்பினர், அப்படி இல்லை என்றால் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார்களில்லை அல்லவா?**

*பதில்:* நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மாற்றுவழி இல்லை. எனவே இத்தருணத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதனால் இச்சந்தர்ப்பத்தில் புதிய பொருளாதார சட்டமூலம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும், அரச வளங்களை மீண்டும் விற்கும் விருப்பத்திற்குப் பதிலாக, பரந்த முதலீடுகளுக்கு நாடு திறக்கப்பட வேண்டும். விற்பதற்குப் பதிலாக, நீண்ட கால குத்தகைக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய தொலைநோக்குப் பார்வை கொண்ட கொள்கைகளால் நாட்டை இயல்புநிலைக்குக் கொண்டு வர முடியும். இப்போது செய்ய வேண்டியது குறுகிய கால அதிகார திட்டங்கள் அல்ல, மாறாக நாட்டைப் பற்றி சிந்தித்து செயல்படக்கூடிய அமைப்புக்கு அனைவரும் திரும்ப வேண்டும். இங்கு எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி, அரச மற்றும் அரச அதிகாரிகளுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது.

**கே: அரச அதிகாரிகளுக்கு எவ்வகையான பொறுப்புள்ளது?**

*பதில்:* பெரும்பாலான அரச அதிகாரிகள் பொறுப்புகளை உணர்ந்து பணியாற்றுகிறார்கள். ஒரு சிலரே தங்கள் பொறுப்புகளை புறக்கணிக்கிறார்கள். அவர்களுக்கும் பாரிய பொறுப்பு உள்ளது.

**கே: ஆனால், தற்போது, மாற்றுக்கருத்துடைய குழுக்கள் கடன் முன்மொழிவுகள் குறித்து பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றன. இந்த யோசனைகள் எவ்வளவு யதார்த்தமானவை?**

*பதில்:* அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யார் ஜனாதிபதியாக வந்தாலும் எமது பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க வேறு வழியில்லை. எத்தனை பெருமையான கதைகள் சொன்னாலும் ஐ.எம்.எப் உடனான கலந்துரையாடலில் பெரிய வித்தியாசம் இருக்காது. இது பரிசோதனைக்கான நேரமல்ல . ஐ.எம்.எப் உடனான செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவு தூரம் முன்னேறியுள்ளோம். இப்போது திரும்பிச் செல்ல முடியாது, பொருத்தமான மாற்று வழியில்லை. நமது உற்பத்தி செயல்முறையை வலுப்படுத்தும் அதே வேளையில், ஒவ்வொருவரும் தங்களை நாட்டுக்காக உண்மையாக அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும். மோசடி, ஊழல், இலஞ்சம் போன்ற தவறான வழிகள் நிறுத்தப்பட வேண்டும். ஐ.எம்.எப் குறித்த உத்தேச திருத்தம் தொடர்பாக 2 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அறிவிக்கவுள்ளதுடன், இந்த அறிவிப்பின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்மதத்தைப் பெறுவதற்கான யோசனை முன்வைக்கப்படவுள்ளது.

**கே: இந்தப் பிரேரணைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் பதில் என்னவாக இருக்க முடியும்?**

*பதில்:* நான் ஐ.எம்.எப் பரிந்துரைகள் 100 சதவீதம் நல்லவை, வெற்றிகரமானவை என்று சொல்ல அவசரப்படவில்லை. எவ்வாறாயினும், 100 சதவீதம் நல்லது என்று யாராவது நினைத்தால், அது ஒரு பெரிய தவறு என்று நான் நினைக்கிறேன். ஜனாதிபதியின் உரை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டாலும் அதனால் ஐ.எம். எப் பரிந்துரைகளுக்கு எந்தத் தீங்கும் இல்லை.

ஆனால், அவ்வாறு நிகழ்ந்தால் எமது நாடு சர்வதேச சமூகத்தின் முன் ஒருமித்த கருத்தில்லாத நாடாக சிதைந்து விடும். மேலும் சிறுசிறு குறைகள் இருந்தாலும், தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தை சந்தர்ப்பவாதிகள் மட்டுமே எதிர்க்கின்றனர். இன்று, இரண்டு முக்கிய எதிர்க்கட்சிகளான தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஐ.எம்.எப் யோசனையை எதிர்ப்பதாகக் கூறவில்லை. ஆனால் ஜனாதிபதியின் நடவடிக்கையை அவர்கள் முற்றாக ஏற்றுக்கொள்கிறார்கள் என்றும் அர்த்தமல்ல. அவர்கள் அதிலுள்ள தொழில்நுட்ப விடயங்களைப் பற்றியே குறிப்பிடுகிறார்கள். எதிர்காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் வந்தாலும் சரி, ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கம் வந்தாலும் சரி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நடவடிக்கையை அவர்களால் முற்றாகப் புறக்கணிக்க முடியாது.

உதித்த குணவர்தன...
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# பா.ஜ.கவுக்கு பாடம் புகட்ட திட்டமிடும் இந்தியா கூட்டணி!

பாஜகவுக்கு பாடம் புகட்டும் வகையில் ‘இந்தியா’ கூட்டணியின் சார்பில் துணை சபாநாயகர் வேட்பாளராக அவதேஷ் பிரசாத்தை களமிறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்ற கூட்டத் தொடர் முடிய 3 நாட்களே உள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மக்களவை துணை சபாநாயகரை எதிர்கட்சிகளுக்கு ஒதுக்க வேண்டும் என்று ‘இந்தியா’ கூட்டணி தலைவர்கள் கூறி வந்த நிலையில், அதற்கு பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்கள் ஒத்துவரவில்லை.

அதனால் மக்களவை சபாநாயகர் வேட்பாளராக தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் பாஜக எம்பியான ஓம் பிர்லாவும், ‘இந்தியா’ கூட்டணி சார்பில் காங்கிரஸ் கட்சியின் கொடிக்குன்னில் சுரேஷும் போட்டியிட்டனர். மக்களவையில் நடந்த குரல் வாக்கெடுப்பின் மூலம் இரண்டாவது முறையாக ஓம் பிர்லா, 18வது மக்களவையின் புதிய சபாநாயகராக தேர்வு செய்யப்பட்டார்.

ஆனால் துணை சபாநாயகர் தேர்வு குறித்து எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படாத நிலையில், தற்போது இந்த பதவி குறித்த விவாதங்கள் தொடங்கிவிட்டன. கடந்த 2004, 2009 ஆகிய காலங்கட்டங்களில் பாஜக எதிர்கட்சியாக இருந்த போது, அக்கட்சிக்கு துணை சபாநாயகர் பதவி ஒதுக்கப்பட்டது. 2014 இல் அதிமுகவுக்கு ஒதுக்கப்பட்டது. 2019ல் துணை சபாநாயகரை நியமனம் செய்யாமலேயே ஆட்சியை நடத்தி முடித்தனர். ஆனால் தற்போதும் துணை சபாநாயகர் நியமனம் குறித்தும் ஆளுங்கட்சி அமைதியாக இருப்பதால், எதிர்கட்சிகள் இவ்விடயத்தை கடுமையாக எடுத்துக் கொண்டுள்ளன.

# மானுடவியல்



170

திருநாவுக்கரசு நாயனாரும் பிள்ளையாருக்கு எதிரே வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி, நல்வரவு வினவி மகிழ்ந்தார்கள். அப்போது பிள்ளையார் அப்பமூர்த்தியை நோக்கி, "அப்பரே! நீர் வருநாளிலே திருவாரூரிலே நிகழ்ந்த சிறப்பைச் சொல்லும்" என்று சொல்ல; அப்ப மூர்த்தி திருவாதிரைச் சிறப்பைத் திருப் பதிகத்தினாலே சொல்லியருளினார். பிள்ளையார் அது கேட்டு, "நான் திருவா ரூருக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய் துகொண்டு மீண்டும் இவ்விடத்திற்கு வந்து உம்முடன் இருப்பேன்" என்று சொல்லியரு ளினார். அப்பமூர்த்தி திருப்புகலூருக்குப் போக, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சென்று, திருவிற்குடி வீரட்டத்தை வணங்கிக் கொண்டு திருவாரூரை அடைந்து, வன் மீகநாதரை வணங்கித் திருப்பதிகம் பாடி, அப்பதியில் எழுந்தருளி யிருந்தார். அங்குள்ள அரநெறியென்னும் ஆலயத்தையும் காலந்தோறும் பணிந்தார். அங்கெழுந்தருளியிருக்குநாளிலே, திருவலிவலம், திருக்கோளிலி முதலிய ஸ் தலங்களுக்கும் போய், சுவாமி தரிசனஞ்செய்து கொண்டு மீண்டும் அத்திருவா ரூரில் வந்து இருந்தார். சில நாளாயின பின், திருநாவுக்க ரசு நாயனாரைக் காணுதற்கு விரும்பி, திருவாருரை நீங்கி, திருப்பனையூரிற்சென்று, சுவாமி தரிசனஞ்செய்து கொண்டு, திருப்புகலூருக்குச் சமீபித்து அப்பதியினின்று வந்து தம்மை எதிர்கொண்ட அப்பமூர்த்தி, முருகநாயனார் முதலாகிய திருத்தொண்டர்க ளோடும் போய் சுவாமி தரிச னஞ்செய்து கொண்டு, முருக நாயனாருடைய திருமடத்தை அடைந்து, அங்கே இருந்தரு ளினார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.




# கீரிமலை ஆதீனம்–நகுலேஸ்வரப் பெருமான் ஆலய கண்டாமணி

எமது சைவ சமயத்தில் ஆலய வழிபாட்டில் மணியினுடைய வகிபாகம் சிறப்பானது. பூஜை ஆரம்பமாகும் சமயத்தில் கைமணியில் நால்வேதங்கள், தேவர்கள் பூஜை செய்யப்பெற்று ஏனைய கிரியைகள் ஆரம்பமாகும். அது போலவே ஆலய காண்டாமணியின் வகிபாகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. தெய்வீக தன்மையை மிளிர செய்வதாகவும், ஒருவகையில் ஆலய சூழலில் இருப்பவர்களின் இறை உணர்வினை தூண்டி பேணச்செய்வதாகவும், நேரக்கணிப்பீட்டினை தருவதாகவும் பல்வேறு வகையான வகிபாகத்தினை ஆலய காண்டாமணி வகிக்கிறது. இப் பூவுலகை விட்டு சிவனோடு இரண்டறக் கலந்தருக்கும் எமது பெரு மதிற்பிற்குரிய இராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் முதல் முறையாக 1989 ஆண்டு இலண்டன் வந்து கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்திற்கு இலண்டனில் காண்டாமணி ஒன்று செய்யவேண்டும் என்ற திருப்பணியை ஆரம்பித்து வைத்தார். பல வித காரணங்களினால் 35 ஆண்டுகளுக்கு பின்னர் குருக்கள் ஐயாவுடைய சென்ற ஆண்டு மறைவுக்கு பின்னர் இவ் 2024ம் ஆண்டு நிறைவேறியது. 43 அங்குல விட்டம், 34 அங்குலஉயரம் , 750 கிலோ நிறையான இவ் அழகான மணி நாற்பதாயிரம் பிரித்தானியா பவுண்கள் (£ 40,000) இலங்கை பணம் 160 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டுள்ளது.

மிக விரைவில் இவ் காண்டாமணி கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நிறுவப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருளு ம் குருவருளும் ஒருசேர கிடைத்துள்ளது. மிகக்குறுகிய 6 மாத காலத்தில் உலகளாவிய ரீதியில் நன்கொடை வழங்கி இத் திருப்பணியை நிறைவு செய்த அன்பர்கள் யாபேருக்கும் நகுலேஸ்வர பெருமானின் பூரண திருவருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கிறோம். இவ் திருப்பணியை ஆரம்பித்து மிகவும் குறுகிய காலத்தில் நிறைவு செய்த பிரித்தானியா கீரிமலை சிவன் கோயில் அறக்கட்டளை நிர்வாகத்தினரை பாராட்டி மகிழ்கின்றோம். கடந்த வியாழக்கிழமை 27.06.2024, மணியின் அனைத்து வேலைகளும் நிறைவுபெற்று, லண்டனில் மணி வார்க்கப்பட்ட தொழிலகத்தில் திருக்கைங்கரியம் புரிந்த சைவப் பெரியோர்கள், தொழிலகத்தின் பொறுப்பாளர் உள்ளிட்ட பெருந்தகையோர் சூழ கயிலைக் குருமணி நாகநாதசிவம் சிவாச்சார்யார் தலைமையில் விசேட பூஜை பிரார்த்தனை நடைபெற்றது. விரைவில் காண்டாமணி கோபுர கும்பாபிஷேகம் நடைபெற திருவருளும் குருவருளும் ஒருசேர பிரார்த்திப்போம். அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்.









தகவல் தொகுப்பு: சிவாகம கலாநிதி
**சிவஸ்ரீ. கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர்,
அகில இலங்கை இந்து கலாச்சார பேரவை

# ஈழத்தில் சிவ வழிபாட்டின் மகிமை

சைவ சமயம் சிவநெறி எனவும் அழைக்கப்படுகின்றது. முழு முதற் கடவுளாக விளங்கும் சைவ சமயிகளின் சிவம் என்ற சொல் பல நூற்றாண்டுகளாக மாறி சைவம் என்று மாறியதாக கூறப்படுகின்றது. இன்றைய இந்து மதத்தின் பிரிவாக தான் சிவநெறி என அழைக்கப்படும் சைவ சமயத்தின் பிரிவாக அமைந்துள்ளது. இமய மலைச் சாரலில் வாழ்ந்த பழங்குடியினர் ஆக கருதப்படும் மலைக்குடி வேடுவர்களின் நீத்தார் வழிபாடே சிவ வழிபாடாக வளர்ந்திருக்கின்றது என்று கூறலாம். வட இந்தியாவில் காணப்படும் இமய மலையானது காலத்தால் பிந்தியது எனவே மலை தெய்வ வழிபாடே சிவ வழிபாடாக வளர்ந்துள்ளது. சிவனை உருவகிப்பதில் சாம்பல் பூசுதல், புலித்தோலாடை அணிதல், மானையும் மழுவையும் கையில் வைத்திருத்தல், எலும்புகளை அணிதல் போன்ற பல்வேறு விடயங்களால் 'சிவனே பெரும் கடவுள் அவனின்றி வேறொன்றும் இல்லை' எனலாம். சிவனுக்கு நாகங்கள் இருப்பதால் அவர் இன்னும் ஒரு பெயரால் அழைக்கப்படுகிறார். அது நாகரின் தெய்வம் ஆகும்.

அத்தோடு குறிப்பிடுவோமானால் இவர், பழமை தெய்வமாவார். அதனால் இவர் பழமையின் வடிவமாகவும் கருதப்படுகின்றார்.

அடுத்ததாக சிந்துவெளி நாகரீகத்தின் சிவ வழிபாட்டின் மகிமையை பற்றி பார்ப்போமாக இருந்தால் முதலில் சிந்துவெளி நாகரீகம் 2500 முதல் 2000 வரை நிலவியதாக கருதப்படுகிறது.

அந்த காலத்திலும் கூட சிவ வழிபாடு என்பது நிலவியுள்ளது என எம்மால் குறிப்பிட முடியும். மொகெஞ்சதாரோ , ஹரப்பா போன்ற சிந்துவெளி நகர் பகுதிகளில் சிவலிங்கத்தினை ஒத்த பல கற்கள் கிடைத்துள்ளன. இரு கொம்புகளுடன் விலங்குகள் சூழ அமர்ந்திருக்கும் மனித உருவ முத்திரை ஈசனின் பசுபதி தோற்றத்தினை குறிக்கிறது. இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக சிவ வழிபாட்டுக்கும் அத்தோடு தொல்பொருள் மூலாதாரமாக காணப்படுகிறது. அடுத்ததாக இக் கட்டுரையில் பிரதானமாக பார்க்க வேண்டியதுதான் ஈழத்தில் சிவமயத்தின் மகிமை என்பதாகும். அதன் முதல் கட்டமாக ஈழம் எனப்படுவது இலங்கை. இதுவே ஈழம் ஆனது. இது மிகவும் ரம்மியமான மற்றும் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது. அதாவது கடலின்றி ஈழம் இல்லை என்று தான் கூற வேண்டும். உதாரணமாக நாம் சிவனின் பாடலை கூறுவோமாக இருந்தால் அதாவது 'ஈழவள நாடு எங்கள் சிவ பூமி லிங்கேஸ்வரர் ஆண்ட சிவ பூமி' என்ற பாடலின் மூலம் நான் கூற முற்படுவது என்னவென்றால் ஈழ நாடு என்பது வளம் மிக்க நாடு எனவும் லிங்கேஸ்வரர் என குறிப்பிடுவது இலங்கையை ஆண்ட தமிழ் மன்னனான ராவணனை தான் இவ்வாறு இப்பாடலில் குறிப்பிடுகின்றனர். ராவணன் என்பவன் ஈழ வள நாட்டை ஆட்சி செய்த தமிழ் மன்னன் ஆவான். இவன் ஒரு அரக்க குலத்தினை சேர்ந்தவன். இவன் ஒரு மாபெரும் சிவ பக்தன் இவன் செய்த கடும் சிவ வழிபாட்டால் ராவணனுக்கு பல சிவனின் சக்திகள் கிடைக்கப்பெற்றன.



இது மட்டுமின்றி பத்தாம் நூற்றாண்டின் நாலாம் காற்பகுதி தொடக்கம் சுமார் 70 ஆண்டு காலம் ஈழத்தில் சோழர் ஆட்சியானது நிலவியது. ஈழ வள நாட்டில் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய நகரங்களை ஆட்சி செய்தனர். வானவன் மாதேவி ஈஸ்வரம் என்பது இலங்கையின் பண்டைய தலைநகரங்களில் ஒன்றாகிய பொலனறுவையில் சோழர்களால் கட்டப்பட்ட ஒரு சிவன் கோயில் ஆகும். 1070 ஆம் ஆண்டு வரை இந்த நகரைத் தலைநகரமாக கொண்டு ஆட்சி நடத்திய சோழர்கள் அமைத்த கோயில்களுள் முழுமையாக எஞ்சியுள்ளது இதுவேயாகும்.

இந்த சோழர்கள் அமைத்த சிவன் கோயிலில் சிவராத்திரி தினத்தன்று சிவராத்திரி விழாவும் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சோழ பரம்பரையை சேர்ந்த மன்னர்களும் பெரும் சிவ பக்தர்கள் என எம்மால் கூற முடியும். இந்த பொலன்னறுவை சிவன் கோயில் ஆனது சோழர் காலத் திராவிடக் கட்டிடக்கலைப் பாணியை சேர்ந்ததாக காணப்படுகிறது. இந்த பொலன்னறுவை சிவன் கோயில் கருங்கற்களால் கட்டப்பட்டது.

இது ஏனைய கோயில்களை போல் அல்லாது அளவில் சிறியதாகக் காணப்படுகின்றது. கருவறையையும் அது முன்னாள் ஒரு மண்டபத்தையும் கொண்ட இக்கோயிலின் கருவறையின் வெளிப்புறம் 20 அடி 6 அங்குல அளவு கொண்ட சதுர வடிவமானது. உட்புறம் 9 அடி 4 அங்குல சதுரம் ஆகும்.

இதிலிருந்து அதன் கருவறைச் சுவர் 5 அடி 6 அங்குல தடிப்புக் கொண்டது என அறிய முடிகிறது.இதன் முன் மண்டபம் 16 அடி நீளமும் 9 அடி 4 அங்குலமும் அகலமும் கொண்டது. எனவே இது சோழர்களின் சிறந்த கட்டுமானப்பணிகளில் ஒன்றாக பொலனறுவையில் இன்னும் காணப்படுகிறது.

தாயுமானவர் ஆன திருமூலர் கூட திருமந்திரத்தில் ஈழம் ஒரு சிவபூமி எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பொழுது சிவலிங்கம் என்றால் என்ன? சிவலிங்கம் எனப்படுவது முழு முதற் கடவுள் சிவனை குறிக்கும் ஒரு வடிவமாகும்.

சிவனை இந்துக்கள் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளிலும் வழிபடுகின்றனர்.

இவற்றுள் சிவலிங்கம் அருவுருவ நிலையே ஆகும். இந்த வகையில் லிங்க வழிப்பாட்டில் மிகவும் பழமையானது. சிந்துவெளி நாகரீகத்தின் காலப்பகுதியினை குறிப்பிட முடியும். எனவே இவற்றுள் லிங்கம் பல வகைப்படும். அவையாவன. முகலிங்கம், சகஸ்ரலிங்கம், தாரா லிங்கம் சுயம்பு லிங்கம் என்பனவாகும் இறுதியாக குறிப்பிட்ட சுயம்பு லிங்கமானது இருளில் தான் வீற்றிருக்கும் இது தானாக தோன்றியது.



எழுத்தாக்கம்:– **லி.சிவகஜன்**

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

*20136. சிவபெருமானை வழிபடும் சைவ சமயத்தில், சிவபெருமானின் புகழையும் சிவனடியார்களின் மகிமைகளையும் போற்றும் நூல்கள் என்னவென்று போற்றப்படுகின்றன?*
**பன்னிரு திருமுறைகள்**

*20137. பன்னிரு திருமுறைகள் எவை?*
**தேவாரம், திருவாசகம் முதல் பெரிய புராணம் வரை உள்ள நூல்கள் பன்னிரு திருமுறைகள் என்று போற்றப்படுகின்றன.**

*20138.அதேபோல் முருகப் பெருமானுக்கும் உள்ள நூல்கள் எவை?*
**'முருகவேள் பன்னிரு திருமுறைகள்'**

*20139. சிவனைப்போலவே அவரது திருமகனின் புகழைப் பாடும் நூல்களைத் தொகுத்து திருமுறைகளாக்க வேண்டும் என்று விரும்பிய யார்?*
**த ணி ை க ம ணி செங்கல்வராய பிள்ளை என்பவர்தான்.**

*20140. அதில் முதல் திருமுறை என்ன?*
**திருப்பரங்குன்றம் திருப்புகழ் என்னும் நூல்**

*20141. இரண்டாம் திருமுறை என்ன?*
**திருச்செந்தூர் திருப்புகழ் என்னும் நூல்**

*20142. மூன்றாம் திருமுறை என்ன?*
**திருவாவினன்குடி திருப்புகழ் என்னும் நூல்**

*20143. நான்காம் திருமுறை என்ன?*
**சுவாமிமலை திருப்புகழ் என்னும் நூல்**

*20144. ஐந்தாம் திருமுறை என்ன?*
**குன்றுதோறாடல் திருப்புகழ் என்னும் நூல்**

*20145. ஆறாம் திருமுறை என்ன?*
**பழமுதிர்சோலை திருப்புகழ் என்னும் நூல்**

*20146. ஏழாம் திருமுறை என்ன?*
**பொதுத் திருப்புகழ் பாடல்கள் என்னும் நூல் என்னும் நூற்கள்**



*20147 . எட்டாம் திருமுறை என்ன?*
**கந்தரலங்காரம் கந்தரந்தாதி**

*20148 . ஒன்ப தாம் திருமுறை என்ன?*
**திருவகுப்பு என்னும் நூல்**

*20149 .பத்தாம் திருமுறை என்ன?*
**கந்தரனுபூதி என்னும் நூல்**

*20150 . நக்கீரர், பரிபாடல் ஆசிரியர்கள், கல்லாடர்முதலானவர்கள் முருகனைப் பற்றி பாடிய பாடல்கள் எத்தனையாம் திருமுறை?*
**பதினோராம் திருமுறை**

*20151. 12ம் திருமுறை எது?*
**முருகனடியார்கள் வரலாறு என்ற சேய்த்தொண்டர் புராணம் என்ற நூல்**

*20152. இதனை எழுதியவர் யார்?*
**சொக்கலிங்கனார்**

*20153. சொக்கலிங்கனாரும் முருகன் அருளால் முருகப்பெருமானின் 12ம் திருமுறையை எவ்வளவு காலத்தில் எழுதிக்கொடுத்தார்?*
**ஒரே ஆண்டில்**

*20154. சிவனின் புகழ் பாடும் சைவத்திருமுறைகளை எத்தனை?*
**12 திருமுறைகள்**

*20155. அது போல கந்தனின் புகழ் பாடும் திருமுறைகள் எத்தனை?*
**12 திருமுறைகள்**





களுத்துறை நகரில் அமைந்திருக்கும் வேலாபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சு வாமி கோவில் வருடாந்த அலங்கார உற்சவ தேர்பவனி விழாவில் இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்,

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்

# மன்னார் மடு வீதியில் விபத்து ஒருவர் மரணம்

( மன்னார் குறூப் நிருபர் )

மடு பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள இரண்டாம் கட்டைப் பகுதியில் சனிக்கிழமை (29) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன் மற்றைய நபர் காயங்களுடன் முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மடு ஜோதிநகர் இரண்டாம் கட்டை பாலத்தின் அருகில் விபத்துக்குள்ளாகியதில் 35 வயதுடைய நபர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மன்னார் பெரியகமம் பிரதேசத்தில் வசித்து வரும் இளம் குடும்பஸ்தர் என தெரிய வருகிறது. காயமடைந்தவர் முருங்கன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்த நபர் பண்டிவிரிச்சான் பகுதியைச் சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# விபத்தில் படுகாயமுற்றவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மந்திகைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த இளங்குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பத்தினியம்மன் கோவிலடி, துன்னாலை வடக்கைச் சேர்ந்த நாகராசா பாலச்சந்திரன் (வயது 39) என்பவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை 25ஆம் திகதி மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது. இதில் படுகாயங்களுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந் நிலையில் மீண்டும் அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தார். சனிக்கிழமை(29) பிற்பகல் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# இன்றைய பலன்கள்

(01.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
உங்கள் முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான போக்கு காணப்படும். நண்பர்கள் உதவியுடன் சில காரியங்களில் தீவிரமாக செயல்படுவீர்கள்.

**ரிஷபம் :**
செய்யும் காரியங்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். முக்கிய நண்பர் ஒருவர் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பார்.

**மிதுனம்:**
காரியங்கள் பலவற்றில் வெற்றியைப் பெறுவீர்கள். சிலவற்றில் தடைகள் ஏற்பட்டாலும் அவற்றை தகுந்த நண்பர்களின் உதவியுடன் தகர்த்து எறிவீர்கள்.

**கடகம்:**
தீவிரமான முயற்சிகளோடு செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றியடைவீர்கள். என்றாலும் மனதில் இனம் புரியாது குழப்பமும் தடுமாற்றமும் ஏற்படும்.

**சிம்மம்:**
முக்கியமான சில செயல்களை செய்து நன்மையடைவீர்கள். என்றாலும் சில காரியங்களில் தொல்லைகள் உண்டாகக்கூடும்.

**கன்னி:**
மனதில் சோர்வும் தளர்ச்சியும் உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் வரவேண்டிய பணம் திட்டமிட்டபடி கைக்கு கிடைக்கும்.

**துலாம்:**
காரியங்களில் சில சில தடைகள் உண்டாகும். கையெழுத்திடுவதையும் முக்கிய பயணங்களையும் தள்ளி வைப்பது நன்மை தரும் .

**விருச்சிகம்:**
எதிர்பார்த்த பண வரவு இருந்தாலும் வரவுக்கு முன்பாகவே செலவு காத்திருக்கும். வாக்குறுதிகளில் கவனம் தேவை.

**தனுசு:**
அனைத்து காரியங்களிலும் திறமையோடு தீவிர முயற்சியோடும் ஈடுபட்டு நல்ல பலன்களை அடைவீர்கள். தளர்ச்சி அடைந்த செயல்களில் தக்க நண்பர்களின் துணை கொண்டு முன்னேறுவீர்கள்.

**மகரம்:**
ஒவ்வொரு செயல்களிலும் புத்திசாலித்தனமாக நீங்கள் எடுக்க முடிவுகள் உங்களுக்கு வெற்றியை தேடி தரும். சில வேலைகளை அவசரமாக செய்து முடிக்க வேண்டிய கட்டாயம் வரலாம்.

**கும்பம்:**
அவசியமான செயல்களில் தீவிர முயற்சியோடு ஈடுபடுவீர்கள். சில காரியங்களில் தளர்வு ஏற்பட்டாலும் அவற்றில் வெற்றி பெற தகுதியான நபரை நாடுவீர்கள்.

**மீனம்:**
பல செயல்களில் முயற்சியோடு செயல்பட்டாலும் சிலவற்றில் முன்னேற்றமும் சிலவற்றில் தொய்வும் காணப்படும். அவசியமான காரியங்களில் நண்பர்கள் கண்ணில் அகப்பட மாட்டார்கள் .

## அனைவரும் நாட்டுக்காக...

பயந்து அதனைப் பொறுப்பேற்க எவரும் இருக்கவில்லை. கப்பல் மூழ்கி நாம் பலியாவதா? அல்லது கரையொதுங்குவதா? என்ற கேள்வியே இருந்தது. நாம் தற்போது துறைமுகத்தை வந்தடைந்துள்ளோம். இந்தக் கப்பலுடன் நாம் என்ன செய்யப் போகிறோம். இந்தக் கப்பலைத் திருத்திக் கொண்டு இன்னும் 50 100 வருடங்களுக்குப் பாதுகாப்பாக பயணிக்கப் போகிறோமா? அல்லது தற்போதிருக்கும் கப்பலை தப்பியோடிய ஒருவரிடம் ஒப்படைப்பதா? என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். நான் இந்த இடத்துக்கு வரும்போது மாத்தறை மக்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் சந்தித்த துயரங்கள் நினைவுக்கு வந்தது. 2022ஆம் ஆண்டு தமிழ், சிங்களப் புத்தாண்டில் நான் மாத்தறை, கம்புறுகமுவ என்ற பிரதேசத்தில் இருந்தேன். நான் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையமொன்று இருந்தது. அங்கு மிக நீண்ட வரிசையில் வாகனங்கள் இருந்தன. மக்கள் பெரிதும் துன்பப்பட்டனர். தமிழ், சிங்கள புத்தாண்டு சுப வேளையிலும் எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் காத்திருந்தனர். என் வாழ்நாளில் இவ்வாறான சம்பவங்களை இதற்கு முன்னர் ஒருபோதும் பார்த்ததில்லை. ஆண், பெண் பாகுபாடின்றி வரிசையில் இருந்தனர். ஒருநாள் அவர்கள் முட்டி மோதிக் கொண்டனர். அவ்வாறான ஒரு நிலை மீண்டும் இந்த நாட்டில் ஏற்பட இடமளிக்க முடியாது என்பதை நான் தீர்மானித்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானியுடன் பேசியிருந்தேன், உலக வங்கியின் அதிகாரிகளின் செய்திகளை அப்போதிருந்த ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தேன். அவற்றை நடைமுறைப்படுத்துமாறு கேட்டிருந்தேன். எவ்வாறாயினும், இறுதியில் எனக்கு இதனைப் பொறுப்பேற்க நேரிட்டது.

இந்த மூன்று உடன்படிக்கைகள் குறித்தும் கலந்தாலோசிப்போம். என்ன நடந்துள்ளது, என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து விரிவாக நான் பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளேன். இவற்றை அரச நிதியியல் குழு ஆராய்ந்த பின்னர், வாக்கெடுப்பிற்கு செல்வோம் என்று நான் கூறியுள்ளேன். பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகள் இதற்கு ஆதரவளிக்க வேண்டும். இதனை நாம் ஏற்றுக் கொள்கிறோமா இல்லையா? என்பதை உலகம் அறிய விரும்புகிறது. எனவே, நான் இவற்றை சமர்ப்பிக்கிறேன். இதனைவிட சிறந்த தீர்வோ, மாற்றுவழியோ இருக்கிறது என்று எந்தவொரு கட்சியாவது கூறினால், அவர்களுக்கு வொஷிங்டன் சென்று ஐ.எம் .எப். உடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும். அவர்களுக்கான பயணச் சீட்டையும், தங்குமிட வசதிகளையும் அரசாங்கம் ஏற்பதற்கு தயாராக இருக்கிறது. அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி சிறந்த தீர்வைக் கொண்டுவந்தால் அது குறித்தும் நாம் பாராளுமன்றத்தில் கலந்தாலோசிக்க முடியும். இதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனினும், பழைய முறையில் அரசியல் செய்ய முடியாது. நாம் எடுக்கும் தீர்மானம் எங்கள் எதிர்காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதிலிருந்து நாம் விலகிச் சென்றால், நாம் எவ்வாறு தனித்துப் பயணிக்கப் போகிறோம் என்ற கேள்வி இருக்கிறது. இந்த உடன்படிக்கைகள் இல்லாமல் நாட்டை முன்நோக்கி நகர்த்த முடியுமா? இந்த உடன்படிக்கைகள் இல்லாமல் எமக்கு எதிர்காலம் இருக்கிறதா? அல்லது வரிசை யுகத்துக்கு மீண்டும் செல்வதா? இந்தக் கேள்விகளுக்கு விடை காண வேண்டும். சம்பிரதாய அரசியலில் இருந்து விடுபட வேண்டும். தீர்க்கமான தீர்மானமொன்றை நாம் எடுக்க வேண்டும். அதுமட்டுமன்றி, எதிர்காலத்தில் இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு நாம் எவ்வாறு பணம் செலுத்தப் போகிறோம்? எங்களுக்கு அந்நியச் செலாவணி இல்லையென்றால், நாம் கடன் பெறப் போகிறோமா? அப்படி செய்தால் இன்னும் 15 வருடங்களில் எழுந்துவர முடியாத, படுகுழியில் மீண்டும் விழுவோம் என்பதை நான் உறுதியாக கூறிவைக்க விரும்புகிறேன். இதனை நான் எழுதித் தருகிறேன். இதனையா செய்யப் போகிறோம். அல்லது நாம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கிப் பயணிக்கப் போகிறோமா? நாம் ஏற்றுமதிப் பொருளாதாரத்துக்கு செல்ல வேண்டும். உங்களது எதிர்காலத்தை மையப்படுத்தியே இந்தத் தீர்மானங்களை எடுக்க வேண்டும். அடுத்த 5 10 வருடங்களில் உங்களின் வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை மையப்படுத்தி தீர்மானங்கள் எடுப்பது அவசியம். இளைஞர்களுக்காக இந்தத் தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு சிறந்த எதிர்காலம் இருக்க வேண்டும். மீண்டும் நெருக்கடிக்குள் செல்வதா அல்லது அபிவிருத்தியடைந்த நாடாக முன்நோக்கிச் செல்வதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இளைஞர்களின் எதிர்காலமே இதில் தங்கியுள்ளது. இந்தத் தீர்மானங்களையே நாம் எடுக்க வேண்டும். இதற்காகவே நாட்டுக்காக பணியாற்றுவோம் என்று அனைத்து அரசியல் தலைவர்களுக்கும் நான் கூறுகிறேன். நான் அடங்கலாக இந்த அமைச்சரவை எந்தக் கட்சிக்குச் சொந்தமானது எனக் கேட்கின்றனர். நாட்டுக்காக ஒன்றுபட்டவர்களே இதில் இருக்கின்றனர். இதில் மொட்டுக் கட்சியினர் இருக்கின்றனர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இருக்கின்றனர், டக்ளஸ் தேவானந்தா அமைச்சரின் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர், ஐக்கிய தேசியக் கட்சியினர் இருக்கின்றனர். நாம் நாட்டிற்காக ஒன்றிணைந்துள்ளோம். எமக்கென்று ஒரு கட்சி இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். புதிய அரசியல் முறையையொன்றை நாம் ஆரம்பித்துள்ளோம். நாட்டிற்கு முதலிடம். அதன்பின்னரே கட்சி. மொட்டுக் கட்சியினர் உள்ளிட்ட பல தரப்பினரும் எதிர்கட்சியிலும் இருக்கின்றனர். ஆனால் நாட்டுக்காக சிந்தித்து பணியாற்றும் பலரே தற்போது அரசாங்கத்தில் இருக்கின்றனர். நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். எனவே, கட்சி பேதமின்றி நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எம்முடன் இணைந்துகொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்த பாராளுமன்றத்தில் ஒரு அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள முடியும். ஆனால் நாம் இந்தப் புதிய பாதையில் பயணிக்க வேண்டும். எதிர்க்காலத்தில் தலைமைத்துவத்தை எவ்வாறு பெறுவது? எவ்வாறு இந்தப் பணிகளை முன்னெடுப்பது என்று என்னிடம் கற்றுக்கொள்ளவும் முடியும். அனைவரும் ஒன்றிணைந்து இந்த அரசியல் முறையை மாற்றுவோம். தினமும் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதில் பலனில்லை. நான் அவ்வாறு செய்யவில்லை. நாம், புதிய பாதையில் பயணிக்கிறோம். இதற்காக அர்ப்பணிக்க வேண்டும். நான் அதற்காக அர்ப்பணித்துள்ளேன். அடுத்த தேர்தலில் என்ன செய்யப் போகிறோம் என்பதை அனைவரும் பேசித் தீர்மானிக்கலாம். ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்பதைத் தீர்மானிக்கலாம். அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்பதைத் தீர்மானிக்கலாம். அந்தத் தீர்மானங்களுக்கு இணங்க செயற்பட நானும் தயார். எங்களுக்கு இன்று தனிநபர், கட்சி சார்ப்பு அரசியல் இல்லை. நாம் நாடு குறித்து சிந்திக்க வேண்டும். நாட்டை முன்னிலைப்படுத்து முன்னோக்கிப் பயணிப்போம் என்று கூறவிரும்புகிறேன். இந்த வருடமும், அடுத்த வருடமும் தேர்தல்கள் வருகின்றன. ஜனாதிபதித் தேர்தல் வருகிறது. பாராளுமன்றத் தேர்தல் வருகிறது. அதன்பின்னர் மாகாண சபைத் தேர்தல் வருகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த பணம் இல்லை.. அதனால் அதனை இறுதியாக நடத்துமாறு கோரினார்கள். அதுகுறித்து கூச்சலிடத் தேவையில்லை. ஊர்வலம் வர முன்னர் மேள,தாளங்களுக்கு அவசியமில்லை. இதுகுறித்தும் நாம் தீர்மானிக்க வேண்டும். எவ்வாறாயினும், நாம் எதிர்காலம் குறித்து சிந்தித்து பணியாற்றுவோம். அண்மைக்காலமாக நீங்கள் பட்ட துன்பம் குறித்து கவலையடைகிறேன்.

இந்த அரசாங்கம் கவலைகொள்கிறது. அடுத்ததாக நாம் எடுத்த தீர்மானங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனைப் பாதுகாத்துக் கொள்ள ஒன்றிணையுமாறு அனைவரையும் அழைக்கிறேன். எதிர்காலத்தில் புதிய பாதையில் பயணிக்க வருமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

## கடலில் மிதந்த...

ஆழ்கடலிலுள்ள (சுமார் 675 கிமீ) மீனவர்களை மீட்டு கரைக்கு அழைத்துவருவதற்காக, கடற்படையின் விஜயபாகு கப்பல் ஸ்தலத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது.

எனினும் நிலைமையை உணர்ந்த கடற்படை சர்வதேச கப்பல்களின் உதவியையும் நாடியது. இதன்படியே சிங்கப்பூர் கொடியிடப்பட்ட 'MV KOTA CAMIL' என்ற சிங்கப்பூர் சரக்கு கப்பலொன்று, ஸ்தலத்துக்கு விரைந்து ஆபத்தான நிலையில் உயிருக்கு போராடிய இருவரை மீட்டு சிகிச்சையளித்தவாறு இலங்கை தென்பகுதியை நோக்கி வந்தது . இங்கிருந்து புறப்பட்ட கடற்படையின் விஜயபாகு கப்பலுக்கு இருவரையும் நேற்று இரவு சுமார் 10 மணியளவில் ஆழ்கடலில் வைத்து ஒப்படைக்க திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் சிங்கப்பூர் கப்பலில் சிகிச்சைபெற்று வந்த 05 ஆவது மீனவரும் மரணமானதாக கடற்படைக்கு சிங்கப்பூர் கப்பல், அறிவித்துள்ளது. ஆபத்தான நிலையிலுள்ள 06 ஆவது மீனவரை இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவரையும் மரணமான மற்றைய மீனவரின் சடலத்தையும் இன்று இரவு ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு கொண்டுவர முடியுமென்றும் கடற்படைபேச்சாளர் கப்டன் கயான் விக்கிரமசூரிய தெரிவித்தார்.

ஏற்கனவே ஆழ்கடலில் மரணமான 04 மீனவர்களது சடலங்களும் ஆழ்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகில் இன்னமும் இருப்பதாகவும் மற்றுமொரு ஆழ்கடல் வள்ளத்தின் மூலம் அந்த வள்ளத்துடன் அவர்களது சடலம் கரைக்குகொண்டு வரப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அந்த வள்ளம் கரைக்கு வந்த பின்னரே மரணத்துக்கான காரணம் மற்றும் அவர்கள் அருந்திய திரவம் என்ன என்பது பற்றி அறிய முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மீன்பிடி படகு தங்காலை மீன்பிடி துறைமுகத்திலிருந்து சென்றுள்ளது. தற்போது இப்படகு தங்காலை கடலிலிருந்து சுமார் 365 கடல் மைல் தொலைவில் இருப்பதாகவும் வெறொரு படகின் உதவியுடன் கரைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

## அமைச்சர்கள், ஆளுந்தரப்பு...

இதுபற்றி தெரிவித்தார். இவ்விசேட பாராளுமன்ற அமர்வை நாளை 02 செவ்வாய் மற்றும் புதன்கிழமை 03ஆம் திகதிகளில் கூட்டுவதற்கு கடந்த வெள்ளிக்கிழமை கூடிய பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

முழு நாட்டு மக்களினதும் கவனமும் நாளை நடக்கவிருக்கும் நிகழ்வில் குவிந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஜூலை 02ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை நிகழ்த்திய பின்னர் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் தொடர்பிலான விவாதமும் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பான வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னர், அமைச்சர்களுக்கு பாராளுமன்றத்தில் ஆய்வு செய்ய வாய்ப்பு வழங்கப்படுமெனவும், தேவைப்பட்டால் நாளை மறுதினம் (03) வாக்கெடுப்பை நடத்த முடியுமெனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார்.

எனவே புதன்கிழமை அமர்வில்,ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவரும் கட்டாயம் பாராளுமன்றத்துக்கு சமுகமளிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இலங்கை அரசாங்கமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவும் (OCC) கடந்த 2024.06.26 இல்,கைச்சாத்திட்ட இறுதி உடன்படிக்கை, இலங்கை அரசாங்கம் மற்றும் சீன ஏற்றுமதிஇறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவற்றுக்கிடையில் 2024.06.26 இல், கைச்சாத்திடப்பட்ட இறுதி உடன்படிக்கை ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனுமதியை, நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு வழங்குவதற்காக இத்தீர்மானம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## பஸ் கட்டணங்கள்...

சங்கம் தெரிவித்துள்ளது. பஸ் கட்டணத்தை 5.27 விதத்தால் குறைக்க, தாம் திட்டிட்டுள்ளதாகவும் இதுவரை 30 ரூபாவாகவிருந்த ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 28 ரூபாவாக குறைக்கப்படுமெனவும் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் தெரிவித்துள்ளார்.

தேசிய பஸ் கட்டண கொள்கையின்படி இந்த விலைக் குறைப்பை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறைக்கப்பட்டுள்ள பஸ் கட்டணத்தை மக்கள் முழுமையாக பெற்றுக்கொள்ள வேண்டுமானால் , பஸ்களில் பயணம் செய்யும்போது சில்லறை காசுகளை கொண்டு வருவது முக்கியமாகும்.

அவ்வாறில்லையானால் 28 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ள 30 ரூபா கட்டணம் அறவிடப்படும்போது சில்லறைக் காசு பிரச்சினைகள் ஏற்படலாம்.

அத்துடன் அனைத்துக் கட்டண அறவீட்டின் போதும் ஒரு ரூபா, இரண்டு ரூபா, மற்றும் ஐந்து ரூபா என சில்லறைக் காசு பிரச்சினைகள் ஏற்படலாம். அதனை தவிர்த்துக் கொள்வதில் பயணிகள் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பஸ் சங்கங்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டதாகவும், கட்டணத்தை குறைப்பதற்கு பஸ் சங்கங்கள் இணக்கம் தெரிவித்ததாகவும் ஷஷி வெல்கம தெரிவித்தார்.

தேசிய பஸ் கட்டணக் கொள்கையின் பிரகாரம் இன்று (01) கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்த ஷஷி வெல்கம, இதற்கமையவே கட்டணக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை பஸ் கட்டணம் குறைப்பு தெடர்பில் இன்று பிற்பகல் 01.00 மணியளவில் தகவல் திணைக்களத்தில் நடைபெறவுள்ள விசேட ஊடக சந்திப்பில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ஷஷி வெல்கம, ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் நயோமி ஜயவர்தன, ஆணைக்குழுவின் பணிப்பாளர் (திட்டமிடல்) கே.ஏ.சி.கருணாரட்ண ஆகியோர் கட்டணத் திருத்தம் மற்றும் குறைப்பு பற்றியதான அறிவித்தலை விடுக்கவுள்ளனர்.

## பொருளாதாரம் வங்குரோத்தடையும்...

வரிசைகளின் யுகம் தொடங்கியது. அப்போது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து, நாட்டை பொறுப்பேற்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அப்போது, திறைசேரி பதிவேடுகளைப் பார்த்துவிட்டு, எதிர்க்கட்சித் தலைவரும், அக்கட்சியில் இருக்கும் பொருளாதார நிபுணர்களும், அடுத்த 06 மாதங்களில் பொருளாதாரம் வெடித்துச் சிதறும் எனப்பயந்து பொறுப்பேற்க பின்வாங்கினர். இந் நிலையிலேயே, ஜனாதிபதி ரணில் நாட்டைப் பொறுப்பேற்றார்

அவருடைய திறமைக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். அண்மையில் நான் பங்களாதேஷ் பிரதமரை சந்தித்தேன். 200 அமெரிக்க டொலர் கடனை இலங்கை திருப்பி செலுத்தும் என்று, நான் நினைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

தற்போது, நாடு வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றப்பட்டு, ஈரானின் கடன் தவணைகளை கூட திருப்பிச் செலுத்த ஆரம்பித்துள்ளோம்.

இவை அனைத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார நோக்கின் காரணமாகவே மேற்கொள்ளப்பட்டன. மீண்டும் வீழ்ச்சியடையாத பொருளாதாரத்தை உருவாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே முடியும் என்பதை இந்நேரத்தில் கூறிக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மதுபானம் அருந்தி...

பயணிகள் துரத்திச் சென்று பிடித்துள்ளனர்.

இந்நிலையில் உதவி சாரதியை பயன்படுத்தி ரயில், கண்டி ரயில் நிலையம் நோக்கி பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பின்னர், மதுபோதையில் இருந்த ரயில் சாரதியை, ரயில் போக்குவரத்து ஆய்வாளர் மூலம் ரயில்வே பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## திறைசேரி உண்டியல்...

கொண்டுள்ள 50,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 90 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 50,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் இவ்வாறு ஏல விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அந்த வங்கி தெரிவித்துள்ளது.

## விசேட மாதாந்த கொடுப்பனவாக...

இலங்கை பொறியியல் சேவை அதிகாரிகள், 12.11.2023 திகதியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 23/2013 இன் படி இலங்கை கட்டிடக் கலைஞர்கள் சேவை அதிகாரிகளுக்கும் இதேபோன்றே 13/1466/533/016 மற்றும் 31.10.2013 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட இலக்கம் 41.07 தீர்மானத்தின்படி மேற்படி ஏற்பாடுகளின்படி இலங்கை நில அளவை சேவை அதிகாரிகளுக்கு இந்த கொடுப்பனவுகள் 01.07.2024 முதல் வழங்கப்படும். திறைசேரியின் ஒப்புதலுடன் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது மற்றும் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 01.07.2024 முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

## 1,713 கிலோ பீடி...

உர மூடைகளில் அடைக்கப்பட்ட 513 கிலோ பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் கற்பிட்டி நுரைச்சோலை பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட மற்றுமொரு தேடுதல் நடவடிக்கையில் , காட்டுப் பகுதியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 33 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 1,200 கிலோ பீடி இலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## தெஹிவளை...

நடைபெறவுள்ளது. காலை 9.00 மணிக்கு முக்கிய நிகழ்ச்சியும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் தெஹிவளை விலங்குகள் பூங்காவை இலவசமாக பார்வையிடுவதற்கு, தேசிய விலங்கியல பூங்கா அதிகார சபை தற்போது ஏற்பாடு செய்துள்ளது.

## மாநகர சபை...

கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 'மறுமலர்ச்சிக்காக முழு நாட்டு மக்களும் ஒன்றுபடுவோம்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலே அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.களுத்துறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியினால் நடத்தப்பட்ட இந்தக்கூட்டத்தில் அவர் மேலும் குறிப்பிட்டாவது:

திருடர்களை பிடிப்பதற்காக சரத் பொன்சேகாவுக்கு பொலிஸ் அமைச்சுப்பதவி வழங்கப்படும் என, கடந்த தேர்தலில் சஜித்பிரேமதாஸா கூறியிருந்தார்.

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே...

பிரசாரக் கூட்டம் மௌனராகலையில் நடைபெற்றுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அதனோடு இணைந்த புதிய கூட்டணியும் ஒன்றிணைந்து இக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. இந்த கூட்டத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் பிரியங்கர, பொதுஜன பெரமுனவின் மட்டக்களப்பு மாவட்ட எம்பியும் வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சருமான எஸ். வியாழேந்திரனும் இணைந்து கொண்டனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா, அமைச்சர் மஹிந்த அமரவீர, எம்பிக்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, ஜகத் புஷ்ப குமார உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டுஉரையாற்றினர். இந்த கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் மஹிந்த அமரவீர;

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எவராலும் பிளவுபடுத்த முடியாது. அந்தக் கட்சியை எவராலும் உடைக்கவும் முடியாது. அடிக்கடி சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும் அந்த கட்சி முன்பிருந்ததை விட தற்போது பலம் வாய்ந்ததாக கட்டி யெழுப்பப்பட்டுள்ளது. அதனை மேலும் பலப்படுத்தும் வகையில் புதிய கூட்டணி எம்மோடு இணைந்துள்ளது.

# நகர்வலம்



# பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவினால் எழுதப்பட்ட நூல் ஜனாதிபதி ரணில் தலைமையில் வெளியீடு





யுத்த சவால்களையும் வெற்றிகொண்டு, அரசியல் களத்தில் பல்வேறு சவால்களை சந்தித்த சரத் பொன்சேகாவால் எதிர்காலத்தில் நாட்டுக்காக பாரிய பணிகளை ஆற்ற முடியும்.

முப்பது வருடகால யுத்தத்தை நிறைவு செய்ய சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிய முன்னாள் இராணுவத் தளபதியும், பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவினால் "இராணுவ தளபதி தேசத்துக்கு வழங்கிய வாக்குறுதி இந்த யுத்தம் அடுத்த தளபதி வரையில் நீடிக்க இடமளியேன்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் (28) கொழும்பு நெலும் பொக்குன கலையரங்கில் நடைபெற்றது.

இதன்போது புத்தகத்தின் முதல் பிரதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவினால் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டது. அதனையடுத்து பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஜனாதிபதிக்கு நினைவு பரிசு ஒன்றையும் வழங்கி வைத்தார்.

இதன்போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் சேவைக்கு பாராட்டு தெரிவித்த ஜனாதிபதி, யுத்தத்தை வெற்றிகொண்டது மாத்திரமன்றி, பல்வேறு அரசியல் சவால்களுக்கும் முகம்கொடுத்தவர் என்ற வகையில் எதிர்காலத்தில் நாட்டிற்கு பெரும் சேவையாற்ற முடியும் என்றும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

"பீல்ட் மார்ஷல் அந்தஸ்தை சரத் பொன்சேகா மட்டுமே வகிக்கிறார். அவர் யுத்த சவால்களை வெற்றிக்கொண்ட அதே நேரம் அதற்கு வெளியில் அரசியல் சவால்களுக்கும் முகம்கொடுத்திருந்தார்.

யுத்த காலத்தில் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன ஊடாகவே இவரை நான் அறிந்துகொண்டேன். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன என்னோடு சமீபமாக பழகியவர். இந்த அதிகாரிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது அதற்கான வாய்ப்பை உருவாக்கி கொடுக்குமாறு சிசில் வைத்தியரத்ன கூறினார். யுத்தம் ஆரம்பித்த காலத்திலும் அதற்கு பிற்பட்ட காலத்திலும் அரசாங்கத்திலிருந்த நான் யுத்தத்தில் பங்கெடுத்திருந்த பெரும்பாலான அதிகாரிகளை அறிவேன். அப்போது பல்வேறு சிறந்த அதிகாரிகள் உருவானதோடு அவர்களின் வரிசையில் சரத் பொன்சேகாவுக்கு சிறந்த இடம் காணப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஜயசிக்குரு போராட்டம் தோல்வியை தழுவியதால் இராணுவம் கைப்பற்றிய பலவற்றை இழக்க நேரிட்டது. அந்த நேரத்தில் நான் பிரதமராக பதவி வகித்ததோடு, யாழ்ப்பாணத்தை யாரிடம் கையளிப்பது என்ற கேள்வி காணப்பட்டது. அப்போது பலர் இறந்து போயிருந்ததோடு, காயங்களுக்கும் உள்ளாகியிருந்ததால் படையினர் எண்ணிக்கை குறைந்திருந்தது. யாழ்ப்பாணத்துக்கான படைப்பிரிவொன்று அவசியமென சிலர் கூறினர். அப்போது நான் சரத் பொன்சேகாவிடம் யாழ்ப்பாணத்தை ஒப்படைப்போம் என இராணுவ தளபதியிடம் கூறினேன். அதன்படியே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அவர் வீழ்ந்த இடத்தில் எழுந்து யுத்த வெற்றியை நோக்கி நகர்ந்தார். அதற்காக கஷ்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. யுத்தம் என்பது கிரிக்கட் போட்டியை போன்றதல்ல. உயிரிழப்புக்கள் ஏற்படும். சொத்துக்கள் இழக்கப்படும். அதற்கு மத்தியிலும் யுத்தத்தை வழிநடத்திச் செல்லும் வல்லமை அவரிடம் இருந்தது. உலகத்தில் மிக் மோசமான யுத்தமொன்றுக்கே நாம் முகம்கொடுத்தோம். மற்றைய நாடுகளில் இன்றும் அவ்வாறான யுத்தங்கள் காணப்படுகின்றன. ஆப்கானிஸ்தான் யுத்தம் இலங்கைக்கு முன்னதாக ஆரம்பமானது. அந்த வகையில் சரத் பொன்சேகா தனது பொறுப்பை சரிவர செய்திருக்கிறார்.

அதேபோல் சிவில் வாழ்க்கையிலும் அவர் பல சவால்களை எதிர்கொண்டிருக்கிறார். அதன்போது அவர் தனிமைப்பட்ட வேளைகளிலும், சிறையிடப்பட்ட வேளையிலும் வலுவான மனிதராக உருவாகினார். அதனால் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோடு கலந்துரையாடி சரத் பொன்சேகாவிற்கு பீல்ட் மார்ஷல் அந்தஸ்து வழங்கப்பட்டது. அதற்கு தகுதியானவர் என்ற வகையில் அவரும் ஏற்றுக்கொண்டார்.

அரசாங்கம் என்ற வகையில் சரத் பொன்சேகாவின் தெரிவை கொண்டு நாம் பயனடைந்தோம். அவர் போராட்ட குணம் கொண்டவர். யுத்த களத்திலும் அரசியல் களத்திலும் போராட்டத்தை கைவிடவில்லை. அவரால் நாட்டுக்கு இனியும் சேவையாற்ற முடியும். அவரின் சேவைகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். "Old soldiers never die they fade away.In this instance he wont fade away either, so he is still there." என்ற வகையில் எதிர்காலத்தில் அவரிடத்திலிருந்து பெறக்கூடிய சேவையை பெற்றுக்கொள்ள நாட்டுக்கு சந்தர்ப்பம் கிட்டுமென நான் நம்புகிறேன்.

தற்போது நாட்டுக்குள் யுத்தம் முடிந்துவிட்டது சமாதானத்துக்கான பணிகளை செய்வோம் என்று சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்தில் வைத்து ஒரு முறை கூறினார். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை முன்னேற்றிச் செல்வோம் என்று கேட்டுக் கொள்கிறேன். எமது இராணுவம் அனுபவங்கள் நிறைந்தது. நாட்டைக் கட்டியெழுப்பி சமாதானத்தை ஏற்படுத்த இவர்களால் முடியும்." என்றும் தெரிவித்தார்.

**பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

"படையினரின் அர்ப்பணிப்பின் பலனாகவே யுத்தத்தை வெற்றிகொள்ள முடிந்தது. ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் உயிர்த் தியாகம் செய்தனர். பெருமளவானவர்கள் அங்கவீனமடைந்தனர். அதற்கான கௌரவத்தை அனைத்து இராணுவ வீரர்களின் குடும்பத்துக்கும் தெரிவிக்கிறேன். நமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவே அவர்கள் உயிர்த்தியாகம் செய்தனர். அதேபோல் நாட்டில் சமாதானத்தையும் ஏற்படுத்தினர்.

யுத்தத்தை நிறைவு செய்ய அரசியல் தீர்வை எட்ட வேண்டுமென பலரும் கூறினர். நான் இராணுவ தளபதியாக பொறுப்பேற்ற வேளையிலும் பாதுகாப்புப் படை வீரர்கள் கவலையுடனேயே இருந்தனர். இருப்பினும் நாம் முப்பது வருட யுத்தத்தை வெற்றிகொண்டோம்.

இராணுவ வீரர்களின் இரத்தம், வியர்வை சிந்தப்படமால் அளப்பரிய அர்ப்பணிப்புக்கள் செய்யப்படாதிருந்தால் யுத்தத்தை வெற்றிகொண்டிருக்க முடியாது. யுத்தத்தின் பின்னர் இந்நாட்டு மக்களும் ஆட்சியாளர்களும் இராணுவ வீரர்களுக்கு உரிய மரியாதையை வழங்கியிருந்தனரா என்பது கேள்விக்குரியாகும்." என்றும் தெரிவித்தார்.

மகா சங்கத்தினர் தலைமையிலான ஏனைய மதத் தலைவர்கள், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் வஜீர அபேவர்தன, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும், தூதுவர்கள், முன்னாள் இராணுவ தளபதிகள், அனோமா பொன்சேகா உட்பட அவரின் குடும்ப உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 190,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 ஜூலை 03ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124J040 | LKA18225A035 | LKA36425G044 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 50,000 | 90,000 | 50,000 | 190,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 ஜூலை 03
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஜூலை 05
வழங்கப்படும் திகதி : 2024 ஜூலை 05
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஜூலை 03 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**


# உலக சாதனைக்கு தயாராகும் ஒப்பனைக் கலைஞர்கள்




எதிர்வரும் ஜூலை மாதம் 21 ஆம் திகதி ஒப்பனைக் கலைஞர்களால் ஓர் உலக சாதனை நிகழ்த்தப்பட இருக்கின்றது. கொழும்பு சாமுத்திரிகா மேக்கப் ஸ்டூடியோ அகாடமியின் ஏற்பாட்டிலும் MUA கிளப் லங்காவின் இணை அனுசரணையுடனும் இலங்கையின் பல மாவட்டங்களிலிருந்தும் முன்னணி ஒப்பனைக் கலைஞர்களும் பயிற்சி பெற்ற ஒப்பனைக் கலைஞர்களும் மொடலிங் துறையைச் சேர்ந்த கலைஞர்களும் ஒன்று சேர்ந்து இந்த உலக சாதனையை நிகழ்த்த உள்ளனர்.

இந்த உலக சாதனை தொடர்பான தெளிவூட்டல் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள சாமுத்திரிகா மேக்கப் ஸ்டூடியோ அகாடமியின் தலைமையகத்தில் அதன் தலைவர் திருமதி அனு குமரேசனால் நடாத்தப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த அனு குமரேசன்...

பல உலக சாதனை பதிவு நிறுவனங்களின் அனுசரணை பெற்ற ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, வியட்நாம் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளில் அங்கீகாரம் பெற்ற "ஏசியன் புக் ஒஃப் ரெக்கார்ட்ஸ்" இன் சாதனைப் புத்தகத்தில் எமது ஒப்பனைக் கலைஞர்களின் உலக சாதனையை பதிவு செய்ய சகல ஏற்பாடுகளையும் நாம் செய்துள்ளோம்.

அத்துடன் 250ற்கும் மேற்பட்ட ஒப்பனை நிகழ்வுகள் குறிப்பிட்ட நேர அடிப்படையில் ஒப்பனைக் கலைஞர்களால் பிரமாண்டமான சாதனையாக நிகழ்த்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் தொழில் வல்லுநர்களான ஒப்பனை கலைஞர்களும் இவர்களோடு வெளிநாட்டைச் சேர்ந்த ஒப்பனை கலைஞர்களும் ஒப்பனை ஆர்வலர்களும் கலந்து கொள்ளவுள்ளதுடன் விசேடமாக 17 வயதிற்குட்பட்ட மாணவர்களையும் உள்வாங்கி இந்த சாதனையை நிகழ்த்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த சாதனை நிகழ்வை சாதனைப் புத்தகத்தின் நடுவர்கள் நேரடியாக கண்காணிப்பதோடு இணைய வழியூடாகவும் நிகழ்நிலை நேரலையூடாகவும் பதிவுகளை மேற்கொள்ளவுள்ளதோடு பல்வேறு நாடுகளில் இருந்தும் கலைஞர்கள் நேரடியாகவும் நிகழ்நிலையூடாகவும் கலந்துகொள்ளவுள்ளமை சிறப்பம்சமாகும்.

மேலும் இந்த சாதனைக்கான சான்றிதழும் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் அன்றைய தினமே நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**திருத்தம் பற்றிய அறிவித்தல்**
**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - PROJECT ID: P 163305**

2024-06-28ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் 21ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி தலையங்கத்தின் கீழ் பிரசுரமான விளம்பரத்தின் அட்டவணையில் நான்காம் நிரலில் உள்ள ஒப்பந்தக் காலம் 300 நாட்கள் என தவறாக காணப்படுகின்றது. அதை 30 நாட்கள் திருத்தி வாசித்தல் வேண்டும். விளம்பரத்தின் ஏனைய விடயங்கள் எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**உள்ளூர் நிர்வாக பெறுகைக் குழு,**
**போரதீவுபற்று பிரதேச சபை,**
**வெள்ளாவெளி.**







# நாதஸ்வரக் கலையில் உலகப்புகழ் பெற்று விளங்கியவர் கலாநிதி பஞ்சாபிகேசன்

## நூறாவது பிறந்ததினம் இன்று

நாதஇசை பேரொலி கே.எம். பஞ்சாபிகேசன் அவர்களின் நூற்றாண்டு விழா இன்று முதலாம் திகதி நடத்தப்படுகிறது. 1974 உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இசை வழங்கிய சரித்திரப் பெருமை பெற்றவர் பஞ்சாபிகேசன். வாழ்வின் முதுமையிலும் கம்பீரம் குறையாமல் இறுதிவரை நாதஸ்வர மேதையாகத் திகழ்ந்தவர் அவர் 26.06.2015 அன்று காலமானார்.

நாதஸ்வரக் கலையின் தனித்துவ ஆளுமையாக விளங்கியவர் கலாநிதி பஞ்சாபிகேசன். தமிழர் கலாசாரத்தில் மிகவும் புகழ்பெற்ற இசைக்கருவியாக விளங்குவது இந்த நாதஸ்வர இசைக்கருவியாகும். தமிழ் மக்கள் பெருமையோடு சொந்தம் பாராட்டுகின்ற வாத்தியமான நாதஸ்வரம் திருவிழாக்களிலும், திருமண வைபவங்களிலும், திருக்கோயில் வழிபாடுகளிலும், இறைவனின் திருவீதி உலாக்களிலும், உறுமி மேளம், நையாண்டி மேளம் போன்ற கிராமிய இசை நிகழ்ச்சிகளிலும் மிகவும் சிறப்பாக இசைக்கப்படுகிறது.

இராஜவாத்தியம் என்றும், மங்களகரமான வாத்தியம் என்றும் சிறப்பிக்கப்பட்டு, தமிழர்கள் கொண்டாடும் விழாக்கள் யாவற்றிலும் நாதஸ்வர இசையை இனிதே கேட்கலாம். நாதஸ்வரம் துளைக்கருவி வகையைச் சேர்ந்த ஓர் இசைக்கருவியாகும். இது நாதஸ்வரம், நாதசுரம், நாகசுரம், நாகஸ்வரம், நாயனம் என்று பலவாறு அழைக்கப்படுவதுண்டு.

இலங்கையின் இசைப் பாரம்பரியத்தில் செழுமையாகத் தொடரும் பண்பாட்டின் அடையாளமாக நாதஸ்வரக்கலை விளங்குகின்றது. இந்தக் கலையின் தனித்துவ ஆளுமையாக விளங்கியவரே தென்மராட்சி மண் பெற்றெடுத்த கே.எம்.பஞ்சாபிகேசன்.

தெய்வீகமான இசையை இன்றளவும் பட்டிதொட்டி முதல் இசைவிழா வரையும் போற்றிக் காப்பவர்கள் நாதஸ்வரக் கலைஞர்களே. இது திறந்த வெளியில் இசைப்பதற்கு மிகவும் ஏற்ற கருவி. அத்துடன் நெடுந்தூரம் வரையில் இதன் ஓசையைக் கேட்கலாம்.

1974 உலகத் தமிழாராட்சி மாநாட்டில் இசை வழங்கிய சரித்திரப் பெருமை பெற்றவர் கே.எம்.பஞ்சாபிகேசன். பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆஸ்தான வித்துவானாக கௌரவம் பெற்றவர்.

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்த வாசிப்பு, சபை அறிந்த கச்சேரி ஒழுங்கு, சாஸ்திரிய இசை நுணுக்கம், எல்லையில்லாத மனோதர்மம் போன்றன அவரது இசையின் தனித்துவங்கள் ஆகும்.

உலகளாவிய ரீதியில் புகழடைந்த பஞ்சாபிகேசன் 01.07.1924 அன்று தென்மராட்சியில் பிறந்தவர். தனது இசையாற்றலை வளர்த்துக் கொள்வதற்காக தமிழகம் சென்று நாதஸ்வர இசை மாமேதைகளான திருவாவடுதுறை ராஜரட்ணம்பிள்ளை, கக்காயி நடராஜசுந்தரம்பிள்ளை ஆகியோரிடம் இசை பயின்றார்.



பின்னர் ஐயம்பேட்டை வேணுகோபால் பிள்ளையிடம் பயிற்சி பெற்று பாரம்பரிய மரபுவழிக் கச்சேரி செய்யும் முறைமையினை நன்கு பயின்று கொண்டார்.

தனது 14 ஆவது வயதில் முதல் நாதஸ்வரக் கச்சேரியை நிகழ்த்திய இவர், அன்று தொட்டு படிப்படியாகப் பெரும் புகழ்பெற்றார். தமிழகத்தின் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான்களான திருவாரூர் இலட்சியப்பா, திருநெல்வேலி பிச்சையப்பா கம்பர், மாசிலாமணி போன்றோரோடும் நம் நாட்டின் பிரபல கலைஞர்களான நல்லூர்சிவாசாமி, அளவெட்டி பத்மநாதன் போன்றோரோடும் இணைந்து பல கச்சேரிகளில் இவர் வாசித்துள்ளார்.

உலகப்புகழ்பெற்ற தவில்மேதை தட்சிணாமூர்த்தி அவர்களுடன் இணைந்து இவர் நடத்திய கச்சேரிகள் மறக்க முடியாதவை.

இலங்கையின் நாதஸ்வர, தவில் இசைக்கலைஞர்களான மறைந்த கலைஞர்கள் தவில் மாமேதை வி.தெட்சணாமூர்த்தி, நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதன் வரிசையில் சாவகச்சேரி தந்த எம்.பஞ்சாபிகேசன் அவர்களும் முக்கிய இடம்பெறுகிறார்.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் 'இசைப்பேரறிஞர்' விருதினையும், கலாசார அமைச்சின் 'கலாபூஷணம்' விருதினையும், யாழ். இந்து கலாசார சபையின் 'சிவகலாபூஷணம்' விருதினையும் அவர் பெற்றவராவார். 1998 இல் வடகிழக்கு மாகாண சபையினால் இவருக்கு ஆளுநர் விருதும் வழங்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருந்தது.

திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்தினால் 'இசைவள்ளல் நாதஸ்வரகலாமணி' எனும் பட்டமும், கல்வி அமைச்சினால் 'நாதஸ்வர கானவாரிதி' எனும் பட்டமும், இந்து கலாசார அமைச்சினால் 'ஸ்வரஞானதிலகம்' எனும் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டன.

மெலேசியா, சிங்கப்பூர், பாங்கொக், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, டென்மார்க் போன்ற நாடுகளில் இவரது இசைக்கச்சேரிகள் பல நிகழ்ந்துள்ளன.

கௌரவ கலாநிதிப் பட்டம் கிடைத்தமைக்காக இசைக் கலைஞர்கள் சேர்ந்து நடத்திய ஒரு கௌரவிப்பு விழாவில் பஞ்சாபிகேசன் அவர்கள் இணுவில் கந்தசுவாமி கோயிலில் இருந்து ஊர்வலமாக இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துவரப்பட்டார்.

இணுவில் கலாமண்டபத்தில் பெரும் விழா நடந்தது. கல்விமான்கள், கலைஞர்கள், வர்த்தகப் பெருமக்கள் என அனைவரும் ஒன்றுகூடி வாழ்த்தி மகிழ்ந்தனர்.

யாழ் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமைக்கு தென்மராட்சியில் பெரும் பாராட்டுவிழா நடைபெற்றது.

வாழ்வின் முதுமையிலும் கம்பீரம் குறையாமல் இறுதிவரை நாதஸ்வர மேதையாக விளங்கிய இசைப் பேரறிஞர் சாவகச்சேரியூர் கே.எம்.பஞ்சாபிகேசன் 26.06.2015 அன்று மறைந்தார்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான உத்தேச சட்ட வரைவுக்கான ஆலோசனைகள் கலந்துரையாடல்

உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான (CTUR) உத்தேச சட்ட வரைவுக்கான ஆலோசனைகளைப் பெறுவதற்கான கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் (ISTRM) மற்றும் உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான உத்தேச ஆணையம்(CTUR) இலங்கையில் வடக்கு கிழக்கில் நிலவிய மோதலில் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அநீதிகளை நிவர்த்தி செய்வதற்கு இலங்கையில் ஆணைக்குழுவொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றன.









அந்தவகையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான விளக்கத்தினை வழங்கவும் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவதற்கான கலந்துரையாடல்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்திலும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக மண்டபத்திலும் மூன்று அமர்வுகளாக நடைபெற்றன.

இலங்கையில் தேசிய நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சமூக நீதியை மேம்படுத்தும் நோக்கில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் ஏற்பாட்டில் குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

1983 – 2009 ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிய நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படும் ஒரு சுயாதீனமான நிறுவனமாக உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் முறையாக தகவல்களைத் திரட்டல், வன்முறைகளின் போது நடந்த விடயங்களை அறிக்கையிடல், கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க பரிந்துரை வழங்குதல் மற்றும் மோதலுக்குப் பின்னரான இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பாரபட்சமற்ற அமைப்பாகப் பயன்படுத்துவது உத்தேச ஆணைக்குழுவின் நோக்கமாகும்.

இதன் ஒரு அங்கமாக ஒரு கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர்(நிர்வாகம்)சி.குணபாலன், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

அடுத்த கலந்துரையாடல் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூகங்களின் பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், முன்னாள் போராளிகள் உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

அடுத்த கலந்துரையாடல் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் மணிவண்ணன் உமாமகள் தலைமையில் பிரதேச செயலக உத்தியோகத்தர், மாற்றுத்திறனாளிகள், உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இங்கு, நாட்டில் தேசிய நல்லிணக்கத்திற்கான உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் (ISTRM) தற்போதைய வேலைத் திட்டங்கள் குறித்தும் இந்த சுயாதீன ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான உத்தேச சட்டமூலம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், இக்கலந்துரையாடலில் இணைந்திருந்த நபர்கள் ஆலோசனைகள் மற்றும் யோசனைகளை எழுத்து மூலம் முன்வைப்பதற்கான வழிவகை தொடர்பில் தெளிவூட்டப்பட்டது.

இச்சந்திப்புக்களில் ஜனாதிபதி மேலதிக செயலாளர் ரஞ்சித் ஆரிய ரட்ண, உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரனி அசங்க குணவன்ச, சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி (கொள்கை) கலாநிதி சி.வை.தங்கராசா, சரத் கொத்தலாவல (விரிவுரையாளர் ஆசிப் போர்ட்), சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி (சட்டங்கள்) வை.எல். லொக்குநாரங்கொட, நிறைவேற்று அதிகாரி (பொது மக்கள் தொடர்பு ), சௌமியா விக்கிரமசிங்க மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**சண்முகம் தவசீலன்...**
(மாங்குளம் குறூப் நிருபர்)

# கிழக்கின் இலக்கிய ஆளுமையாக திகழ்ந்தவர் அருணா தர்மலிங்கம்

## அன்னார் மறைந்து ஒரு மாதம் பூர்த்தி

யாழ் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலை கிழக்கில் அமைந்துள்ள 'அருணோதயத்தை' நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பிரபல எழுத்தாளரான அருணாசலம் தருமலிங்கம் மறைந்து ஒரு மாதம் ஆகின்றது. 'அருணா தருமலிங்கம்' என்ற பெயரில் இலங்கையின் பிரபல தேசியப் பத்திரிகைகள் மற்றும் இலக்கிய சஞ்சிகைகளில் ஏராளமான ஆக்கங்களை அவர் எழுதியுள்ளார்.

பல்வேறு ஆக்க இலக்கியங்களால் அவர் நாடறிந்த எழுத்தாளராக விளங்கியவர். வந்தாறுமூலையில் இலக்கிய ஆர்வமுள்ள நண்பர்கள் வட்டத்தை உருவாக்கியவர் அருணா தர்மலிங்கம்.

அவர் தனது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், உயர்கல்வியைப் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்றார். 1965 ஆம் ஆண்டு ஆங்கில மொழி மூலம் விஞ்ஞான பாடங்களில் சித்தியும், தாவரவியலில் விசேட சித்தியும் பெற்ற இவர், 1966 ஆம் ஆண்டு வாழைச்சேனை கிழக்கிலங்கை கடதாசி ஆலை கூட்டுத்தாபனத்தில் இணைந்து பணியாற்றினார்.

இலங்கையின் அக்காலத்து அனைத்து தேசிய பத்திரிகைகளிலும் இவரது சிறுகதைகள் வெளியாகியுள்ளன. ஆரம்ப காலகட்டத்தில் காகித ஆலையின் மாதாந்த வெளியீடான 'காகித மலர்' சஞ்சிகையில் கட்டுரைகளை எழுதி வந்ததுடன், பின்னர் தேசியப் பத்திரிகைகள் சிலவற்றுக்கு வாழைச்சேனை நிருபராகவும் பணியாற்றியுள்ளார்.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட பல இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு தனது எழுத்தாற்றலால் பரிசுகளை வென்றிருக்கிறார்.

'அருணா தருமலிங்கம் ', 'அருணோதயன்', 'அருணா', 'தர்மா' எனப் பல்வேறு புனைபெயர்களில் எழுதியுள்ள இவர், 'அருணா தருமலிங்கம் ' என்ற பெயரிலேயே அதிகமான ஆக்கங்களை எழுதியுள்ளார். உலகின் பல்வேறுபட்ட சிறப்புத் தினங்களுக்காக இவர் எழுதிய கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன.

தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளில் ஏராளமான கட்டுரைகளை அருணா தர்மலிங்கம் எழுதியுள்ளார்.

அரசியல், சமூகம், விஞ்ஞானம், மொழி, இலக்கியம், விளையாட்டு, தொழில்நுட்பம், சிறுவர் இலக்கியம், கல்வி, சமயம், செய்தி எனப் பல்வேறு துறைகளில் தடம் பதித்தவர் அவர்.

ஆக்க இலக்கியப் பணிக்காக 2014 ஆம் ஆண்டு, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்திய கலாசார விழாவில் இவர் விருது வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

தனது இறுதிக்காலம் வரை இலக்கியப் படைப்பாளியாக வாழ்ந்த அருணா தருமலிங்கம், 31.05.2024 அன்று காலமானார்.



அவரது மறைவு இலக்கியவாதிகள் மற்றும் அபிமானிகளுக்கு பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது.

**அளவை கலைக்கரன்...**

# கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் அதிபரை பாராட்டி கௌரவித்து கல்முனை பற்றிமா கல்லூரியில் விழா

## பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் (தேசிய பாடசாலை) க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றி 2022 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், தங்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் நிகழ்வு ஒன்றை அண்மையில் நடத்தினர். அம்மாணவர்கள் தங்கள் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர்களை பாராட்டிக் கௌரவித்தனர்.

குறித்த மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சாதனையாளர்களை கௌரவித்தல்' வரலாற்று முக்கியத்துவமிக்க விழா கல்லூரி அதிபர் அருட் சகோதரர் எஸ்.இ.ரெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது.

பற்றிமா கல்லூரியின் பழைய மாணவியும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். அத்துடன் அக்கல்லூரியின் பழைய மாணவர்களான டொக்டர் மஹாலிங்கம் லெட்சியன், பொறியியலாளர் எம்.கிரிதரன், சட்டத்தரணி ரவீந்திரன் சுஜீதா ஆகியோர் நட்சத்திர அதிதிகளாகக் கலந்து கொண்டனர். கல்லூரி பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பெருந்திரளானோர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்பித்த மற்றும் வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இந்நிகழ்வின் போது அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.








க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 2022 ஆம் ஆண்டு அக்கல்லூரியில் இருந்து 68 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆதம்லெப்பை றியாஸ்...**
(பாலமுனை விசேட நிருபர்)

# வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு ; புத்திஜீவிகளின் பார்வையில்.....

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடனை அடைக்க முடியாமல் வங்குரோத்தான நாடு என்று பெயர் பெற்ற நம் நாடு இப்போது சிறிது மூச்சுவிடுகிறது. 100 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை திருப்பிச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்த அரசாங்கம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்பிறகு, 2028ஆம் ஆண்டு முதல் கடன் மற்றும் தவணைகளைத் தொடர்ந்து செலுத்துவதற்கான வேலைத் திட்டத்தை தற்போதைய அரசாங்கம் தயாரித்துள்ளது. இது சிறிய சாதனையல்ல. அதற்காக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம் சில நேரங்களில் மிகவும் சவாலானது, தொடர்ச்சியான பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகள். பல கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் அவதூறுகளையும் கிண்டல்களையும் பெற்றன. இவை எதற்கும் அஞ்சாமல் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டம் இன்று நாட்டை ஓரளவு வெற்றிக்கு இட்டுச் சென்றுள்ளது. கடன் மறுசீரமைப்பு மற்றும் உள்ளூர் கடன் மேம்படுத்தல் ஆகியவை இதுவரை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சி விவாதங்கள் நாளை (02) மற்றும் நாளை மறுதினம் (03) இலங்கை பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. இந்நாட்டில் உள்ள அறிவார்ந்த, பொருளாதார, சமூக, அரசியல் வல்லுனர்களின் கருத்தைப் பெற்று பரிசீலித்து செய்த குறிப்பே இதுவாகும்.

## சமூகத்தின் அனைத்துப் பிரஜைகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

**பேராசிரியர் சிறிமல் அபேரத்ன**
முன்னாள் தலைவர், பொருளியல் கற்கைகள் பிரிவு – கொழும்பு பல்கலைக்கழகம்



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைதான் நம் நாடு எதிர்கொண்டுள்ளமுக்கியசவால். இந்தப் பிரச்சினை நம் நாட்டைப் பெரும் பாதாளத்தில் தள்ளியது. பொருளாதார ரீதியாக நாம் வீழ்ச்சியடைந்தோம். இதற்கு விடை காண்பது ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் மிகப்பெரிய சவாலாக அமைந்தது. அந்த காலப் பகுதியில் தான் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதி வசதிகளை பெற்றுக்கொள்ள இலங்கை நடவடிக்கை எடுத்தது. மார்ச் 2023 இல், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 48 மாத கடன் வசதிகளை வழங்க முடிவு செய்தது. அதன்படி, இதுவரை இரண்டு தவணைகள் பெறப்பட்டுள்ளன. ஏற்கனவே ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் பெறப்பட்டுள்ளது. இதற்கிடையில், செலுத்த வேண்டிய உள்நாட்டு கடனை திருப்பிச் செலுத்துவதற்கான நிவாரணத் திட்டத்தை இலங்கை தயாரித்தது. இதன்போது, இருதரப்பு வெளிநாட்டுக் கடன்க ளை மீளச் செலுத்துவதற்கான நிவாரணத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு அதிக வெளிநாட்டு கடன் வசதிகளை வழங்கிய இந்தியா, சீனா ஜப்பான் மற்றும் பாரிஸ் கிளப்புக்கிடையே கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளப்பட்டன. இப்போது கடனைத் திருப்பிச் செலுத்த மூன்று ஆண்டுகள் அவகாசம் உள்ளது, குறைந்த வட்டி விகிதம். ஆனால் இந்த சலுகைகளில் நாம் எப்போதும் தங்கியிருக்க முடியாது. ஒரு நாடாக நாம் என்ன செய்ய வேண்டும்? ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நேரம் இது. எமது ஆண்டு ஏற்றுமதி வருவாய் 12 பில்லியன் அமெரிக்க டொலர்கள். சில நாடுகளில், இந்தத் தொகை மில்லியன், பில்லியன் 100,200, 300 டொலர்களைத் தாண்டியுள்ளன. 12 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருவாயில் நாம் இனியும் இருக்க முடியாது. மேலும் விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைந்து அதிக வருமானம் ஈட்ட வேண்டும். இந்த நேரத்தில் நமது நாட்டின் ஆட்சியாளர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், சமூகத்தின் அனைத்துப் பிரஜைகளும் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மக்களாகிய நாம் ஒரு நாடாக இழுபறியில் இருந்து விடுபட வேண்டும். அடுத்த ஐந்தாண்டுகளில் கடனை செலுத்திய நாடாக மாற வேண்டும். அதற்கு, தொலைநோக்கு பார்வை மற்றும் எதிர்காலத்திற்கான நம்பிக்கையான திட்டங்களுடன் இணைக்கப்பட வேண்டும். கடனைச் செலுத்துவதற்கு உதவும் வலுவான அந்நிய செலாவணி வருவாயை அடைவதே எங்களுக்கு மிகவும் முக்கியமானது. இயன்றவரை ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதுடன், அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். தனிநபரை மையமாகக் கொண்ட இறையாண்மை பிணைமுறி பத்திரங்கள் மூலம் பெறப்பட்ட கடனை மறுசீரமைப்பதே எங்களது அடுத்த இலக்கு.

அது பற்றி அடுத்த மாதம் விவாதிக்கப்படும். அதுவும் வெற்றி பெற்றால் பெரும் பலன் கிடைக்கும். அதன் மூலம், நமது எதிர்கால கடனை செலுத்துவதில் நாம் சலுகைகளை பெற முடியும்.

எனினும், இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் தற்போது 100 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது. இது ஒரு பெரிய தொகையாகும், மேலும் இந்த கடனையும் மற்ற கடன்களையும் வெற்றிகரமாக திருப்பிச் செலுத்துவதற்கு உதவும் கடன் நிலைத்தன்மையைக் கொண்டிருக்க ஒரு நாடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மக்களுக்கு முழுமையான பலன் கிடைக்க வேண்டும்

**ஹேமகுமார குணசேகர**
இலங்கை சர்வதேச வர்த்தக சபையின் பொதுச் செயலாளர்

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் நமது நாட்டுக்கும் மக்களுக்கும் முழுமையான பலன் கிடைக்க வேண்டும். இதனால் எந்த நன்மையும் இல்லை என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் அதை ஏற்க முடியாது.

கடனை திருப்பி செலுத்துவதில் தாமதம், வட்டி சதவீதம் குறைப்பு என்பனவற்றால் நாட்டுக்கு நன்மை உண்டாகும். இதன் மூலம் கடனை அடைக்க கிடைக்கும் பணத்தை நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்த முடியும். இதன் மூலம் மக்கள் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் உட்கட்டமைப்பை மேம்படுத்த முடியும். இது பொதுவாக அனைவருக்கும் நன்மையே.

நமது ஏற்றுமதி வருவாயை அதிகரிக்க நாம் உழைக்க வேண்டும். இது பற்றி விவாதம் செய்யாமல் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் ஒரே கண்ணோட்டத்தில் செயற்பட வேண்டும்.

## தொழில்முனைவோரை வலுப்படுத்த வேண்டும்

**நவாஸ் ரஜாப்தீன், தலைவர்**
நுண், சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களின் சம்மேளனம்

சர்வதேச நாணய நிதியத்துடன் நிபந்தனைக்குட்பட்ட கடன் திட்டத்தில் இலங்கை நுழைந்துள்ளது. இந்த முன்முயற்சியின் மூலம், சர்வதேச அளவில் மற்ற நிறுவனங்களிடமிருந்தும் நிதி மற்றும் சேவைகளைப் பெற எங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

இதன் விளைவாக, ஆசிய அபிவிருத்தி வங்கி சமீபத்தில் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை சலுகைக் கடனாக வழங்கியது. இது இந்த நாட்டில் தொழில் முனைவோர் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டது. அந்த வங்கியில் இருந்து பெறப்படும் பணம் கண்டிப்பாக நம் நாட்டின் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்குச் சேர வேண்டும்.

அவர்கள்தான் நம் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு.

கடன் பணம் முறையாக கிடைத்தால் நம் நாட்டில் உள்ள புதிய தொழில் முனைவோர், தொழிலதிபர்கள் இதன் மூலம் பயனடைவார்கள். அதன் மூலம் பொருளாதாரத்தில் விழிப்புணர்வு ஏற்படும். பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படும் போது, அரசின் வருமானம் அதிகரிக்கும். அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கும் போது, அரசாங்கத்தின் செலவும் அதிகரிக்கிறது. வளர்ச்சிப் பணிகள், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசனம், நீர் வழங்கல், மின்சாரம், வீடுகள் போன்ற அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் விரைவுபடுத்த அரசாங்கம் அதிக பணத்தை முதலீடு செய்ய முடியும். பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடையும் போது, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் கடன்களை செலுத்துவது எளிதாகிறது. எனவே, இந்த நேரத்தில், வீழ்ச்சியடைந்த தொழில்கள் மற்றும் வணிகங்களை மேம்படுத்துவதற்கு நாம் அதிக இடத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

## உலக வரலாற்றில் குறுகிய காலத்தில் காணப்பட்ட பெரிய மாற்றம்

**பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர்:**
தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர்



தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தரான பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கருத்துத் தெரிவிக்கையில், "பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த இலங்கை, பரிஸ் கிளப், சீனா, இந்தியா ஆகியவற்றுடன் அண்மையில் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளது. இதன் ஊடாக நாடு பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. உலக வரலாற்றில் குறுகிய காலத்தில் காணப்பட்ட பெரிய மாற்றமாக இது நோக்கப்படுகிறது. வங்குரோத்து நிலையை அடைந்த நாடொன்று குறுகிய காலத்திற்குள் இவ்வாறான மாற்றத்திற்கு சென்றிருப்பது ஒரு அதிசயமான நிகழ்வாகும்.

இக்கடன் மறுசீரமைப்பின் ஊடாக 2024 முதல் 2028 வரை இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டிய கடனை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக எமது நிதியைக் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஏற்கனவே நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொய்வு நிலையை அடைந்திருக்கின்றன. தற்போதைய கடன் மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும். குறிப்பாக நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித்தரக் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி அநிநிய செலாவணியை அதிகரித்துக் கொள்ளலாம்.

இது ஏனைய நாடுகளுக்கும் குறிப்பாக அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் நல்ல சமிக்ஞையைக் காட்டுவதால், இலங்கைக்கு மேலும் கடன் மற்றும் நிவாரணங்கள் கிடைப்பதற்கு வசதி அளிக்கும். இதன் ஊடாக ஏற்கனவே பிற்போடப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் தொடரவும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. குறிப்பாக மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. அதனை மீண்டும் வெளிநாட்டு உதவிகளுடன் தொடங்க வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

அதேபோன்று இடைநிறுத்தப்பட்டுள்ள ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுக்க உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி அளிக்க வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இலங்கை வங்குரோத்து நிலையில் இருந்து மீண்ட நாடாகக் கருதப்படுவதால், ஏனைய நாடுகளும் நிதி நிறுவனங்களும் கூட இலங்கைக்கு உதவ இது ஒரு வாய்ப்பாக அமையும்.

இதன் நிமித்தம் ஜனாதிபதியும் அரசாங்கமும் மேற்கொண்ட கடும் முயற்சிகளின் பிரதிபலனாகவே இந்தப் பிரதிபலனை அடைந்து கொள்ள முடிந்துள்ளது. சரியான பொருளாதாரத் திட்டங்களை சர்வதேச நாணய நிதியத்தின் உதவி, ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்களுடன் முன்னெடுத்ததன் ஊடாகவே இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் நிமித்தம் இந்த அரசாங்கத்தை நாம் பாராட்ட வேண்டும்.

எதிர்காலத்தில் இந்நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்த வேண்டும். இறக்குமதியைக் குறைக்க வேண்டும். இதன் ஊடாக அந்நியச் செலாவணியை மீதப்படுத்தலாம். வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு திறமைசாலிகளை அனுப்பி வைப்பதன் மூலம் அதிக அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும். அது அந்நியச் செலாவணி இருப்பை அதிகரிக்க வழிவகுக்கும். அது எமது பொருளாதாரத்தை வலுப்படுத்தும்.

தென்னாசியாவில் இந்தியா எவ்வாறு ஒரு வலுவான பொருளாதார நாடாக விளங்குகிறதோ, அதே போன்ற நிலையை இலங்கையும் அடைய வாய்ப்பு உள்ளது என்பதையே இக்கடன் மறுசீரமைப்பின் வெற்றி எமக்கு எடுத்துக்காட்டுகிறது. இது இலங்கை அபிவிருத்தியின் பக்கம் செல்வதற்கான சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது.

## இதுவொரு நம்பிக்கையான பயணத்தின் ஆரம்பம்

**தம்மிக்க சமரவிக்கிரம ஆலோசகர்–**
தொழில் அமைச்சின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பிரிவு



இலங்கை விரைவான பொருளாதார அபிவிருத்தியை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ச்சியாக ஆறு காலாண்டுகளாக எதிர்மறையான பொருளாதார பெறுமதிகளைப் பதிவுசெய்துள்ள இலங்கை, தற்போது பொருளாதார வளர்ச்சியின் காலகட்டத்திற்குள் நுழைந்துள்ளது. இதுவொரு நம்பிக்கையான பயணத்தின் ஆரம்பம். ஆனால் நாம் உடனடியாக ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி செல்ல வேண்டும்.

சுதந்திரத்திற்குப் பிறகு, இலங்கை விரைவான பொருளாதார வளர்ச்சியை நோக்கி அடியெடுத்து வைக்க முயற்சிக்கிறது. சில சமயங்களில் வெற்றியும் பெற்றுள்ளது. பின் வாங்கியுமுள்ளது. 2022இல் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டும். இனி இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த கட்டத்தில் கடன் மறுசீரமைப்பு மிகவும் முக்கியமானது. மற்றும் மகிழ்ச்சிக்கும் அதுதான் காரணம். ஆனால் அதில் எங்களுக்கு எந்த முன்னேற்றமும் இல்லை. ஒவ்வொருத்தரிடமும் கடன் வாங்கி வாழ முடியாது. நாம் தைரியமாக எழுந்து நிற்க வேண்டும். உள்ளூர் தொழில்மயமாக்கல் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் பெருமளவு வருவாயை ஈட்டுவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு செய்ய வேண்டியது நமது தொழில் முனைவை மேம்படுத்துவதுதான்.

தற்போது, நம் நாட்டில் தொழில் முனைவோர் மக்கள் தொகையில் 9.8% ஆக உள்ளனர். இது மிகக் குறைந்த எண்ணிக்கையாகும். குறைந் த பட்சம் 2030ல் இது 10% ஆக உயர்த்தப்பட வேண்டும். நமது தொழில் முனைவோர் கிராம அளவி ல் விழித்துக் கொள்ள வேண்டும்.

பிராந்திய, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் தொழிலதிபர்களை உருவாக்க வேண்டும். மேலும், அவர்கள் சர்வதேசத்தை வெல்ல வேண்டும். அவ்வாறு செய்தால் எதிர்காலத்தில் நாம் கௌரவமான நாடாக, இனமாக மேம்படலாம்.

## ஆளும், எதிர்க்கட்சிகள் இணைந்து செயற்படுவதே இன்றைய தேவை!

**சட்டத்தரணி கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா**
மேற்கிந்திய தீவுகள், ஜமைக்கா தொழில்நுட்ப பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்



இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, நமது நாடு மிகக் கடுமையான வீழ்ச்சிக்குள்ளாகியிருந்தது. கடனை அடைக்க முடியாத வங்குரோத்து நாடாக நமது நாடு மாறியிருந்தது.

இந்த பயங்கரமான படுகுழியில் இருந்து வெளியேறுவதே எங்கள் மிக முக்கியமான விடயமாகவிருந்து, அதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தோம். அங்கு நாங்கள் உடனடியாக தீர்வுகளுக்கு செல்ல வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் எங்களிடம் இருந்த ஒரே அறிவியல் ரீதியான தீர்வு IMF க்கு செல்வதுதான். அல்லது சர்வதேச நாணய நிதியத்திலிருந்து நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெறுதல். இது நாம் முன்பு செய்த ஒன்று. நாங்கள் அங்கு சென்றது 17வது தடவையாகும். நாட்டை கடனில் இருந்து விடுவிக்க நாம் எமது வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அதற்கு காலம் எடுக்கும். ஆனாலும் ஒரு நாடாக, மக்களின் அன்றாட வாழ்க்கையை பராமரிக்கவும் பிரச்சினை தோன்றியிருந்தது. இந்த கட்டத்தில். நாங்கள் IMF இடம் கடன் வாங்கச் சென்றோம். அங்கு பல நிபந்தனைகளுக்கு அடிபணிய வேண்டும். அவற்றை சாதகமாக மாற்றி அமைக்க வேண்டும். IMF ஒப்பந்தத்தை நாங்கள் திறம்பட பயன்படுத்த வேண்டும்.

IMF க்கு சென்றது எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாமல் இருக்கலாம். ஆனால், 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள எங்களுக்கு உதவியாகவும், பாலமாகவும் இருந்தது. கடன் சுமையிலிருந்து விடுபட அனைவரும் பாடுபட வேண்டும். அதற்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு கிடையாது. தலைவர்கள், பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் அவ்வாறு நினைக்க வேண்டும். இப்போது நமது நாடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து ஓரளவுக்கு மீண்ட நாடாகவுள்ளது.

IMF பற்றி ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளன.

ஆனால் அதன் அனைத்து பணிகளையும் யாரும் நிராகரிக்க முடியாது.

அப்படியானால், இந்த நேரத்தில், அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிலைமையை மிகவும் பயனுள்ளதாக மாற்ற வேண்டும். நான் இரண்டு சர்வதேச உதாரணங்களை எடுத்துக்கொள்கிறேன். அமெரிக்காவில் ஒரு பெரிய பிரச்சினை இருந்தது. அவர்களால் கடனை செலுத்த முடியவில்லை. அந்த நெருக்கடியிலிருந்து தங்கள் நாட்டைக் காப்பாற்ற அன்று அங்கிருந்த குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டனர். நமது நாட்டின் தலைவர்களும் அதை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் இதுபோன்ற கடன் பிரச்சினை இருந்தது. அன்று இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங்கும் எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டை கடனில் இருந்து விடுவிக்கும் திட்டத்தை செயல்படுத்தினர்.

இன்றும் எமது நாட்டின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் அவ்வாறே செயற்பட வேண்டும். யார் ஆட்சி செய்தாலும், இல்லாவிட்டாலும், இந்த நாடு வாங்கிய கடனை திருப்பி செலுத்த வேண்டும். அதற்காக அறிவுபூர்வமான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். செயல்படுத்தப்பட வேண்டும்.

அதன்படி, நாளையும் (02) நாளை மறுதினமும் (03) நமது நாட்டின் பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் இதைப் பற்றி விவாதிப்பதும் பேசுவதும் முக்கியமானதும் பெறுமதியானதும் ஆகும்.. இந்த உரையாடலில், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மிகவும் மதிப்புமிக்க மற்றும் இணக்கமான நடவடிக்கையை மேற்கொள்ள சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அது ஜனநாயக நாட்டின் ஒரு பெரிய பண்பு. அதற்கு முன்னுதாரணமாக விளங்கும் சந்தர்ப்பம் தற்போது எமது பாராளுமன்றத்திற்கு கிடைத்துள்ளது.

## சர்வதேச நம்பிக்கையை வென்ற ரணிலின் தலைமைத்துவம்

மேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் **கலாநிதி ந. குமரகுருபரன்**



சர்வதேச நம்பிக்கையை வென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் காரணமாகவே இலங்கைக்கு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி கிடைத்துள்ளது என்று மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ந. குமரகுருபரன் கருத்துத் தெரிவித்தார். "நாடு மிகத் துரிதமாக சகஜ நிலைக்குத் திரும்புகின்றதென்றால், அதற்கு இலங்கை அரசின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளும், சர்வதேச சமூகம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது கொண்டிருக்கும் நம்பிக்கையும்தான் காரணம். இலங்கை அரசு அதன் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. அதற்கமைவாக இலங்கை அரசுக்கும் இலங்கையின் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவிற்கும் (OCC) இடையில் 2024 ஜூன் 26ஆம் திகதியன்று இறுதி ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இதுவொரு பாரிய வெற்றி. இந்த ஒப்பந்தம் 2 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. கடன் வழங்கும் சர்வதேச நாடுகளின் பாராட்டைப் பெறுமளவுக்கு நாம் வளர்ச்சியடைந்திருக்கின்றோம்" என்று கலாநிதி குமரகுருபரன் தெரிவித்தார். "வங்குரோத்து நிலையில் இருந்து இலங்கை மிகத்துரிதமாக மீண்டு வருகின்றது என்பதே ஒரு பாராட்டுக்குரிய விடயம். உலகில் பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்த கிரேக்கம் மற்றும் ஏனைய நாடுகளைப் பார்த்தால் அவை எவையும் எம்மைப் போல மிகத் துரிதமாக மீண்டு வரவில்லை. கிரேக்கம் வங்குரோத்து நிலையில் இருந்த மீள 11 வருடங்கள் தேவைப்பட்டது. அந்த வகையில் இலங்கை அதலபாதாளத்தில் இருந்த பொருளாதாரத்தை மிகத்துரிதமாக மீட்டிருக்கின்றது. இது எந்தவொரு அரசியல் கட்சியாலும் அது சாத்தியமாகவில்லை.

சர்வதேசத்தின் நம்பிக்கையை வென்ற தலைமைத்துவம் எங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்தது. அதனால்தான் எம்மால் மீட்சிபெற முடிந்தது" என்றும் குமரகுருபரன் தெரிவித்தார்.

---

## வன்முறைக்கு தயாரானோர் ஆயுதங்களுடன் கைது

யாழ் விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் வன்முறை சம்பவம் ஒன்றுக்கு தயாரான வன்முறை கும்பல் ஒன்றினை ஆயுதங்களுடன் கோப்பாய் பொலிஸார் வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றிற்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் மூவர் அடங்கிய கும்பல் ஒன்று நடமாடுவதாக கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மூவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர்கள் எனவும் அவர்களிடம் இருந்து மூன்று வாள்கள் மற்றும் இரண்டு கைக்கோடாரிகள் என்பவற்றை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நீராடச் சென்ற 14 வயது சிறுவன் சடலமாக மீட்பு

இரணைமடுக் குளத்தில் நீராடச் சென்ற 14 வயது சிறுவன் காணாமல் போன நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தில் நீராடுவதற்காக காணாமல் போன சிறுவனும், அவனது சகோதரன் மற்றும் இரு நண்பர்களும் சென்றுள்ளனர்.

காலை 11.30 மணியளவில் நீராடச் சென்ற இவர்களில் செல்வரத்தினம் றுசாந்தன் எனும் 14 வயதுடைய சிறுவன் நீர்ல் மூழ்கியுள்ளார். இதுபற்றி அருகில் உள்ள இராணுவ முகாமிற்கும், உறவினர்களிற்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சிவனை தேடும் பணியில் இரணைமடு மீனவர்களும், பிரதேச மக்களுமாக நீண்ட நேரமாக தேடி வந்த நிலையில் நேற்று முன்தினம் மீட்க முடியாது போனது.

நேற்று மீண்டும் தேடப்பட்ட நிலையில் குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார்.

காணாமல் போன சிறுவன் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தரம் 9ல் கல்வி கற்று வருவதுடன், முறிகண்டி வசந்தநகர் பகுதியில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பெட்ரோல் விலை குறைப்பு

**ஒக்டேன் 92 ரக ஒரு லீட்டர் பெட்ரோலின் விலை 11 ரூபாவால் குறைப்பு**
**புதிய விலை 344 ரூபா**

**ஒக்டேன் 95 ரக ஒரு லீட்டர் பெட்ரோலின் விலை 41 ரூபாவால் குறைப்பு**
**புதிய விலை 379 ரூபா**

நேற்று (30) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெட்ரோலிய கூட்டுதாபனம் தெரிவித்துள்ளது. இதன்படி, ஒக்டேன் 92 ரக ஒரு லீட்டர் பெட்ரோலின் விலை 11 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலையாக 344 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.ஒக்டேன் 95 ரக ஒரு லீட்டர் பெட்ரோலின் விலை 41 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலையாக 379 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



## புதிய காத்தான்குடியில் ஐ.தே.க கிளை அலுவலகம் திறந்து வைப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

புதிய காத்தான்குடியில் ஐக்கிய தேசியக் கட்சி கிளை அலுவலகம் ஒன்று 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் திறந்து வைக்கப்பட்டது



ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய காத்தான்குடி வலய அமைப்பாளர் எம். எஸ். முபாரக் தலைமையில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்

## கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையை திறந்து வைத்த கிழக்கு மாகாண ஆளுநர்





வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழாவையொட்டிய கதிர்காமத்துக்கான குமுண தேசிய பூங்கா ஊடான காட்டுப் பாதை விசேட பூஜைகளுடன் நேற்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் காலை 6.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

பாத யாத்திரிகர்களுக்காக பிரதேச செயலகம், பிரதேச சபை, சுகாதார அமைச்சு, பொலிஸ் மற்றும் இராணுவத்தின் மேற்பார்வையுடன் மருத்துவம், நீர் வழங்கல், தங்குமிடம் மற்றும் சுகாதார வசதிகள் என்பனவும் ஆளுநரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் கலந்து கொண்டார்.

## சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு மாற்றுக் காணியும் நஷ்டஈடும்

### பொன்னன்வெளி விவசாயிகள் கோரிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

ஒலுவில் பொன்னன்வெளி விவசாயக் காணிகளுக்கு மாற்றுக் காணி மற்றும் நஷ்டஈடு வழங்குமாறு, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாதிக்கப்பட்டுள்ள மக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி சுமார் 200 ஏக்கர் நெற்காணி கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் சுவீகரிக்கப்பட்டது.

இதனால் சுமார் 75 குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணி இழந்தவர்களுக்கு மாற்றுக் காணி வழங்குவதற்கு ஒலுவில் பாலையடிவட்டை பிரதேசத்தில் காணிகள் அடையாளம் காணப்பட்டு காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த வேளையில் திடீரென்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இக் காணிகளுக்கு மாற்றுக் காணி வழங்குமாறு பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கவில்லையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உங்களது ஆட்சியில் தற்போது காணி இழந்தவர்களுக்கு காணி வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு காணிகள் மீள வழங்கப்பட்டுவருவதனை பாராட்டுகின்றோம்.

எனவே, எதிர்வரும் தேர்தல்களுக்கு முன்னர் சுவீகரிக்கப்பட்டுள்ள பொன்னன்வெளி கண்ட விவசாயக் காணிகளுக்கு மாற்றுக் காணி மற்றும் நஷ்டஈடு வழங்குமாறு அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## திருத்தப்பட்ட வீதி விளக்குகள்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று மாநகரின் பிரதான வீதியில் நீண்ட காலமாக இயங்காமல் காணப்பட்ட வீதி விளக்குகள் மாநகர சபையினால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் ஏ.ரீ. எம்.றாபி தெரிவித்தார்.



இப்பிரதேசத்தில் உள்ள உள்ளக வீதிகளில் நீர்வழங்கல் சபையினால் பொதுமக்கள் குடிநீரை பெற்றுக் கொள்வதற்காக தோண்டப்பட்ட குழிகளும் பொதுமக்களுக்கு பல அசௌகரிகங்களை ஏற்படுத்தியமையால் அதனையும் அக்கரைப்பற்று மாநகர சபை சீர்செய்துள்ளது.

இவ்வேலைத்திட்டத்தை சிறப்பான முறையில் முன்னெடுத்து இப்பகுதி மக்களை அசௌகரிகங்களில் இருந்து விடுபட செய்த அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

## சிறந்த முறையில் உணவு கையாளும் நிறுவனங்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(பாலமுனை விசேட நிருபர்)



கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவு கையாளும் நிறுவனங்களிடையே மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தலில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

அந்நிறுவனங்களுக்கு தரச் சான்றிதழ் மற்றும் சிறப்பு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் (27) மாளிகைக்காடு பாவா றோயல் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம். பௌசாத், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவுக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவு, மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா, எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள், உணவு உற்பத்தி நிறுவனங்கள், வெதுப்பகம், சுப்பர் மார்கட், சிற்றூண்டிச்சாலை உள்ளிட்ட 5 வகையான உணவு கையாளும் நிறுவனங்களிடையே நடாத்தப்பட்ட தரப்படுத்தலில் பாதுகாப்பாக உணவு கையாளும் சிறந்த நிறுவனங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நிறுவனங்களுக்கும், A மற்றும் B தரங்களைப் பெற்ற நிறுவனங்களுக்குமே குறித்த சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரிக்கும் செயலமர்வு திருமலையில்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரித்து பொருளாதார ரீதியாக பாதிப்புற்ற பெண்களுக்கு உதவும் வகையிலான செயலமர்வொன்று திருகோணமலை ஜேகப் பீச் றிசோட்டில் கடந்த 27ஆம் திகதியன்று பெக்ட் மற்றும் கிராமிய பொருளாதார, சமூக அபிவிருத்தி அமைப்பின் (ரெக்டோ) ஏற்பாட்டில் நடைபெற்றது.

ரெக்டோ நிறுவனத்தின் தலைவர் ஜே.எம்.அஷார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்திற்குட்பட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்டத்தில் பெண் தலைமைகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இணைப்பாளர்களாக மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட அதிகாரி அருண் சிவஞானம் மற்றும் பெண் செயற்பாட்டாளர் எம்.ஏ.நஸ்றின் டிலானி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் இதன்போது ரெக்டோ நிர்வாக, நிதி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.அனீஸ் உட்பட ரெக்டோ நிறுவன உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி முதலிடம்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) பாட விதானத்துடன் தொடர்பான இணைப்பாட விதான செயற்பாடாக சனிக்கிழமை (29) நடைபெற்ற அக்கரைப்பற்று கோட்ட மட்ட கணித ஒலிம்பியாட் போட்டிகளில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி 10 இடங்களைப் பெற்று அக்கரைப்பற்று கோட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளதாக அதிபர் ஏ.எச்.பௌஸ் தெரிவித்தார். அந்தவகையில், தரம் 09 இல் எம்.ஐ.எப்.இபாத், எம்.எச்.மிஷால் முஹம்மத், தரம் 10 இல் என்.அய்சத் ஹயாம், ஏ.எம்.மஸீன் பதீஹ், தரம் 12 இல் எம்.எச்.ஹசீப் அஹமட், ரீ.ஹாதீக் அஹமட், தரம் 13இல் எம்.எப்.நப்லி அஹமட், என். முஹம்மட் சிமாம், கே.முஹாத், என். முஹம்மட் ஸமி ஆகிய மாணவர்களே இந்த வெற்றியை பெற்றவர்களாவார்கள்.

## கடைக்கு சீல்வைத்த நகரசபை ஊழியர் மீது தாக்குதல்

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை, திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அண்மித்த கடையொன்றுக்கு சீல் வைத்த நகர சபை ஊழியர் இனந்தெரியாத ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார்

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் கோயிலை அண்மித்த பகுதியில் கசிப்பு விற்பனை செய்த கடைக்கு திருகோணமலை நகர சபை சீல் வைத்தது. சீல் வைத்த நகரசபை ஊழியர் அடையாளந் தெரியாத நபர் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் திருகோணமலை திருகோணேஸ்வர ஆலயத்தினை அண்மித்த கடை ஒன்றில் கசிப்பு விற்பனை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டு குறித்த கடையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## மட்டக்களப்பில் 10 வீதமான மக்கள் வாக்காளர் பட்டியலில் தங்களை பதிவதில்லை

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் முகாமைத்துவ சேவைகள் அதிகாரி

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 சதவீதமான வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களைப் பதிந்து கொள்வதில்லை என்ற விபரம் தெரியவந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு அலுவலக முகாமைத்துவ சேவைகள் அதிகாரி பி. சத்தியபவான் தெரிவித்தார்.

மாவட்ட சர்வமத செயற்குழுவின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் சனசமூக மண்டபத்தில் இடம்பெற்றபோது அவர் இந்த விபரங்களைத் தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் இராசையா மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சர்வமத செயற்குழுவின் சமாதான செயற்பாட்டாளர்கள், மதப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அந்நிகழ்வில் தேர்தல் கால செயற்பாடுகள் சம்பந்தமாக தொடர்ந்து தெளிவுபடுத்திய தேர்தல்கள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு அலுவலக முகாமைத்துவ சேவைகள் அதிகாரி சத்தியபவான், மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு காரணங்களின் நிமித்தம் 10 சதவீதமான வாக்காளர்கள் தங்களைப் பதிந்து கொள்ளாத நிலைமைகள் காணப்படுகின்றது.

கவனயீனம், தவறு அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக இவ்வாறான நிகழ்வு இடம்பெற்று விடுகின்றது.

எனவே, இந்த விடயத்தில் மக்களுக்காக மக்களோடு சேர்ந்து நெருக்கமாகப் பணியாற்றும் மாவட்ட சர்வமத செயற்குழு போன்ற அமைப்புக்கள் இது விடயமாக மக்களுக்கு தெளிவான விளக்கங்களைக் வழங்குவதன் மூலம் இனிவரும் காலங்களில் வாக்காளர் இடாப்பில் பெயர் விடுபட்டுப்போன குடியிருப்பாளர்கள் தங்களை வாக்காளர்களாகப் பதிந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும்." என்றார்.

நிகழ்வில் மாவட்ட சர்வமத செயற்குழுவின் செயற்பாட்டாளர்கள் தேர்தல் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களைக் கேட்டுத் தெளிவுபெற்றனர்.

## ஏறாவூர் கிழக்கு புற்றுநோய் பராமரிப்பு நிலையத்திற்கு உதவி



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பான ஸஹிரியன்' 90 நண்பர்கள் வட்டம், ஏறாவூர் கிழக்கு புற்றுநோய் பராமரிப்பு நிலையத்துக்கு அண்மையில் விஜயம் செய்தனர்.

பராமரிப்பு நிலையத்தில் சிகிச்சை பெறும் நோயாளர்களை பார்வையிட்டதுடன் அவர்களுக்கான தேவையான உதவிகளையும் செய்தனர். கல்வி உதவிப்பணிகளுடன், சமூக சுகாதார துறையில் இவ் அமைப்பு பல்வேறு உதவிகளை பிரதேசம் தாண்டி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.







2024 ஆம் ஆண்டுக்கான, அகில இலங்கை தமிழ் மொழித்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள குறுமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் செ.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏனைய கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர். (பெரிய போரதீவு நிருபர்)

# கம்பளை, அம்புலுவாவ 'கேபள் கார்' சேவைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விருப்பம்

## இராஜாங்க அமைச்சர் அனுராதா ஜயரத்ன தெரிவிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

கம்பளை அம்புலுவாவ உயிரியல் பல்வகைமை சுற்றாடல் பிரதேசத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் பலர் முதலீடுகளை மேற்கொள்ள உள்ளதுடன் 'கேபள் கார்' போக்குவரத்து வசதிகள் ஆரம்பிக்கபட உள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலை புனரமைப்பு இராஜாங்க அமைச்சரும் அம்புலுவாவ நம்பிக்கை நிதியத்தின் தலைவருமான அனுராதா ஜயரத்ன தெரிவித்தார்.

கம்பளை அம்புலுவாவ உயிரியல் பல்வகைமை சுற்றாடலில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

சிங்கள மன்னர்கள் காலத்தில் கம்பளை ஒரு இராஜதானியாக இருந்தது. அந்த நேரத்தில் அம்புலுவாவ சரித்திரப் பிரசித்தம் பெற்றுக் காணப்பட்டது. இருப்பினும் அதன் பிறகு 1990கள் வரை அம்புலுவாவ மலைக்குன்று கைவிடப்பட்ட ஒரு இடமாகவும் புதர்கள் நிறைந்த ஒரு இடமாகவும் இருந்தது. காலம் சென்ற பிரதமர் தி.மு. ஜயரத்னவின் சிந்தனையால் மேற்படி மலைக்குன்று மாற்றி அமைக்கப்பட்டு இன்று ஒரு நாளைக்கு சுமார் 2000 சுற்றுலா பயணிகள் வருகை தரும் அளவுக்கு அது அபிவிருத்தி அடைந்துள்ளது. சுமார் 927 ஏக்கருக்கும் அதிகமாக நிலப்பரப்பில் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு கட்டப்பட்ட கட்டிடங்கள், கோபுரங்கள் அமைந்துள்ள இவ்விடம் அம்புலுவாவ நம்பிக்கையாளர் சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதஸ்தாபனங்களும் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. சிலர் இதனை எமது குடும் சொத்தாக நினைக்கின்றனர். இது நம்பிக்கை நிதியத்திற்குச் சொந்தமானது. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்ட மூலத்தின் படி நம்பிக்கயைாளர் சபை நிறுவப்பட்டு, அச்சபையே இதனை நிர்வகிக்கிறது.

நாம் புதிய திட்டங்களை முன் எடுத்துள்ளோம். போக்குவரத்தை இலகு படுத்தவும், அம்புலுவாவையை பிரபல்யப்படுத்தவும், இலநகையில் வெளிநாட்டு சுற்றுலா துறையை கவரும் விதத்திலும் 'கேபள் கார்' வசதியை அறிமுகம் செய்ய உள்ளோம். அதற்கான நிர்மாணப் பணிகள் நடந்து கொண்டுள்ளன.

இது தவிர பிரபல நட்சத்திர ஹோட்டல் நிறுவனங்கள் பல சிற்றுண்டி, மற்றும் உணவுவகைகள், உபசரிப்பு போன்ற பணிகளுக்காக இங்கு முதலீடு செய்துள்ளன. உலகில் மிகப் பெரிய செல்வந்தரும் முதலீட்டாளருமாக இயோன் மஸ் உட்பட இன்னும் சிலருடன் அம்புலுவாவையில் முதலீடு செய்வது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டில் வருவாய்களை அதிகரிக்கும் ஒரு உபாயமாக அம்புலுவாவ தொழிற்படுகிறது. இங்குள்ள சீதோஷ்ண நிலை உயர் கட்டிட அமைப்பு உயிரியல் பல்வகைமை உட்பட வெளியூர் சுற்றுலாத் துறையினருக்கான குதிரைச் சவாரி, மலைச்சாரலில் பாரிய மரங்களுக் கிடையில் தொங்கு பாலம் அல்லது கயிற்றுப் பாலங்கள் பலவற்றை அமைத்து அதில் சுற்றுலாத் துறையினரை சவாரி செய்யும் வாய்ப்பையும் ஏற்படுத்த உள்ளோம்.

மலைச்சாரல்

# வெல்லவாய மொனராகலை பிரதான வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்

**ஊவா சுழற்சி நிருபர்**

வெல்லவாய மொனராகலை பிரதான வீதியின் புத்தல பொலிஸ் எல்லைக்குட்பட்ட மல்வத்த பிரதேசத்தில் முச்சக்கரவண்டியும் லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். கடந்த 29ஆம் திகதி வெல்லவாய மொனராகலை பிரதான வீதியிலிருந்து மல்வத்த வீதியை கடக்க முற்பட்ட முச்சக்கர வண்டியை பின்புறமாக தொடர்ந்து சென்று கொண்டிருந்த லொறி எதிர்பாராத விதமாக முட்டி மோதியதில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளதாகவும்.

முச்சக்கர வண்டியை செலுத்திய ஒருவரே படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் புத்தள பொலிசார் தெரிவித்தனர்.

# பதுளை ரயில் தடம் புரண்டு விபத்து

கொழும்பிலிருந்து பதுளையைநோக்கி பயணித்த இரவு நேர தபால் புகையிரதம் நாவலப்பிட்டி ரயில் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு உட்பட்ட கலபட ரயில் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ரயில் பாலம் பகுதியில் (30) அதிகாலை தடம் புரண்டுள்ளதாக நாவலப்பிட்டி புகையிரத கட்டுப்பாட்டு நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். இதன் காரணமாக மலையகத்திற்கான புகையிரத சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அதிகாரி கொழும்பு நோக்கி பதுளையில் இருந்து பயணித்த ரயில் ஹட்டன் புகையிரத நிலையம் வரை தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# கதிர்காமத்திற்கு தலவாக்கலையிலிருந்து பாதயாத்திரை

**தலவாக்கலை குறூப் நிருபர்**

கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலய பாதயாத்திரை குழுவினர் தமது பாதயாத்திரை பயணத்தை நேற்று முன்தினம் (29) சனிக்கிழமை ஆரம்பித்தனர். யாத்திரை குழுவினர் தலவாக்கலை, லிந்துலை, நானுஓயா, நுவரெலியா வழியாக சீத்தா எலிய, ஹக்கல, பொரகஸ், கெப்பட்டிப்பொல, வெலிமட, பண்டாரவளை, எல்ல, வெல்லவாய, புத்தள வழியாக கதிர்காமத்தை சென்றடையவுள்ளனர்.



# வெலிமடை தரகலப் பகுதியில் பஸ் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து

**ஊவா சுழற்சி நிருபர்**

வெலிமடை தரகலப் பகுதியில் இரண்டு பஸ் ஒன்றோடு ஒன்று மோதியதில் 11 பேர் காயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

வெலிமடையிலிருந்து அம்பகஸ்தோவ பிரதேசத்துக்கு சென்று கொண்டிருந்த இரு தனியார் பஸ்கள் ஒன்றை ஒன்று முந்தி செல்லும் போது ஒன்றுடன் ஒன்று முட்டி மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் வெலிமடை வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விடத்தில் ஏழு பெண்களும் மூன்று ஆண்களும் படுகாயம் அடைந்த நிலையில் வெலிமடை தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை இவ்விபத்து குறித்து தீவிர விசாரணைகளை வெலிமடை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கைவிடப்பட்ட இரத்தினக்கல் குழிகளால் டெங்கு அபாயம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இரத்தினக்கல் அகழ்ந்து விட்டு கைவிடப்பட்ட பாழடைந்த நிலையிலுள்ள குழிகளால் டெங்கு நோய் பரவும் ஆபத்து நிலவுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவலாக நடந்து வரும் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வின் பின் தோண்டப்பட்ட குழிகள் அவ்வாறே கைவிடப்படுவதால் இவற்றில் நுளம்புகளின் ஆதிக்கம் அதிகரித்து டெங்கு உட்பட ஏனைய நோய்களுக்கான அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருவதாக சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் பொதுமக்களும் முறைப்பாடுகளை செய்து வருகின்றனர். தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் இவற்றில் நீர் நிரம்பி நோய்கள் பரவும் ஆபத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க இரத்தினக்கல் அதிகார சபை இவ்வாறான குழிகளை மூடி விட அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் சூழல் பாதுகாப்பு அமைப்புகள் வேண்டுகோள் விடுக்கின்றன.

## இரத்தினபுரி மாவட்டத்தில்

# பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றாமையால் நீர் நிலைகளில் உயிர் ஆபத்து

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தின் ஆறுகள் மற்றும் நீர் நிலைகளில் பொழுது போக்குக்காக அல்லது குளிப்பதற்காக வருகை தருவோர் உயிரிழத்தல் மற்றும் ஆபத்துக்களில் சிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

அவதானக் குறைவால் அண்மைக் காலமாக இந்த விபத்துக்களில் சிக்கி பல பாதிப்புக்கள் ஏற்பட்டு வருவதாக இரத்தினபுரி மாவட்ட நீர்வீ ழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு தெரிவிக்கிறது.

இரத்தினபுரி மாவட்டத்தின் பெலி ஹுல்ஓயா உட்பட இலங்கையில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த பல பிரதேசங்கள் காணப்படுகின்றன.

அதேபோன்று இப்பகுதியில் அடிக்கடி மழை பெய்தால் இவற்றில் நீராடுவது குறித்து பரவலான அறிவுறுத்தல்கள் இங்குள்ள பெயர்ப்பலகைகளில் எழுதப்பட்டுள்ளன.

இந்த அறிவுறுத்தல்களைக் கவனிக்காது அல்லது அலட்சியம் செய்து சிலர் நீராடுவதால் இந்த ஆறுகளி ல் அடிக்கடி உயிர்பலிகளும் ஆபத்துக்களும் இடம்பெற்று வருவதாக இப்பிரதேச மக்களும் உயிர்காப்பு பிரிவுகளின் உத்தியோகத்தர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

# வை. எம். எம். ஏ. பேரவை ஆளுமைமிக்க இளைஞர்களை உருவாக்கி வருகிறது

## துருக்கி உயர் ஸ்தானிகர்

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை நாட்டுக்குத் தேவையான நல்ல திறமையான ஆளுமைமிக்க இளைஞர்களை உருவாக்கி வருவதாக துருக்கி உயர் ஸ்தானிகராலயத்தின் உயர் ஸ்தானிகர் செமிஹ் லுட்பு டகுத் தெரிவித்தார்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 74 ஆவது ஆண்டு தேசிய மாநாடு இலங்கை மன்றக் கல்லூரியில் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக துருக்கி உயர் ஸ்தானிகராலயத்தின் உயர்ஸ்தானிகர் செமிஹ் லுட்பு டகுத் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் தவிசாளர் சட்டத்தரணி எல். தி. பி. தெஹிதெனியவும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இதன் போது முன்னாள் அமைச்சர் ஏ. எச். ஏ. பௌசி, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, கல்வி அமைச்சின் முஸ்லிம் கல்விப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் நசுமுதீன், சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ. எம். நவவி, முன்னாள் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர்கள், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியச் செயலாளர் சுக்ரி, பொருளாளர் பிர்தௌஸ் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலான பிரமுகர்களுடன் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வை. எம். எம். ஏ. கிளை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

நாடளாவிய ரீதியில் சிறந்த முறையில் திறமைகளைக் காட்டிய கிளைச் சங்கங்களுக்கான பரிசில்கள் வழங்குதல், தேசிய மாவட்டத்தில் வருடாந்தம் வழங்கப்படும் விசேட விருது சமூகச் செயற்பாட்டாளர் ஹில்ரு சித்தீக்கு வழங்கப்பட்டது.

**இக்பால் அலி**

# வை.எம்.எம்.ஏ.பேரவையின் 74ஆவது தேசிய மாநாடு

**கொழும்பு தினகரன் நிருபர்**

அகில இலங்கை வை.எம்.எம். ஏ.பேரவையின் 74ஆவது தேசிய மாநாடு நேற்று முன்தினம் சனிக்கிழமை ( 29) மாலை இலங்கை மன்றக் கல்லூரியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வை.எம்.எம்.ஏ.பேரவை தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ ஹமீட்(Ihsaan A Hameed) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான துருக்கி தூதுவர் செமி லுட்பூ துர்கத்(Semih Lutfu Turgut) பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி எல்.ரீ.பி.தெஹிதெனியவும்(L.T.B Dehideniya) கலந்து கொண்டார்.

வை.எம்.எம்.ஏ பேரவையைச் சேர்ந்த போஷகர் காலித் எம் பாரூக்(Khalid M Farook), சட்டத்தரணி அஸ்ரப் ரூமி (lawyer Ashraf Roomi), தேசிய பொருளாளர் ரி.டி.எம்.பிர்தௌஸ் (T.D.M.Firdaws), பேரவை தேசிய பொதுச் செயலாளர் ஆசிப் சுக்ரி(ASIF Shukri) ஆகியோர் கலந்து கொண்டனர். விசேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா செயலாளர் அஷ் ஷெய்க் அர்கம் நூராமித், முன்னாள் கொழும்பு மேயர் அஸாத் சாலி உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



தலைமையுரையை பேரவை தேசிய தலைவர் Ihsaan A Hameed நிகழ்த்தியதுடன் தேசிய பொது பொருளாளர் ரி.டி.எம்.பிர்தௌஸ் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் கௌரவ அதிதி நீதிபதி எல்.ரீ.பி. தெஹிதெனிய, பிரதம அதிதி இலங்கைக்கான துருக்கி தூதுவர் செமி லுத்பூ துர்கத் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நாடளாவிய ரீதியிலுள்ள வை.எம்.எம்.ஏ பேரவை உறுப்பினர்களுக்கு விசேட விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. வை.எம்.எம்.ஏ பேரவையினால் சுபான் நினைவு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து சிறப்பித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவர் நீதிபதி எல்.ரீ.பி.தெஹிதெனிய, பிரதம அதிதி இலங்கைக்கான துருக்கி தூதுவர் செமி லுட்பூ துர்கத் ஆகியோர் பேரவையினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நன்றியுரையை பிரதி பொதுச் செயலாளர் பராஸ் பாரூக் நிகழ்த்தினார்.

# உதைபந்தாட்டப் போட்டிகளில் வெலிகம அறபா மத்திய கல்லூரி சாதனை








**வெலிகம தினகரன் நிருபர்**

20, 18, 16 ஆகிய மூன்று வயது மட்டங்களுக்கு கீழ் இடம்பெற்ற மாத்தறை வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைப்பந்தாட்டப் போட்டிகளில் வெலிகம அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சாதனை படைத்துள்ளது. 20 மற்றும் 18 வயதுக்கீழ் இடம்பெற்ற உதைப் பந்தாட்டப் போட்டிகளில் இப்பாடசாலை வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 16 வயதுக் கீழ் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. 20 வயதுக்கு கீழ் இடம் பெற்ற போட்டிகளில் வெலிகம அறபா முதற் போட்டியில் பிரபல பாடசாலையான சென்ட் தோமஸ் கல்லூரியோடு விளையாடி (10) என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

இறுதிப் போட்டியில் சென்ட் சேர்விசஸ் கல்லூரியோடு போட்டியிட்டு (10) என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டி சம்பியன் ஆனது. 18 வயதுக் கீழ் நடைபெற்ற போட்டிகளில் மாத்தறை தாருல் உலூம் மகா வித்தியாலத்துடன் விளையாடி (20) என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டி இறுதிப் போட்டியில் சென்ட் சேர்விசஸ் கல்லூரியுடன் மோதி (20) கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டி சம்பியன் ஆனது. மேலும் 16 வயதுக் கீழ் இடம்பெற்ற போட்டியில் வெலிகம சித்தார்த்த கல்லூரி மற்றும் மாத்தறை ராகுல கல்லூரி ஆகியவற்றுடன் விளையாடி வெற்றியீட்டியதோடு இறுதிப் போட்டியில் சென்ட் சேர்விசஸ் கல்லூரியுடன் விளையாடியது. இதில் சென்ட் சேர்விசஸ் கல்லூரி (10) கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

மூன்று வயது மட்டங்களிலும் வெலிகம அறபா கல்லூரி மாகாண மட்டப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், கிழக்கு மாகாணம்**

**PSDG மற்றும் நேரடி அமைச்சு வேலைகள் - 2024**

1. 01 ஆம் அட்டவணையிலுள்ள வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொ. இல. | அடையாள இல. | விளக்கம் | விலை மனுதாரருக்குரிய தேவைப் படும் தரம் | TEC பொறியியலாளரின் மதிப்பீடு (மில். ரூபாவில்) | விலை மனுப் பிணை முறி (ரூபாவில்) | விலை மனு செல்லுபடிக் காலம் | விலை மனு பிணை முறியின் செல்லுபடிக் காலம் | பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதி (நாட்காட்டி நாட்கள்) | நிதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | EP/PDHS/ ENG/ PSDG/ PD/ 2024-02 | பானம மாவட்ட வைத்திய சாலையில் உள்ள OPD கட்டிடத்தைப் புதுப்பித்தல் | C8 மற்றும் C7 | 4.19 | 42,000.00 | 63 | 77 | 60 | PSDG |
| 02 | EP/PDHS/ ENG/ PSDG/ PD/ 2024-03 | தியவித்தகம சிகிச்சை நிலையத்தை மேம்படுத்துதல் | C8 மற்றும் C7 | 3.38 | 40,000.00 | 63 | 77 | 60 | PSDG |
| 03 | EP/PDHS/ ENG/ PSDG/ PD/ 2024-04 | வாழைச்சேனை மாவட்ட வைத்திய சாலையில் உள்ள மருத்துவ அதிகாரிகள் மற்றும் மருத்துவ நிபுணர் விடுதிகளை புதுப்பித்தல் | C8 மற்றும் C7 | 4.23 | 43,000.00 | 63 | 77 | 60 | PSDG |
| 04 | EP/PDHS/ ENG/ PSDG/ PD/ 2024-05 | ஏறாவூர் மாவட்ட வைத்திய சாலையில் நீர்த் தாங்கியை நிர்மாணித்தல் மற்றும் OPD கட்டிடத்தை மேம்படுத்துதல் | C8 மற்றும் C7 | 4.23 | 43,000.00 | 63 | 77 | 60 | PSDG |
| 05 | EP/PDHS/ ENG/ PSDG/ PD/ 2024-06 | நிந்தவூர் மாவட்ட வைத்திய சாலையில் மற்றும் வார்ட்டுகளுக் கிடையில் சரிவுப் பாதையை (Ramp) நிர்மாணித்தல் | C8 மற்றும் C7 | 3.30 | 33,000.00 | 63 | 77 | 60 | PSDG |
| 06 | EP/PDHS/ ENG/ PSDG/ PD/ 2024-07 | சென்ட்ரல் கேம்ப் மாவட்ட வைத்திய சாலையில் உள்ள OPD கட்டிடத்தைப் புதுப்பித்தல் | C8 மற்றும் C7 | 3.78 | 38,000.00 | 63 | 77 | 60 | PSDG |
| 07. | EP/PDHS/ ENG/ PSDG/ PD/2024-07 | களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்திய சாலையில் Lift Core ஐ மேம்படுத்துதல் மற்றும் பூர்த்தியாக்குதல் | C7 மற்றும் C6 | 5.2 | 52,000.00 | 63 | 77 | 90 | PSDG |
| 08. | EP/PDHS/ ENG/ L.MINI/PD/ 2024-01 | பதவிசிறிபுர மாவட்ட வைத்தியசாலையில் உள்ள Dialysis பிரிவைப் புதுப்பித்தல். | C6 மற்றும் C5 | 16.93 | 170,000.00 | 77 | 91 | 120 | Line Ministry |
| 09. | EP/PDHS/ ENG/ L.MINI/PD/ 2024-02 | பதவிசிறிபுர மாவட்ட வைத்தியசாலையில் உள்ள நுழைவாயில் மற்றும் மகப்பேறு வார்ட் கட்டிடத்தைப் புதுப்பித்தல். | C7 மற்றும் C5 | 8.30 | 83,000.00 | 63 | 77 | 90 | Line Ministry |

**அட்டவணை - 01**

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) 50 மில். ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமையானது 04/2016(iv) என்ற இலக்கத்தையுடைய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் ICTAD (தற்போது CIDA) இன் 1ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட நிருமாணத்தின் தேவைப்படும் தரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வரும் தகவுத்திறனை கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ) ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளின் தேறிய ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகள் (POD) மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள எந்தவொரு முற்பணக்கொடுப்பனவுகள் நீங்கலானது கேள்வியிடக்கூடிய தொகையின் 30% இற்கு குறைவாகவிருத்தல் ஆகாது. விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு முன்னராக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட சான்று பகரும் ஆவணமானது தொழில் வழங்குநருக்கு நேரடியாக முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
   - ஆ) பணிநிலை அலுவலர்களாக 01 எண்ணிக்கையான NDT (சிவில்) தகைமையையுடைய தொழில்நுட்ப அலுவலர் அல்லது நிகரான 3 வருட அனுபவத்தையுடைய அல்லது 5 வருட அனுபவத்தையுடைய NCT அலுவலராகவிருத்தல் வேண்டும்.
   - இ) விலைமனுதாரர் கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் கேள்வியிடக்கூடிய தொகைக்கு இதனையொத்த கட்டிடத்தை நிர்மாணிப்பதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் CIDA பதிவுப் புத்தகத்தின் சான்றிதழ் சகிதம் வேலை வழங்குநரிடமிருந்து / ஒப்புதல் அறிக்கையை ஆதார ஆவணமாக இணைத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் இலசவ விலைமனுக்கோரல் பரீட்சித்தல் என்பவற்றை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் திருகோணமலை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-07-01ஆம் திகதியிலிருந்து 2024-07-22ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் பி.ப. 3.00 மணி வரையும் 3,500.00 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120ஆம் இலக்கத்திலுள்ள மாகாண சுகாதார சேவைகள் (கிமா) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய திகதியன்று வரையும் (01ஆம் அட்டவணை) செல்லுபடியாகும் தன்மையிலும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் புகழ் வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தொகைக்குமாக கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது ''நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதமாகவும்'' இருப்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியிலும் அமைந்திருத்தல் வேண்டும்.
8. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர், பெறுகைக்குழு என முகவரியிடப்பட்டு இரு பிரதிகளில் திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120 ஆம் இலக்கத்திலுள்ள கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2024.07.23ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணியாகுமென்பதுடன் கிழக்கு மாகாணம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், பொறியியல் பிரிவில் 2024-07-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளித்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
11. திருகோணமலை கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் 2024-07-08ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
12. கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் திருப்தியற்ற செயற்பாட்டை மேற்கொண்ட அல்லது பிழையான தகவலை சமர்ப்பித்த விலைமனுதாரர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்பாட்டின் போது நிராகரிக்கப்படுவார்கள்.
13. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும். திணைக்கள பெறுகைக் குழுவானது அதனது சொந்த தீர்மானத்தின் பெயரில் எந்தவொரு தனியான அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

**வைத்தியர் D.G.M. கொஸ்தா,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம், திருகோணமலை.**

The Housewives' companion
Classifieds on
Daily News

## தேருநர் இடாப்பு மீளாய்வு

தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய 2024ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல்

இந்த QR குறியீட்டை Sean செய்து பதிவு விபரங்களைப் பார்வையிட முடியும் அல்லது ec.lk/vrd எமது இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்

1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய 2024 பிரதான தேருநர் இடாப்பு 2024 ஜுலை மாதம் 01ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இங்கே கீழுள்ள அட்டவணையின் Iஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்காக அதன் IIஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப் பதிவு அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் IIIஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் /அலுவலகங்களில் வழமையான அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்க முடியுமெனவும், தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20(1)ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர் சார்பாக அறியத்தரப்படுகின்றது.

2024 ஜுலை மாதம் 01ஆம் திகதி
**ராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தில்**

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,**
**தேர்தல் ஆணைக்குழு.**

**அட்டவணை**

| I ஆம் நிரல் தேர்தல் மாவட்டம் | IIஆம் நிரல் 2024 பிரதான தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திய அலுவலர் | IIIஆம் நிரல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்/அலுவலகங்கள் |
|---|---|---|
| 01. கொழும்பு | எம்.எம்.எஸ்.கே. பண்டார மாபா | கொழும்பு |
| 02. கம்பஹா | டப்ளியூ.ஏ.ஆர். விக்கிரமசிங்க | கம்பஹா |
| 03. களுத்துறை | காலிந்திர ஜயவீர பெர்னாந்து | களுத்துறை |
| 04. கண்டி | எச்.டீ.என். சம்பத் பெர்ணாந்து | கண்டி |
| 05. மாத்தளை | எச்.ஏ.ஈ. புஷ்பகுமார | மாத்தளை |
| 06. நுவரெலியா | கே.ஏ.எல்.எஸ். கலுகம்பிட்டிய | நுவரெலியா |
| 07. காலி | டப்ளியு.எச்.ஆர். விஜய குமார | காலி |
| 08. மாத்தறை | ரீ.டப்ளியூ. போஷிதா கௌமதீ | மாத்தறை |
| 09. ஹம்பாந்தோட்டை | என். ரேகன் | ஹம்பாந்தோட்டை |
| 10. யாழ்ப்பாணம் | ஆர்.சீ. அமல்ராஜ் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| 11. வன்னி | ஜே. ஜெனிட்டன் | மன்னார், வவுனியா, முல்லைத்தீவு |
| 12. மட்டக்களப்பு | எம்.பி.எம். சுபியான் | மட்டக்களப்பு |
| 13. திகாமடுல்ல | கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க | அம்பாறை |
| 14. திருகோணமலை | ஆர். சசீலன் | திருகோணமலை |
| 15. குருநாகல் | ஆர்.எம்.எச்.பி. ரத்நாயக்க | குருநாகல் |
| 16. புத்தளம் | எஸ்.எல்.ஆர். ஜயநாயக்க | புத்தளம் |
| 17. அநுராதபுரம் | கே. முகுந்தன் | அநுராதபுரம் |
| 18. பொலன்னறுவை | என்.பீ.பீ.ஐ.ஆர். குணரத்ன | பொலன்னறுவை |
| 19. பதுளை | கே. காந்தீபன் | பதுளை |
| 20. மொனராகலை | என். ரேகன் | மொனராகலை |
| 21. இரத்தினபுரி | சுரங்க அம்பகஹதென்னெ | இரத்தினபுரி |
| 22. கேகாலை | சஜித் பீ. கஸ்தூரிசிங்க | கேகாலை |

**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் (ப.ச.வி) புறப்படு முனையம்/இடைத்தங்கல் பிரதேசத்தில் யுனிசெக்ஸ் வணிக பெயருடைய ஆடைக் கடைகளை செயற்படுத்துவதற்கான சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

**(TENDER No.: 0131/T/2023)**

மூன்று வருட (03) காலத்திற்கு இலங்கை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய புறப்படும் முனையம்/இடைத்தங்கல் பிரதேசத்தில் யுனிசெக்ஸ் வணிக பெயருடைய ஆடை விற்பனைக்கூடங்களை நடத்திச் செல்வதற்காக பதிவு பெற்ற கம்பனிகள், தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக நான்கு (04) அமைவிடங்கள் இருப்பதுடன் விலைமனுக்கள் ஒன்று அல்லது மேற்பட்ட வெற்றிடங்களுக்காக சமர்ப்பிக்கப்படலாம். இருப்பினும், தனித்தனியான வணிக உரிமைப் பெயர்கள் சமர்ப்பிக்குமிடத்து தனியொரு விலைமனுதாரருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் ஒதுக்கப்படும். கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய புறப்படு முனையம்/இடைத்தங்கல் பிரதேசத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட கடையொன்றை நடத்துவதற்கு எந்தவொரு நபரையும் பரிசீலனை செய்யாது என்பதுடன் இந்த கேள்விக்கோரலுக்கு பின்னும் புறப்படு முனையம்/இடைத்தங்கல் பிரதேசத்தில் இரு கடைகளுக்கு மேற்பட்ட கடைகளை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டார்.

பிரயோகப்படுத்தப்படவுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியன கேள்விக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். 2024 ஜுன் 28 ஆம் திகதியிலிருந்து 2024 ஒகஸ்ட் 12 ஆம் திகதியன்று வரையும் வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணிவரையும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனைய கட்டிடத்தின் 2 ஆம் மாடி, 37 ஆம் இலக்க அறையின் வர்த்தக மற்றும் சொத்துக்கள் பிரிவு அலுவலகத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 181.00 அஐடொலரை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர்,விலைமனுதாரரின் தலைப்புக் கடிதத்தில் கோரிக்கை கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம்,விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 181.00 அஐடொலரை செலுத்துவதன் மூலம், www. airport.lk என்ற வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் கட்டுநாயக்க,பண்டாரநாயக்க சர்வதேச வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் வர்த்தக மற்றும் சொத்துக்கள் தலைவரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

விலைமனுக்கள் கம்பனியினால் வழங்கப்படும் விலைமனுக்கோரல் படிவங்களிலேயே தயாரிக்கப்படல் வேண்டுமென்பதுடன்,விலைமனுப்பிணையானது கீழே வழங்கப்பட்டுள்ளவாறு வங்கிவரைவு அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட அல்லது இலங்கை மத்தியவங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான உரிமமுள்ள விஷேடத்துவ வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் அல்லது ரொக்கப் பணத்தில் அமைந்திருத்தல் வேண்டும். (2024 ஒகஸ்ட் 13 ஆம் திகதியிலிருந்து செயல்வலு பெறும் வகையில்)

2024 ஜுலை 24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ப.ச.வி. இல் விலைமனு விளக்கக் காட்சியும் அதனைத் தொடர்ந்து வேலைத்தளத்திற்கான விஜயமும் நடைபெறும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனு விளக்கக் காட்சிக்கு சமுகமளிக்கலாம். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு என எழுதப்பட்டு பதிவுத் தபாலில் துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு, 30 ஆம் மட்டம், மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024 ஒகஸ்ட் 13 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு, திறக்கப்பட்டு அதன் பின்னர் பகிரங்கமாக கொழும்பு-01, உலக வர்த்தக மையம், மேற்கு கோபுரம், 30 ஆம் மட்டம், துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சில் வாசிக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் எந்தவொரு விலைமனுவும் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் முறையாக சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்கள் 011-2264002, 011-2264000 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக அல்லது head.cp@airport/lk என்ற மின்னஞ்சலூடாக கொழும்பு-01, உலக வர்த்தக மையம், மேற்கு கோபுரம், 30 ஆம் மட்டம், துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் 2 ஆம் மாடியின் 37 ஆம் இலக்கத்திலுள்ள வர்த்தகம் மற்றும் சொத்துக்கள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**மட்டம் 30, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு-01, இலங்கை.**

Daily News Classifieds, the Housewives' companion

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்த இலக்கம் | வேலையின் விளக்கம் | பிரதான பொறியியலாளரின் பிராந்தியம் |
|---|---|---|
| 01. | ஒழுகன்தொட்ட, பின்னவல, பொகவந்தலாவ வீதியின் 9/6, (LHS) ஆம் இலக்க மதகின் கெபியன் சுவரின் நிர்மாணம் மற்றும் மீள்நிர்மாணம் | இரத்தினபுரி |
| 02. | Rectification and Chip Sealing on Pambahinna-Kumbalgama-Rajawaka-Kapugala Road (From 22+000Km to 25+000 Km) | இரத்தினபுரி |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை 2024.07.02ஆம் திகதியிலிருந்து 2024.07.17 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இரத்தினபுரி.**

---

# மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்களை ஏலத்தில் விற்பனை செய்தல்

வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி பொதுச் சபையின் ஈட்டு முகவர்களான வரையறுக்கப்பட்ட கினிகத்ஹேனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

**கினிகத்ஹேனை, லக்ஷபான, விதுலிபுர, பொல்பிட்டிய, வட்டவளை, மொரஹேனகம, அம்பகமுவ, ஹெப்பேகந்த, கொத்தெல்லென**

எனும் கிராமிய வங்கிகளில் 2022-07-01ஆம் திகதி முதல் 2023-03-31ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க ஆபரணங்களை 2024-08-03ஆம் திகதி மு.ப. 10.30 மணி முதல் சங்கத்தின் கூட்ட மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**வ/ப கினிகத்ஹேனை ப.நோ.கூ. சங்கம்,**
**தலைமை அலுவலகம்,**
**கினிகத்ஹேனை.**
**தொலைபேசி: 051-2242710, 051-2242119, 051-2242233, 051-2242270.**

---

## ஸ்ரீலங்கா பாப்டிஸ்ட் சங்கமயாவின் பெயரை மாற்றவும்

அனைவரின் தகவலுக்காக 2024ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இலங்கை பாப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை பாப்டிஸ்ட் சங்கம் இனிமேல் ஸ்ரீலங்கா பாப்டிஸ்ட் தேவாலயம் என்று பெயரிடப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

இலங்கை பாப்டிஸ்ட் சங்கம் என அறியப்பட்டு இயங்கி வந்த எமது மதப்பிரிவு, இலங்கை பாப்டிஸ்ட் தேவாலயமாக அனைத்து சட்ட வங்கி ஆவணங்கள் மற்றும் எழுத்துப்பூர்வ விடயங்கள் உட்பட ஏனைய விடயங்களில் பயன்படுத்துவதற்கு இலங்கை குடியரசின் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. மற்றும் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்காலத்தில் வாய்வழி நடைமுறைகள் எழுத்துபூர்வமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி எமக்கு கிடைத்துள்ளதாக இலங்கை பாப்டிஸ்ட் தேவாலயத்திற்கும் அதனுடன் இணைந்த அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளுக்கும் இதன் மூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கிறேன்.

**ஆனந்த ரத்நாயக்க,**
**செயலாளர்,**
**இலங்கை பாப்டிஸ்ட் தேவாலயம்.**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு
## சிரம வாசனா நிதியம்
**தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**

### பாடசாலை அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்தல் - 2024

**ஒப்பந்த இலக்கம்: SVF/MOL/Edu.Aid/2024-II**

சிரம வாசனா நிதியத்திற்கு பாடசாலை அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்வதற்காக சிரம வாசனா நிதியத்தின் சார்பாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- இந்த பெறுகைக்கு இயைபாக ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை 2024-06-28ஆம் திகதி முதல் 2024-07-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் இல. 97, ஜாவத்த வீதி, கொழும்பு - 05 எனும் இடத்தில் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள சிரம வாசனா நிதிய அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- 3000.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை சிரம வாசனா கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் 2024-06-28ஆம் திகதி முதல் 2024-07-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கோரல் ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் விலைமனுதாரரால் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட இலங்கையினுள் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் சிரம வாசனா நிதியத்தின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்ட 200,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றை தமது விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அந்த பிணை முறி 2024-08-17ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
- விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2024-07-18ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு நிறைவுறும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நேரத்திற்கு முன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ''தலைவர், சிரம வாசனா நிதியம், இல. 97, ஜாவத்த வீதி, கொழும்பு-05'' எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்கூறிய முகவரியில் இரண்டாம் மாடியில் பொது முகாமையாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாடசாலை அப்பியாசக் கொப்பிகளை கொள்வனவு செய்தல் - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
- இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112588936 எனும் தொலைபேசி இலக்கத்தில் 2024-06-28ஆம் திகதி முதல் 2024-07-16ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கணக்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
- இந்த பெறுகை விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தை தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு,**
**நாராஹென்பிட்டி, கொழும்பு-05.**
**2024-06-28**

---

කෘෂිකර්ම නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

Funded by
The European Union

**කෘෂිකර්ම සහ වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය**
**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture and Plantation Industries**

# பெறுகை அறிவித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் செலவை நோக்கி 58.630 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையாக பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பின்வரும் ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பின்வரும் பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் சார்பில் திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல. | பணிகளின் விபரம் | வெட் தவிர்த்து மதிப்பிடப் படும் செலவு (ரூபா) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைமனு பிணை தொகை ரூபா | விலைமனு பிணை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத ரொக்கப் பண வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU- 31412 -CW-RFB | வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டத்தில் உள்ள ராஜாங்கனையில் வாழைப்பழ சேகரிப்பு மற்றும் செயலாக்க நிலையத்தின் நிர்மாணம் | 76,850, 634.00 | 4.0 மாதங்கள் | C4 அல்லது அதற்கு மேல்/ கட்டிடம் | 768,506.00 | 2024.11.20 | 20,000.00 |

3. செல்லுபடிக் காலத்துடன் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விலைமனு பிணையுடன் மேலுள்ள வேலைக்காக கூறுவிலையிடுவதற்கு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவர். ஒப்பந்தத்திற்காக ஒரே ஒரு கூறுவிலை இடுவதற்கு விலைமனுதாரர் ஒருவருக்கு அனுமதிக்கப்படும். ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) மேலுள்ள அட்டவணையில் கூறப்பட்ட தர நிலைக்காக குறித்த நிர்மாணத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
4. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு (டீேஊ) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
5. விலைமனு ஆவணத்தின் 4 ஆவது பிரிவில் தேவையான தகைமை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையில் (பிரிவு 5) தரப்பட்டுள்ளது.

   ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, NIPHM வளவு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், மாகாண பிரதித் திட்டப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு எந்த ஒரு வேலை நாட்களிலும் 9:00 மணி தொடக்கம் 14:00 மணி வரை இதே இடத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

   (தொ.பே. 0252227890/ 0718072078/ 0712801063) (மின்னஞ்சல்:- asmpncp17@gmail.com)
6. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, NIPHM வளவு, ASM திட்ட அலுவலகத்தில் 2024 ஜூலை 10 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு இடம்பெறும்.
7. விலைமனு 2024 நவம்பர் 20 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. விலைனுவானது அட்டவணையில் தரப்பட்ட விபரத்தின்படி விலைமனுப் பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
9. மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2024 ஜூலை 01ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூலை 19ஆம் திகதி வரை 9:00 மணி தொடக்கம் 14:00 மணி வரை அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, NIPHM வளவு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், மாகாண பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்களை 2024 ஜூலை 23 ஆம் திகதி 14:00 மணி அல்லது அதற்கு முன்னர் பிரதித் திட்டப் பணிப்பாளரின் அலுவலகம்/ வட மத்திய மாகாணம், விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், NIPHM வளவு, ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மின்னணு விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. 2024 ஜூலை 23ஆம் திகதி 14:15 மணிக்கு குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
11. முழுமையான விலைமனுக்கள் அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் வெவ்வேறாக மூடப்பட்டு முறையே கடித உறைகளில் 'அசல்' மற்றும் 'நகல்' என்று குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றை கடித உறையில் மூடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தத்தின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்லை.**

திகதி: 2024 ஜூலை 01

---

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

---

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

**அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் - கொலொன்னாவை**

# கேள்வி அறிவித்தல்

## பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்தல்

### கேள்வி இலக்கம்: 3/1/3/23/TN/004

அரச தொழிற்சாலைத் திணைக்களத்தின் பின்வரும் பழைய வாகனங்களை அப்புறப்படுத்துதல் தொடர்பாக விலைமனுக்களைக் கோரி விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இந்த கேள்வி அறிவித்தல் மற்றும் நிபந்தனைகளை அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் இணையதளத்திலிருந்து (http://www.govtfactory.gov.lk) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்பதுடன் 2024-07-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையில் அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்கள இடப்பரப்பில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| தொ. இல. | வாகன இலக்கம் | தயாரிப்பு | வாகனத்தின் வகை | உற்பத்தி வருடம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | கேள்வி பிணை வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01 | 32 - 2213 | Mitsubishi | மோட்டார் வாகனம் (ஜீப்) | 1985 | 2,500.00 | 50,000.00 |
| 02 | 41 ஸ்ரீ 9170 | Isuzu | லொறி | 1988 | 2,500.00 | 50,000.00 |

இணையதளம்: http://www.govtfactory.gov.lk

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,**
**கொலொன்னாவை.**

2024-07-01ஆம் திகதி.

---

Daily News Classifieds, the Housewives' companion

## மேடை நாடகக் கலைஞர்களின் வளர்ச்சிக்காக டவர் ஹோல் அரங்க மன்றத்தினால் வழங்கப்படும்

# டவர் திடீர் விபத்து மற்றும் மருத்துவ காப்பீடு – 2024

டவர் மண்டப அரங்க மன்ற பொறுப்பாளர் சபை மற்றும் புத்தசாசனம், மதங்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சின் வழிகாட்டலின் கீழ் டவர் மண்டப அரங்க மன்றத்தின் வருமானத்தில் இந்த திடீர் விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்ட முறை செயற்படுத்தப்படும்.

இந்தக் காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்து கொள்வதற்காக மேடை நாடகத் துறையின் பின்வரும் இணை துறைகளில் உள்ள இலங்கை மேடை நாடகக் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✓ கதாசிரியர்
- ✓ ஒப்பனை
- ✓ அரங்க ஒலியமைப்பு
- ✓ நாடகத் தயாரிப்பு
- ✓ நடன அமைப்பு
- ✓ நாடக உடை வடிவமைப்பு
- ✓ இயக்கம்
- ✓ பின்புல வடிவமைப்பு
- ✓ நடிப்பு
- ✓ நாடக இசை
- ✓ மேடை முகாமைத்துவம்

(கலைஞர்களுக்கு வழங்கப்படும் இந்த காப்புறுதிக்காக பயனாளர்களிடமிருந்து பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது)

### காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தகைமைகள்

1. சகல விண்ணப்பதாரர்களும் 45 - 75 வயதிற்கிடைப்பட்டவர்களாகவிருத்தல் வேண்டும்.
2. மேடை நாடகத் துறையில் உள்ள மேற்கூறிய இணை துறையில் தற்போது இருக்கும் கலைஞராகவிருத்தல்.

டவர் மண்டப அரங்க மன்றத்தின் www.towerhall.lk இணைய தளத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து மேற்கூறிய தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024 ஜூலை மாதம் 14ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சவ்சிரிபாய, இல. 123, விஜேராம மாவத்தை, கொழும்பு -07 எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

(விண்ணப்பப் படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''டவர் திடீர் விபத்து மற்றும் மருத்துவ காப்பீடு - 2024'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)

**விசாரணை - திரு. சந்தன - 0714436025**
**பிரதிப் பணிப்பாளர் (கலைஞர் நலன்புரி)**
**திருமதி சாமரி - 070-4035937**

**பணிப்பாளர் நாயகம்,**
**டவர் மண்டப அரங்க மன்றம்,**
**சவ்சிரிபாய,**
**இல. 123, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு -07**

## டவர் மண்டப அரங்க மன்றம்

**புத்தசாசனம், மதங்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சு**

## மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மாத்தறை

# பெறுகை அறிவித்தல்

மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்காக மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக்குழு தலைவரினால் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கீழ் குறிப்பிடப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் தொழில்துறை மின் உபகரணங்களை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடம் இருந்து வெவ்வேறாக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**மருத்துவ உபகரணங்கள்**

| வரிசை இலக்கம் | விபரம் | தேவையான அளவு | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) | விலைமனு ஆவண கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | Warmer , Infant | 01 | 15000.00 | 2000.00 |
| 02 | CTG Machine | 01 | 10000.00 | 2000.00 |

**தொழில்துறை மின் உபகரணம்**

| வரிசை இலக்கம் | விபரம் | தேவையான அளவு | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) | விலைமனு ஆவண கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | Industrial Clothing Dryer Machine | 02 | 30000.00 | 2000.00 |

**விலைமனு நிபந்தனைகள்**

01. தேசிய போட்டி ரீதியான விலைக் கேட்பு (NCB) அடிப்படையில் இந்த விலைமனு முறை செயற்படுத்தப்படும்.
02. விண்ணப்பதாரர் இலங்கை வர்த்தகப் பெயர் பதிவு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது நிறுவனச் சட்டத்தின் கீழ் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் மருத்துவ உபகரண மற்றும் பொருட்கள் அதிகாரசபையில் (மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்களுக்கு) பதிவு செய்யப்பட்டவர்கள் அல்லது நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதோடு (NMRA சான்று பெற்ற) இயந்திரங்களுக்கு உள்நாட்டு முகவர் நிறுவனம் ஊடாக விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
03. விலைமனு ஆவணங்களை எமது அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் இருந்து 2024.07.01 ஆம் திகதி தொடக்கம் 2024.07.19 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் மேல் குறிப்பிடப்பட்ட விலைமனு ஆவணக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு விலைமனு ஆவணங்களுடன் ஒவ்வொரு உருப்படிக்காகவும் மேல் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்ட மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் - மாத்தறை என்ற பெயருக்கு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து 2024.07.22 ஆம் திகதி தொடக்கம் 2024.11.22 ஆம் திகதி வரை செல்லுபடியான விலைமனு பிணை ஒன்றை அல்லது அந்தப் பெறுமதியை எமது அலுவலகத்தின் சிறாப்பருக்கு பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனு ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
04. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 02 பிரதிகளைக் கொண்டதாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறு உறைகளில் இட்டு அந்த மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி உறைகளை ஒற்றை உறையில் இட வேண்டும் என்பதோடு, அந்த உறையின் இடது பக்க மேல் மூலையில் உருப்படியின் வகை மற்றும் வரிசை இலக்கத்தை குறிப்பிட்டு உபகரணத்தின் பெயர் மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கானது என குறிப்பிடல் வேண்டும்.
05. 2024.07.22 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு முன்னர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், பரமுல்ல, மாத்தறை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது கைகளால் கொண்டுவந்து விலைகேட்புப் பெட்டிக்கு இட முடியும்.
06. விலைமனுக்களை திறப்பது அன்றைய தினம் மு.ப. 11.00 இற்கு மேற்கொள்ளப்படும். அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்ற முடியும்.
07. குறிப்பிட்ட திகதி குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் கிடைக்கின்ற மற்றும் குறிப்பிட்ட வகையில் சமர்ப்பிக்காத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
08. Industrial Clothing Dryer Machine இற்காக விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.07.10 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்தப்படவுள்ளதோடு குறித்த இணைப்பை விலைமனு ஆவணத்தை பெறும்போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
09. விலைமனுக்களை ஏற்பது, விலைமனுக்களை நிராகரிப்பது அல்லது அதன் பகுதி ஒன்றை ஏற்கும் உரிமை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக பெறுகைக்குழு வசமானது.
10. இது தொடர்பில் மேலதிக விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களை அழைத்து பெற்றுக்கொள்ள முடியும். 041-2222154 / 0412222514

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**
**பரமுல்ல, மாத்தறை.**

## இலங்கை துறைமுக அதிகார சபை

# கேள்வி அறிவித்தல்

### ஏலவிற்பனைத் திகதி: 2024-07-03

**எனது இல. LD/S/T/456/2023/SLPA, LD/S/T/445/2022/CICT**

CICT & UCT முற்றவெளியில் வைக்கப்பட்டுள்ள **(Urea Prilled , Fertilizing Elements & Onion)** பதினொரு (11) கொள்கலன்களைக் கொள்வனவு செய்து அப்புறப்படுத்துவதற்காக 2024-07-03ஆம் திகதி 0930 மணித்தியாலத்தில் BQ நலன்புரிக் கட்டிடத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

மேற்கூறிய கேள்விக்காக கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள தேசிய உரச் செயலகத்தினால் வழங்கப்படும் நிறுவன அனுமதிப்பத்திர உரிமையுடைய நபர் அல்லது நிறுவனங்கள் அல்லது அந்த நிறுவனத்தினால் பெயரிடப்பட்ட பிரதிநிதிகள் மட்டும் உரங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். அந்தப் பதிவு / உரிமம் 2024ஆம் வருடத்திற்காக நாளது தரவேற்றம் செய்யப்பட்டிருத்தல் கட்டாயமாகும் என்பதுடன் ஏலவிற்பனைக்காக பதிவு செய்யும்போது அதன் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏலஆவணங்கள் மற்றும் நுழைவு அனுமதி அட்டைகளை (Gate Pass) பெற்றுக்கொள்ளல் மற்றும் கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத 1000.00 ரூபா (பெறுமதி சேர் வரி மற்றும் ஏனைய வரிகள்) மற்றும் மீளளிக்கப்படும் 200,000.00 ரூபாவைச் செலுத்தி கெனல் முற்றவெளி, இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவின், விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2024-07-01ஆம் திகதி 0830 மணித்தியாலம் முதல் 2024-07-02ஆம் திகதி 1230 மணித்தியாலம் வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ஒரு விலைமனுதாரர் இரண்டு (02) பொருட்களுக்காக மொத்த மீளளிக்கப்படும் வைப்பாக 400,000.00 ரூபாவை மேற்கூறப்பட்ட வகையில் செலுத்துதல் வேண்டும்)

2024-07-02ஆம் திகதி 1400 மணித்தியாலம் முதல் 1600 மணித்தியாலம் வரையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள பொருட்களை இயைபுடைய முற்றவெளியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு www.slpa.lk இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்),**
2024-07-01
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**லொஜிஸ்டிக் பிரிவு, இல. 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

### கேள்வி இல.: Q-323/24

**SRI JAYAWARDENEPURA GENERAL HOSPITAL**
**TENDER FOR THE REPAIR OF THE 02 Nos. DX PLANT**

கீழே விபரிக்கப்பட்டவாறு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் "02 எண்ணிக்கையுடைய DX இன் பழுதுபார்த்தலுக்காக" தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை குறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

1. ஒப்பந்த வழங்கலைப் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இயைபுடைய இன வேலையில் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
2. கேள்விக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0112778610-நீடிப்பு 3142 /0112778624 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து பெற்று எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் கேள்விக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. 2024.07.17 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 2500 ரூபாவை செலுத்திய பின்னர், நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் அலுவலருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. 2024.07.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தளபத்பிட்டிய, நுகேகொட என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை முடிவுறுத்தப்பட்டவுடனேயே வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. 2024.07.08 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு பராமரிப்பு பொறியியலாளர்/ மின்னியல் போர்மனுவுடன் (Electrical Foreman) தள/ உபகரண பரீட்சித்தல் நடத்தப்படும். தளவிஜயம் கட்டாயமானதாகும்.
7. கேள்விப் பிணைத் தொகையானது 40,000 ரூபாவாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**



## கல்வி அமைச்சு

### இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**PCB வடிவ மென்பொருட்களின் வழங்கல் மற்றும் விநியோகத்திற்கான விலைமனுக்கள்**

**விலைமனு இல.: NERDC/DPC Minor/27/24**

1. பின்வரும் உருப்படியின் வழங்கல் மற்றும் விநியோகத்திற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் சார்பில் கனிஷ்ட தி.பெ.கு. தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | உருப்படியின் விபரம் | அளவு |
|---|---|---|
| 01. | PCB வடிவ மென்பொருட்களின் வழங்கல் மற்றும் விநியோகம் | 01 |

**தகைமையுடைய விலைமனுதாரர்கள்**

1.1 விலைமனுக்களுக்கான அழைப்பு அனைத்து முதன்மையானவர்கள், வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் தொடர்புடைய துறையில் இலங்கையில் உள்ள அவர்களின் உள்ளூர் அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு திறந்திருக்கும்.

1.2 தொடர்புடைய துறையில் விலைமனுதாரர்கள் இலங்கை அல்லது சர்வதேசத்தில் குறைந்தது 03 ஆண்டுகள் செயற்பட்டிருத்தல் வேண்டும்.

1.3 கடந்த 03 ஆண்டு காலத்தில் இதனையொத்த பொருட்களை வழங்கியதில் கடந்த கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

1.4 குறைந்தது 05 ஆண்டுகள் விற்பனைக்கு பின்னரான சேவையை வழங்க முடியுமாக இருத்தல் வேண்டும்.

2. சர்வதேச போட்டிரீதியான விலைமனு மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை ஜாஎல, ஏக்கல, தொழில்துறை தோட்டம், 2P/17B, தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், வழங்கல்கள் அலுவலகத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.
4. வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2024.07.02 ஆம் திகதி தொடக்கம் 2024.07.17 ஆம் திகதி வரை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெறலாம்.
5. விலைமனு செல்லுபடிக் காலம் விலைமனு மூடப்பட்ட திகதியில் இருந்து 63 நாட்களாகும்.
6. விலைமனுக்கள் 75,000.00 ரூபாவின் விலைமனுப் பிணையை கொண்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுப் பிணையின் செல்லுபடிக் காலம் விலைமனு மூடப்பட்ட திகதியில் இருந்து 91 நட்களாகும் (அதாவது 2024.10.16 அன்று வரை).
8. விலைமனுக்களை 2024.07.17 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024.07.17 ஆம் திகதி பி.ப. 2.00 இற்கு கீழுள்ள முகரியில் நேடியாக அல்லது ஒன்லைன் மூலம் பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. விலைமனுக்களை தலைவர், தி.பெ.கு. கனிஷ்ட, இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், 2P/17B, தொழில்துறை தோட்டம், ஏக்கல, ஜாஎல என்ற முகவரி இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் முத்திரை இடப்பட்ட கடித உறையில் அனுப்புவது அல்லது நிதிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேப்பு பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனு மூடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விலைமனு இல.: NERDC/DPC Minor/27/24 மற்றும் விலைமனு பெயர்: PCB வடிவ மென்பொருட்களின் வழங்கல் மற்றும் விநியோகம், 2024.07.17 அன்று 2.00 மணிக்கு முன்னர் திறக்க வேண்டாம்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
10. மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது.

**தலைவர், தி.பெ.கு. கனிஷ்ட,**
**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்.**
**2P/17B, தொழில்துறை தோட்டம், ஏக்கல, ஜாஎல.**

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்**
**தொ.: 011-2236307, 2236384, தொலைநகல்: 011-2233153**

The Housewives' companion
Classifieds on
Daily News

OBSERVER ADZ
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Gampaha District

Gampaha - 033 22 23 464
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

Wattala - 011 2 937 989
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

Nilpanagoda - 077 8 627 321
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

Wattala - 011 2 932 511
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

Kochchikade - 031 22 78 359
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

Batuwatta - 071 8 921 271
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

Dunagaha - 077 3 517 752
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

Ja-Ela - 011 2 947 379
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

Negombo - 071 480 43 55
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

Katunayake - 077 4 115 998
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

Kandana - 011 2 233 651
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

Minuwangoda - 011 2 297 881
1935 - K. L. Somasiri - No. 233/5, Diulapitiya Road, Minuwangoda.

Katana - 031 2 241 687
1938 - W. N. D. Agosthinu Appuhami - No. 124/D, Kaluwarippuwa West, Katana.

Ja-Ela - 071 8 571 713
1943 - Gamini Arambawatta - No. 28, Old Negombo Road, Kanuwana, Ja-Ela.

Kotugda - 011 2 290 815
1944 - M. K. Melcolm Silva - 'Jayamal' Kasagahawatta, Kotugoda.

Negombo - 071 552 22 40
1944 - H. A. S. Pushpalatha Rosairo - Rosairo Newspapers and Advertising, Negombo.

Udugampola - 071 4 554 696
1470 - K. K. Danesh Pradeepa - 'Kumudu' Nilwala Road, Udugampola.

Ganumulla - 076 2 217 181
1969 - S. Damith Mellawa Thanthrige - Ganumulla

Indigolla - 033 5 613 736
1982 - M. M. Manjula Saman Kumari - 72/5/C/2, Yakkala Road, Indigolla.

Kelaniya - 011 2 947 379
1457 - G. Wimalasiri Perera - No. 555, Dhanushka Velandasela, Waragoda Road, Kelaniya.

Malwana - 011 2 487 560
1461 - G. Shamila Vithana - No. 549/5, 'Dilsha' Walgama, Malwana.

Kadawatha - 011 2 902 092
1434 - M. M. S. Damayanthi Herath - Adz soon Advertising, 137/1, Kandy Road, Kadawatha.

Dompe - 071 7 186 955
1498 - S. A. C. Senadheera - 'Jayanthi', Dompe.

Kiribathgoda - 077 3 719 282
1499 - P. A. Priyani Peliarachchi - New Samanala Book Shop, No. 181, Kandy Road, Kiribathgoda.

Yakkala - 077 3 475 696
1561 - W. Mudalige - Ruhunu Hardware Stores, No. 50 A, Kirindiwela Road, Yakkala.

Kirindiwela - 077 2 047 350
1607 - D. M. Sarath Premathilake - Chandana News Center, Radawana Road, Kirindiwela.

Nittambuwa - 033 22 89 608
1654 - W. P. K. R. S. Narangoda - Ganga Trade Center, No. 134, Kandy Road, Nittambuwa.

Nittambuwa - 077 3 191 979
1905 - L. T. R. S. Jayawardana - Jayawardena Book Shop, No. 643, Wathupitiwala, Nittambuwa.

Giriulla - 077 9 542 492
1906 - K. A. Jagath Chandrasiri - No. 45, Negombo Road, Giriulla.

Kelaniya - 011 4 820 896
1910 - P. D. Sumedha Samarajeewa - No. 340, Biyagama Road, Sinharamulla, Kelaniya.

Makola - 078 5 200 648
1940 - R. D. Chirantha Jayawardena - No. 365/5, Gunarathna Mawatha, Makola North, Makola.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

# இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசு
## வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
# விலைமனுக்களுக்கான அழைப்பு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் கணனி துணைப்பாகங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமை மற்றும் இயலுமை உடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டிரீதியிலான கேள்விகோரலின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவத்தின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (கேள்வி திறக்கப்படும் நாள் முதல்) |
|---|---|---|---|---|---|
| WL/02/09/Com. Acc/ 2024 Computer Accessories | Lot No -I<br>Desktop Computer<br>Laptop Computer<br>Monitor | <br>30<br>05<br>30 | 4,850/- | 170,000/- | 90 நாட்கள் |
| | Lot No -II<br>Dot matrix printer<br>Multi-function printer | <br>20<br>20 | 1,650/- | 46,000/- | |
| | Lot No -III<br>Photocopy Machines | 06 | 1,300/- | 33,500/- | |
| | Lot No -IV<br>Computer U P S | 50 | 500/- | 9,500/- | |
| | Lot No – V<br>Projector | 03 | 500/- | 5,000/- | |

01. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை திணைக்களத்தின் உதவி நிதிப் பணிப்பாளர் (0112-871537) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2024-07-01ஆம் திகதி முதல் 2024-07-22ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பத்தரமுல்லை, வனசீவராசிகள் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
02. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2024-07-01ஆம் திகதி முதல் 2024-07-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையில் கடிதத் தலைப்பில் எழுத்துமூலமான கோரிக்கை சகிதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் லொட் இலக்கத்திற்குரித்தான உபகரணங்கள் மற்றும் பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024-07-22ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் என்பதுடன் கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
04. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்புக்கூற மாட்டார்.
05. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும், ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் அல்லது எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்லை.**

## துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு

### வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் (ப.ச.வி) புறப்படு முனையம் / இடைத்தங்கல் பிரதேசத்தில் சர்வதேச உணவுச் சங்கிலி விற்பனைக்கூடங்களை செயற்படுத்துவதற்கான சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

### (TENDER No.: 0117/T/2023)

மூன்று வருட (03) காலத்திற்கு இலங்கை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய புறப்படும் முனையம்/இடைத்தங்கல் பிரதேசத்தில் சர்வதேச உணவு சங்கிலி விற்பனைக்கூடங்களை நடத்திச் செல்வதற்காக பதிவு பெற்ற கம்பனிகள், தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக நான்கு (04) அமைவிடங்கள் இருப்பதுடன் விலைமனுக்கள் ஒன்று அல்லது மேற்பட்ட வெற்றிடங்களுக்காக சமர்ப்பிக்கப்படலாம். இருப்பினும், தனித்தனியான வணிக உரிமைப் பெயர்கள் சமர்ப்பிக்குமிடத்து தனியொரு விலைமனுதாரருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் ஒதுக்கப்படும். கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய புறப்படு முனையம்/இடைத்தங்கல் பிரதேசத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட கடையொன்றை நடத்துவதற்கு எந்தவொரு நபரையும் பரிசீலனை செய்யாது என்பதுடன் இந்த கேள்விக்கோரலுக்கு பின்னும் புறப்படு முனையம்/இடைத்தங்கல் பிரதேசத்தில் இரு கடைகளுக்கு மேற்பட்ட கடைகளை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டார்.

பிரயோகப்படுத்தப்படவுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியன கேள்விக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். 2024 ஜூன் 28 ஆம் திகதியிலிருந்து 2024 ஓகஸ்ட் 12 ஆம் திகதியன்று வரையும் வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணிவரையும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனைய கட்டிடத்தின் 2 ஆம் மாடி, 37 ஆம் இலக்க அறையின் வர்த்தக மற்றும் சொத்துக்கள் பிரிவு அலுவலகத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 295.00 அஐடொலரை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர்,விலைமனுதாரரின் தலைப்புக் கடிதத்தில் கோரிக்கை கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம்,விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 295.00 அஐடொலரை செலுத்துவதன் மூலம்,**www.airport.lk** என்ற வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் கட்டுநாயக்க,பண்டாரநாயக்க சர்வதேச வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் வர்த்தக மற்றும் சொத்துக்கள் தலைவரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

விலைமனுக்கள் கம்பனியினால் வழங்கப்படும் விலைமனுக்கோரல் படிவங்களிலேயே தயாரிக்கப்படல் வேண்டுமென்பதுடன்,விலைமனுப்பிணையானது கீழே வழங்கப்பட்டுள்ளவாறு வங்கிவரைவு அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட அல்லது இலங்கை மத்தியவங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான உரிமமுள்ள விஷேடத்துவ வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் அல்லது ரொக்கப் பணத்தில் அமைந்திருத்தல் வேண்டும். (2024 ஓகஸ்ட் 13 ஆம் திகதியிலிருந்து செயல்வலு பெறும் வகையில்)

2024 ஜூலை 23 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ப.ச.வி. இல் விலைமனு விளக்கக் காட்சியும் அதனைத் தொடர்ந்து வேலைத்தளத்திற்கான விஜயமும் நடைபெறும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனு விளக்கக் காட்சிக்கு சமுகமளிக்கலாம். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு என எழுதப்பட்டு பதிவுத் தபாலில் துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு, 30 ஆம் மட்டம், மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024 ஓகஸ்ட் 13 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு, திறக்கப்பட்டு அதன் பின்னர் பகிரங்கமாக கொழும்பு-01, உலக வர்த்தக மையம், மேற்கு கோபுரம், 30 ஆம் மட்டம், துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சில் வாசிக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் எந்தவொரு விலைமனுவும் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் முறையாக சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்கள் 011-2264002, 011-2264000 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக அல்லது **head.cp@airport/lk** என்ற மின்னஞ்சலூடாக கொழும்பு-01, உலக வர்த்தக மையம், மேற்கு கோபுரம், 30 ஆம் மட்டம், துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் 2 ஆம் மாடியின் 37 ஆம் இலக்கத்திலுள்ள வர்த்தகம் மற்றும் சொத்துக்கள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**மட்டம் 30, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு-01, இலங்கை.**

Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
WE ACCEPT
Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### 1500 கிலோ மீற்றர் கிராமிய வீதிகள் செயற்றிட்டத்திற்கு வேலைகள் வழங்குவதற்கான விலைமனு கோரல் (IFB)

**(IFB இல. 1,500km/PD (UP)/RMIX/2024/01)**

மேற்கூறிய IFB இலக்கத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் வீதி மேற்பரப்பிற்காக தரம் 30 (19mm) உடன் கலவை கொங்கிறீட்டை வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பில் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் (ஊவா மாகாணம்) கோருகின்றார்.

இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-07-01ஆம் திகதி முதல் 2024.07.23ஆம் திகதி வரையில் அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு அல்லது 057-2222170/ 057-2231176 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**மாகாணப் பொறுப்பு பணிப்பாளர் (ஊவா)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## சிறு விளம்பரம்

### வேலைவாய்ப்பு

325

தொழில்துறை

பொது

கொழும்பில் உள்ள சலூன் கடைக்கு முடி வெட்ட தெரிந்த ஆண் ஒருவர் தேவை. மேலதிக விபரங்களுக்கு தொ.இல. 0772976364. 043491

# விலைமனுக்களுக்கான அழைப்பு
## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்
### சுகாதார அமைச்சு

| திகதி | 2024 ஜூலை 01 |
|---|---|
| கடன் இல. மற்றும் திட்டத்தின் தலைப்பு | சுகாதார அமைப்பு விரிவாக்கத் திட்டம் (மேலதிக நிதிப்படுத்தல்) – L4121 SRI |
| ஒப்பந்த இல. மற்றும் பெறுகை தலைப்பு | HSEP(AF)/PMU/PRO/G6.1/180/2023<br>மாவட்டங்களுக்கான 16 அம்புலன்ஸ்களின் பெறுகை (மருத்துவமனைகளுக்கு இடையிலான பரிமாற்றம்) |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி | 2024 ஜூலை 31 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு முன் |

1. சுகாதார அமைப்பு விரிவாக்கத் திட்டம் - மேலதிக நிதிப்படுத்தலின் செலவை நோக்கி ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ADB) இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு நிதி கிடைக்கப்பெற்றிருப்பதோடு மேல் பெயரிடப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த நிதியின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ADB இன் தகுதியுடைய மூல நாடுகளின் விலைமனுதாரர்களுக்கு விலைமனு திறந்துள்ளது.
2. பின்வரும் வாகனங்களின் பெறுகைக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சுகாதார அமைச்சினால் (கொள்வனவாளர்) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பொருள் வகை மற்றும் தொடர்புடைய சேவைகளின் சுருக்கமான விபரம் கீழே தரப்பட்டுள்ளது:

| பொருட்கள் மற்றும் தொடர்புடைய சேவைகளின் சுருக்கமான விபரம் | அளவு (எண்ணிக்கை) |
|---|---|
| மாவட்டங்களுக்கான 16 அம்புலன்ஸ்களின் பெறுகை (மருத்துவமனைகளுக்கு இடையிலான பரிமாற்றம்) | 16 |

3. வெற்றிகரமான விலைமனுதாரர் விநியோகத்திற்கு குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு பொருட்களை விநியோகிக்க வேண்டும் என்பதோடு விலைமனு ஆவணத்தில் உள்ள அட்டவணைப்படி நிறைவு செய்தல் வேண்டும். அதேபோன்று, ஒப்பந்தம் கைச்சாத்தானதில் இருந்து 120 நாட்களுக்குள் விநியோகம் பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதோடு விநியோகத்தின்போது வாகனங்களை பயன்படுத்துவதற்கு தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அறிமுக பயிற்சி வழங்கல் வேண்டும்.
4. ADB இன் ஒற்றை கடித உறையின் பிரகாரம் திறந்த போட்டி ரீதியான விலைகேட்பு (OCB) நடத்தப்படும்: ஒற்றை கடித உறை விலைமனு நடைமுறை மற்றும் விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுடைய நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறந்தது. ADB இன் தகுதி விதிகள் மற்றும் நடைமுறைகள் விலைமனு நடைமுறையில் கையாளப்படும்.
5. பின்வரும் முக்கிய தகைமைகளுடனான தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் மாத்திரம் விலைகேட்பில் பங்கேற்க முடியும் என்பதோடு தகைமை அளவுகோல் விலைமனு ஆவணத்தில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளது:
   - பிரிவு 6 இல் (வழங்கல் அட்டவணை) விபரிக்கப்பட்ட வழங்கலின் நோக்கத்திற்கு ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாட்டுடன் கடந்த 12 ஆண்டுகளுக்குள் பிரதான வழங்குநர் ஒருவராக 384 மில்லியன் இ.ரூபா அல்லது அதற்கு இணையான சுதந்திரமாக மாற்றக்கூடிய நாணயத்திற்காக குறைந்த ஒட்டுமொத்த மதிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - விலைமனுதாரர் (i) குறைந்தது ஐந்து ஆண்டுகளாக வழங்கும் பொருட்களின் உற்பத்தியில் இருந்ததாகவும் (ii) கடந்த 12 ஆண்டுகளில் இதனையொத்த வகை மற்றும் விபரக்குறிப்பின் குறைந்தது 50 அலகுகளை விற்றிருப்பதாகவும் (iii) குறைந்தது 4 ஆண்டுகளாக செயற்படுவதாகவும் நிரூபித்தல் வேண்டும்.
   - கடந்த 3 ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றலில் உள்ள ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெறப்பட்ட மொத்த கொடுப்பனவாக மதிப்பிடப்பட்ட 960 மில்லியன் இ. ரூபா (2.9 மில்லியன் அமெரிக்க டொலர்) குறைந்தபட்ச சராசரி ஆண்டுப் புரள்வை கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்தகால நிதி செயல்திறன் - விலைமனுதாரரின் தற்போதைய நிதி நிலையின் தற்போதைய போதுமான தன்மையை நிரூபிப்பதற்கு கடந்த மூன்று ஆண்டுகளுக்கான (2020/2021, 2021/2022 மற்றும் 2022/2023) கணக்காய்வு நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல். குறைந்தபட்சமாக, மொத்த சொத்துக்களுக்கும் மொத்த பொறுப்புகளுக்கும் உள்ள வித்தியாசமாக கணக்கிடப்பட்ட கடந்த ஆண்டுக்கான விலைமனுதாரரின் நிகர மதிப்பு நேர்மறையாக இருத்தல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களை பெறுவதற்கு மற்றும் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டும்.

**தலைவர் - திட்ட பெறுகை குழு**
**சுகாதார அமைப்பு விரிவாக்கத் திட்டம் - மேலதிக நிதிப்படுத்தல்,**
**இல. 3/19, கின்சி வீதி, கொழும்பு -8, இலங்கை.**

**தொலைபேசி இலக்கம்: +94 112 697 173 தொலைநகல்: +94 112 697 163**
**மின்னஞ்சல்:** pmu@hsep.lk

7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேலுள்ள முகவரியில் 2024 ஜூலை 10 ஆம் திகதி 1030 மணிக்கு தொழில் வழங்குநரால் நடத்தப்படும். இந்த விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்பதற்கு அனைத்து விலைமனுதாரர்களும் உறுதியாக வலியுறுத்தப்படுகின்றனர்.
8. ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை வாங்குவதற்கு, தகுதியுடைய விலைமனுதாரர்கள் 2024 ஜூலை 30 அன்று பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி மேலதிக நிதிப்படுத்தல் - சுகாதார அமைப்பு விரிவாக்கத் திட்டத்திற்காக அம்புலன்ஸ்களின் பெறுகைக்கான விலைமனு ஆவணக் கோரிக்கையை மேலுள்ள முகவரிக்கு எழுத்தமூல கோரிக்கை/ விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

| விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| மாவட்டங்களுக்கான 16 அம்புலன்ஸ்களின் பெறுகை (மருத்துவமனைகளுக்கு இடையிலான பரிமாற்றம்) | இ.ரூபா 60,000.00 அல்லது அமெரிக்க டொலர் 194.00 |

9. கொடுப்பனவு முறையானது வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ரொக்கப்பணத்தில் அல்லது இலங்கை வங்கியில் 7040799 என்ற கணக்கு இலக்கத்திற்கு மேலதிக நிதிப்படுத்தல் - சுகாதார அமைப்பு விரிவாக்கத் திட்டம் (இணை) என்ற வங்கிக் கணக்குப் பெயருக்கு செலுத்துவது/ நேரடி வைப்புச் செய்தல் வேண்டும்.
10. பந்தி 9 இன் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்திற்கு மேலதிகமாக 100 அமெரிக்க டொலர் மற்றும் 15,000.00 இ. ரூபாவின் மேலதிகக் கட்டணத்துடன் விலைமனு ஆவணங்களின் முறையே வெளிநாட்டு விநியோகத்திற்காக விமான அஞ்சல் அல்லது உள்நாட்டு விநியோகத்திற்காக தரைவழி அஞ்சல் அல்லது விரைதூதர் மூலம் அனுப்பலாம். காணாமல்போதல் அல்லது தாமதித்த விநியோகத்திற்கு பொறுப்பேற்கமாட்டாது.
11. விலைமனுக்களை விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணையுடன் சேர்த்து 2024 ஜூலை 31 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் மேலுள்ள 6ஆவது பந்தியில் தரப்பட்டுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனு பிணையானது வங்கி உத்தரவாத வடிவம் ஒன்றில் சமர்ப்பிப்பதாயின், "சுகாதார அமைப்பு விரிவாக்கத் திட்டம் (மேலதிக நிதிப்படுத்தல்) – திட்டப் பணிப்பாளரின்" பெயரில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் விலைமனு படிவங்களின் பிரிவு 4 இல் தரப்பட்ட வடிவத்தை பயன்படுத்தி இருத்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாது திருப்பி அளிக்கப்படும்.
12. விலைமனுக்கள் விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 148 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
13. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்குப் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
14. விலைமனுக்களின் தயார்படுத்தல் அல்லது விநியோகத்துடன் தொடர்புபட்ட விலைமனுதாரர்களினால் ஏற்படும் எந்த ஒரு இழப்பு அல்லது செலவுக்கும் சுகாதார அமைச்சின் சுகாதார அமைப்பு விரிவாக்கத் திட்டம் - மேலதிக நிதிப்படுத்தல் பொறுப்பாகாது.

**தலைவர் - திட்ட பெறுகை குழு**
**சுகாதார அமைப்பு விரிவாக்கத் திட்டம் - மேலதிக நிதிப்படுத்தல்,**
**இல. 3/19, கின்சி வீதி, கொழும்பு -8, இலங்கை.**
2024.07.01

**தொலைபேசி இலக்கம்: +94 112 697 173 தொலைநகல்: +94 112 697 163**
**மின்னஞ்சல்:** pmu@hsep.lk

The Housewives' companion
Classifieds on
Daily News





உலகக் கிண்ணத்தை வென்றது இந்தியா!

# 13 வருடகால காத்திருப்புக்கு கிடைத்த வெற்றி

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான டி20 உலகக் கிண்ணத்தில் இந்திய அணி அசாத்திய வெற்றி

2024 ஐசிசி டி20 உலகக் கோப்பையில் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்து இந்தியா வெற்றிபெற்றது. பார்படோஸின் பிரிட்ஜ்டவுனில் நடந்த உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் இந்த வெற்றிகிடைத்தது, இந்தியாவின் 13 ஆண்டு கால காத்திருப்புக்குக்கு முடிவு கிட்டியது. 2011 ஆம் ஆண்டு முதலாவது டி20 உலகக் கிண்ணத்தை வென்ற இந்தியாவிற்கு இந்த போட்டியானது T20 கிரிக்கெட்டின் கணிக்க முடியாத மற்றும் உற்சாகமளிக்கும் தன்மைக்கு ஒரு சான்றாக இருந்தது, இதில் வியத்தகு வேகத்தில் மாற்றங்கள் நடந்தன. மற்றும் இரு தரப்பிலிருந்தும் சிறப்பான கிரிக்கெட் ஆட்டத்தை இரசிக்க முடிந்தது

இந்தியாவிற்கு ஒரு சிறந்த தென்னாபிரிக்காவின் பந்துவீச்சாளர்கள் மிகவும் சிறப்பாகப் பந்து வீசியதால் இந்தியாவின் இன்னிங்ஸ் பெரும் அழுத்தத்தில் தொடங்கியது. ககிசோ ரபாடா மற்றும் அன்ரிச் நார்ட்ஜே ஆகிய இருவரும் முதல் ஐந்து ஓவர்களில் இந்தியாவை 39 –3 என்ற நிலைக்கு மட்டுப்படுத்தினர். கேப்டன் ரோகித் ஷர்மா மற்றும் ரிஷப் பந்த் ஆகியோர் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தமை இந்தியாவைத் திணறடித்தது,

விராட் கோலி மற்றும் அக்சர் படேல் ஆகியோர் அணியை ஓரளவிக்குள் முன்னேற்றினர். அனுபவம் வாய்ந்த கோலி, தனது கடைசி டி20 போட்டியான இதில் முக்கியமான இன்னிங்ஸை விளையாடினார். இதற்கிடையில், பேட்டிங் வரிசையில் பதவி உயர்வு பெற்ற அக்சர் படேல், அழுத்தத்தை குறைக்க சரமாரியாக பவுண்டரிகளை விழாசினார். அவர்களின் 72 ஓட்ட இணைப்பாட்டம் விளையாட்டின் போக்கை மாற்றியது, அக்சரின் 31 பந்துகளில் 47 ஓட்டங்கள் இந்தியாவுக்கு மிகவும் தேவையான உத்வேகத்தை அளித்தது.

குயின்டன் டி கொக்கின் சிறப்பாக களத்தடுப்பு காரணமாக அக்சர் வெளியேற, ஷிவம் துபே கோலியுடன் கிரீஸில் இணைந்தார். 16 பந்துகளில் துபேவின் வேகமான 27 ஓட்டங்கள் ஸ்கோர்போர்டைத் தக்கவைத்துக்கொண்டது, அதே நேரத்தில் கோலி, தனக்கான முக்கியத்துவத்தால் உற்சாகமடைந்தார், இறுதி ஓவர்களில் ஓட்டங்களை விரைவுபடுத்தினார். அவரது இன்னிங்ஸ் 59 பந்துகளில் 76 ஓட்டங்கள், இது இந்தியாவுக்கு 177 என்ற கடினமான இலக்கை நிர்ணயிக்க உதவியது.

ஜஸ்பிரித் பும்ராவின் அதிரடியான பந்துவீச்சால் தென்னாப்பிரிக்காவின் ஆரம்பம் சிறிது ஆட்டம் கண்டது. போட்டியின் சிறந்த வீரராகப் பெயரிடப்பட்ட பும்ரா, சிறப்பாக தன் பணியைச் செய்தார். ரீசா ஹென்ட்ரிக்ஸை ஆரம்பத்தில் வெளியேற்றினார்.

இருப்பினும், குயின்டன் டி கொக் மற்றும் டிரிஸ்டன் ஸ்டப்ஸ் ஆகியோருடன் ப்ரோடீஸ் மீண்டும் போராடியது ஒரு நெகிழ்வான இணைப்பாட்டத்தை உருவாக்கியது. டிகொக்கின் அனுபவமும், கிளாசனின் ஆக்ரோஷமான ஸ்ட்ரோக் ஆட்டமும் தென்னாப்பிரிக்காவை மீண்டும் போட்டிக்குள் கொண்டு வந்தது. ஆடவர் டி20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் கிளாசனின் அதிவேக 23 பந்துகளில் 50 ஓட்டங்கள், இந்தியாவை சற்றே கதிகலங்க வைத்தது.

**திருப்புமுனை**

ரிஷப் பந்தின் முக்கியமான பிடியெடுப்பின் மூலம் ஆபத்தான கிளாசனை ஹர்டிக் பாண்டியா வெளியேற்றியதால் ஆட்டம் சூடுபிடித்தது. தென்னாப்பிரிக்காவிற்கு 45 பந்துகளில் 71 ஓட்டங்களும், 6 விக்கெட்களும் கைவசம் இருந்த நிலையில், இந்தியாவின் வாய்ப்புகள் மங்கலாகத் தெரிந்தன. ஆனாலும், பாண்டியாவும் பும்ராவும் தங்கள் ஆட்டத்தை தொடர்ந்து பேணினர். டேவிட் மில்லரை வெளியேற்ற சூர்யகுமார் யாதவின் அசத்தலான கேட்சைப் போலவே மார்கோ ஜான்சனை சரியான இன்ஸ்விங் பந்து வீச்சில் பும்ரா வெளியேற்றியது முக்கியமானது.

இறுதி ஓவர்கள் உணர்ச்சிகளின் திரட்சியாக இருந்தது. மிகடைசி ஓவரில் தென்னாப்பிரிக்காவிற்கு 16 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், அழுத்தம் அதிகமாக இருந்தது. இந்தியாவின் பந்துவீச்சாளர்கள் தங்கள் திட்டங்களை குறைபாடற்ற முறையில் செயல்படுத்தினர், வியத்தகு ஏழு ரன்கள் வெற்றியை அடைந்தனர்.

**கோலியின் உணர்ச்சிபூர்வமான பிரியாவிடை**

விராட் கோலியின் டி20 சர்வதேச ஓய்வு அறிவிப்பும் வெற்றியுடனேயே வந்து சேர்ந்தது. "இது எனது கடைசி டி20 உலகக் கோப்பை, இதைத்தான் நான் சாதிக்க விரும்பினேன்" என்று கோலி தனது போட்டிக்கு பிந்திய பேட்டியில் கூறினார். அவரது வீரம், அவரது தலைமைத்துவம் மற்றும் அனுபவத்துடன் இணைந்து, பல ஆண்டுகளாக இந்தியாவின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார் "இது நீண்ட காத்திருப்பு, எனக்கு மட்டும் அல்ல. இந்த வெற்றிக்கு இந்த அணி தகுதியானது," என்று அவர் மேலும் கூறினார்.

2024 டி20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இந்தியாவின் வெற்றி பல வருட விடா முயற்சி மற்றும் கடின உழைப்பின் பொருத்தமான உச்சம். சமீபத்திய ஐசிசி போட்டிகளில் மனவேதனையை எதிர்கொண்ட அணிக்கு, இந்த வெற்றி மிகவும் சந்தோஷமானதாக இருந்தது.

மைதானத்தில் வீரர்கள் கொண்டாடியபோது, இது வெறும் வெற்றியை விட அதிகமானது என்பது தெளிவாகத் தெரிந்தது இது இந்திய கிரிக்கெட்டின் மீட்பின் தருணம். மற்றும் ஒரு புதிய அத்தியாயம் இந்தியாவின் வெற்றி, அது உருவாக்கிய பரபரப்பான கிரிக்கெட்டுக்காக மட்டுமல்ல, அந்த அணி சமீபகாலமாக எதிர்கொண்ட தோல்விகளுக்காகவும் நினைவுகூரப்படும்.

அபி



# தொடர் தற்கொலை தாக்குதல்: நைஜீரியாவில் பயங்கரம்



நைஜீரியாவில் (Nigeria) நடந்த தொடர் தற்கொலைத் தாக்குதலில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டதுடன் 19 பேர் படுகாயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி தாக்குதல் சம்பவமானது நேற்றுமுன்தினம்(29)இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நைஜீரியாவின் வடகிழக்கு போர்னோ மாநிலத்தில் பெண் தற்கொலை குண்டுதாரிகளால் குவோசா நகரில் திருமணங்கள், இறுதிச் சடங்குகள் மற்றும் மருத்துவமனைகளை குறிவைத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த தாக்குதல்களில் குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களும் உயிரிழந்துள்ளதாக போர்னோ மாநில அவசர முகாமைத்துவ அமைப்பின் (State Emergency Management Agency) தலைவர் பார்கிண்டோ சைட் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக, உட்புற உறுப்பு சேதம் முதல் மண்டை ஓடு மற்றும் மூட்டு முறிவு வரை பலருக்கு அதி தீவிரமான காயம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் விபரித்துள்ளார்.

மேலும், இந்தத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை என்று நைஜீரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# லெபனானுக்கு இராணுவத்தை அனுப்பினால் தீவிரமான போரை இஸ்ரேல் எதிர்கொள்ளும்

## கடும் தொனியில் எச்சரிக்கிறது ஈரான்

இஸ்ரேல் லெபனானுக்கு இராணுவத்தை அனுப்பினால் அந்த நாட்டின் மீது தீவிரமான போர் நடத்தப்படும் என்று நேற்றுமுன்தினம் (29) நடந்த ஐ.நா சபை கூட்டத்தில் ஈரான் எச்சரித்துள்ளது.

இதற்கு பதிலடி கொடுத்துள்ள இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் காட்ஸ், இந்த ஒரு கருத்தே ஈரான் அரசை முழுவதுமாக அழித்தொழிக்க போதுமான காரணம் என்று தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் யோகாவ் காலண்ட் சுமுகமான முறையில் ஈரான் ஹிஸ்புல்லா பிரச்சினையை தீர்க்க வழி தேடி வருவதாக அந் நாட்டு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஈரானின் பின்புலத்துடன் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராக பெரிய அளவில் தாக்குதல் நடத்த திட்டமிட்டு வருவதாக கூறப்படுகிறது. பலஸ்தீன லெபனான் எல்லையில் இருந்து இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இதனிடையே ஈரானில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெளியான வாக்கு எண்ணிக்கை முடிவுகளின்படி எவருக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் ஜூலை 5 ஆம் திகதி இரண்டாம் கட்டமாக மீண்டும தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிபந்தனைகளை ஏற்றால் போர் நிறுத்தம்: ரஷ்யாவிற்கு உக்ரைன் ஜனாதிபதி அறிவிப்பு

ரஷ்யாவுடனான போரினை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒப்பந்த திட்டத்தை வெளியிடவுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ரஷ்யாவுடன் நடந்துவரும் போரை கூடிய விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் போரில் ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களின் உயிரிழப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

எனவே, போர் நிறுத்தத்தை இனியும் தள்ளிப்போட முடியாது. ராஜதந்திர ரீதியில் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான முயற்சிகள் தொடங்கிவிட்டன. விரைவில், அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய உக்ரைனின் போர் நிறுத்த ஒப்பந்த திட்டம் வெளியாகும் எனத் தெரிவித்தார்.

நேட்டோஅமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிா்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022ஆண்டு படையெடுத்தது. தற்போது உக்ரைனின் சுமார் ஐந்தில் ஒரு பகுதி ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ளது. இருந்தாலும், ரஷ்யாவால் இணைத்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள 4 பிராந்தியங்களின் சில பகுதிகள் இன்னும் உக்ரைன் படையினர் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

அந்தப் பகுதிகளைக் கைப்பற்ற ரஷ்யாவும் இழந்த பகுதிகளை மீட்க உக்ரைனும் தொடா்ந்து போரிட்டு வருகின்றன. 2 ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்று வரும் இந்தப் போரில் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான செயல்திட்டத்தை ரஷ்ய அதிபர் புடின் கடந்த மாதம் முன்வைத்தார். அதில் தங்களால் இணைத்துக்கொள்ளப்பட்ட உக்ரைன் பிராந்தியங்களிலிருந்து அந்த நாட்டுப் படையினர் வெளியேறுவது, நேட்டோவில் இணையும் முயற்சியை உக்ரைன் கைவிடுவது ஆகிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் போரை நிறுத்த ஒப்புக்கொள்ளப்படும்" என அவர் தெரிவித்துள்ளார்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 1ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

# கேள்வி அறிவித்தலில் திருத்தம் செய்தல்

## சுகாதார அமைச்சு

## போதனா வைத்தியசாலை – பதுளை

பதுளை போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் 2024-06-11ஆம் திகதிய தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளைத் திறக்கும் நாள் பின்வரும் வகையில் திருத்தப்படுகின்றது.

- அறிவித்தலின் தொடரிலக்கம் 03, 04, 07, 09, 10, 11, 12, 16, 18 மற்றும் 20 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் தொடரிலக்கம் 22, 23 உபகரணங்களுக்கான கேள்விகள் திறக்கப்படும் நாள் பின்வரும் வகையில் திருத்தப்படுகின்றது.
- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகள் திறக்கப்படும் திகதி 2024-07-02
- கேள்விகள் திறக்கப்படும் சரியான திகதி 2024-07-16ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு
- கேள்வி அறிவித்தலின் ஏனைய சகல நிபந்தனைகளும் மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாண பொது வைத்தியசாலை,**
**பதுளை.**

**தொலைபேசி இல. 055-2222261** **தொலைநகல்: 055-2231205**
**மின்னஞ்சல்: info@badullapgh.org** **இணையதளம்: info@badullapgh.org**

2024-06-28.

## இலங்கை துறைமுக அதிகார சபை

# திருத்தம் பற்றிய அறிவித்தல்

1. 2024 ஜுன் 14ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகள் மற்றும் 2024 ஜுன் 16ஆம் திகதிய சண்டே ஒப்சேர்வர், சிலுமின, வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் கேள்வி 2024-07-05ஆம் திகதி திறக்கப்படுவதாக ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் கேள்விகள் முடிவுறுத்தப்படும் திகதி பின்வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | முன்பு பிரசுரிக்கப்பட்ட முடிவுறுத்தப்படும் திகதி | புதிய முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| CMS/LP/24/PT/17/020 | Supply and Installation of Furniture for East Container Terminal Operation Building in the Port of Colombo | 2024-07-05 பி.ப. 1.30 மணி | 2024-07-12 பி.ப. 1.30 மணி |

ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**வழங்கல் பிரிவு,**
**இலங்கைத் துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482832, 2482409, 2483024, 2482652**

NSB

# தேசிய சேமிப்பு வங்கி

## மீட்கப்படாத அடகுப்பொருள் ஏலவிற்பனை : 2024 ஜூலை மற்றும் ஆகஸ்ட்

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 2023 மே 31 ஆம் திகதி வரை (அத்தினம் அடங்கலாக) அடகு வைக்கப்பட்டு ஆனால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களுக்கு முன் மீட்கப்படாத மற்றும் அடகினைப் புதுப்பித்துக் கொள்ளப்படாத தங்க ஆபரணங்களை பின்வரும் தினங்களில் குறித்த ஏலவிற்பனை நிலையங்களில் காலை 09.00 மணி முதல் ஏலத்தில் விடப்படும்.

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2024.07.25 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2024.07.27**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 30, பார்க் வீதி, பண்டாரவளை | பண்டாரவளை |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 88, கொடுக்கொடல்லை வீதி, கண்டி | கண்டி, முள்கம்பளை, கண்டி அஞ்சல் கிளை, கண்டி 2ம் கிளை, கண்டி சிட்டி சென்டர், ரிகில்லகஸ்கட, கடுகஸ்தோட்ட, அலவத்துகொட, கலகெதர, திகன, வத்தேகம |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 32, அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி | நாவலப்பிட்டி, கினிகத்ஹேன |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 11, லோவர் கிங் வீதி, பதுளை | பதுளை, ஹாலிஎல, பஸ்ஸர, வெலிமட |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 26, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை | மாத்தறை, கெகனதுரை, வெலிகம, மாத்தறை 2ம் கிளை, திக்வெல்ல, தெவிநுவர |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 52, ஹொரண வீதி, பாணந்துறை | பாணந்துறை, வாத்துவ, பண்டாரகம, களுத்துறை, அலுத்கம, பேருவளை, மத்துகம, களுத்துறை 2ம் கிளை, ஹொரண, இங்கிரிய, கிரிஎல்ல |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 130, ப்ரன்ட் வீதி, கொழும்பு - 11 | புறக்கோட்டை கிளை, மாளிகாவத்த, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், சிட்டி பிளஸ், நாரஹேன்பிட்டி, வெல்லம்பிட்டிய, முல்லேரியா, பொரள்ள |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, இரத்தினபுரி | இரத்தினபுரி, குருவிட்ட, நிவித்திகலை |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 88/88A, கினிகத்ஹேன வீதி, யட்டியாந்தோட்டை | யட்டியாந்தோட்டை, புளத்கொஹுபிட்டிய, தெரணியக்கல |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 98, கம்பஹா வீதி, கிரிந்திவெல | கிரிந்திவெல, பூகொட, வெலிவேரிய |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, அமரதுங்க கட்டிடம், டி. எஸ். சேனநாயக்க வீதி, அம்பாறை | அம்பாறை, அக்கரைப்பற்று, பொத்துவில், சம்மாந்துறை, தம்பிலுவில், அம்பாறை 2ம் கிளை, உஹன |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 139, வெல்லவாய வீதி, மொனராகல | மொனராகல, பிபிலை, புத்தள, சியம்பலாண்டுவ, படல்கும்புர வெல்லவாய |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, புகையிரத நிலையம் முன், A9 வீதி, கொடிகாமம் | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, பி.டப்ளியூ.டி. வீதி, முல்லைத்தீவு | முல்லைத்தீவு, மல்லாவி |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 15, கொழும்பு வீதி, வென்னப்புவ | வென்னப்புவ, மாரவில, தன்கொட்டுவ, நாத்தாண்டிய |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 21, மரதன்கடவெல வீதி, கெக்கிராவ | கெக்கிராவ, கலென்பிதுனுவெவ, கல்னேவ |
| 17 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 93, இரத்தினபுர வீதி, பதுரலிய | பதுரலிய, புலத்சின்ஹல, கலவான |
| 18 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 318, காலி வீதி, கல்கிஸ்ஸ | களுபோவில, தெல்கந்த, பொரலஸ்கமுவ, நுகேகொட, பிட்டக்கோட்ட, நாவல, கிருலப்பென நகர கிளை, உலக வர்த்தக மைய கிளை, ராஜகிரிய |

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2024.07.25 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2024.07.28**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 445, மாத்தளை வீதி, தம்புல்ல | தம்புல்ல, நாஉல, கலேவெல |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 341, கொழும்பு வீதி, பேராதெனிய | பேராதெனிய, பிலிமதலாவ, தெல்தோட்ட |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 24, பார்க் வீதி, நுவரெலியா | நுவரெலியா, றாகல |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 96, டி.சி. வணிகசேகர மாவத்தை, அக்குரஸ்ஸ | அக்குரஸ்ஸ, மொரவக்க, கம்புருபிட்டிய, தெனியாய, நெலுவ |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 379, கண்டி வீதி, கேகாலை | கேகாலை, வரக்காப்பொல, ரம்புக்கன, கேகாலை 2ம் கிளை |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 75, கண்டி வீதி, மாவனல்ல | மாவனல்ல, அரநாயக்க |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 342, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல | மொரட்டுமுல்ல, கட்டுபெத்த, புவக்கரம்ப, பிலியந்தல, பிலியந்தல 2ம் கிளை, கஹத்துடுவ |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 430/10, இஹல கரகஹமுன, கண்டி வீதி, கடவத்த | கடவத்த, கிரிபத்கொட, களனி, ராகம, கனேமுல்ல, மாகொல, கடுவெல, தெல்கொட |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, புதிய கடைத்தொகுதி, நிட்டம்புவ | நிட்டம்புவ, வெயாங்கொட, மீரிகம |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 116, 116A பஸார் வீதி, மட்டக்களப்பு | மட்டக்களப்பு, ஆரயம்பதி, செங்கலடி, வாழைச்சேனை |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 292, மட்டக்களப்பு வீதி, பலகைமோல் சந்தி, கதுருவெல | கதுருவெல, ஹிங்குராங்கொட, மெதிரிகிரிய |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 136, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 11, இன்னர் சேர்குளர் வீதி, வவுனியா | வவுனியா |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 14, கண்டி வீதி, குருணாகல் | குருணாகல், மெல்சிரிபுர, ரிதீகம, பொல்பித்திகம, மாவத்தகம, இப்பாகமுவ, குருணாகல் 2ம் கிளை |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 591/1, புதிய நகரம், அநுராதபுரம் | அநுராதபுரம், நொச்சியாகம, அநுராதபுரம் 2ம் கிளை, எப்பாவல |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 318, காலி வீதி, கல்கிஸ்ஸ | கல்கிஸ்ஸ, தெஹிவளை, கொள்ளுப்பிட்டி 2ம் கிளை, பம்பலப்பிட்டி, வெள்ளவத்த தலைமை அலுவலகக் கிளை, மொரட்டுவ |
| 17 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 75, ஹைலெவல் வீதி, ஹோமாகம | ஹோமாகம, மீகொடை, கொட்டாவ, மஹரகம, பத்தரமுல்ல, அத்துருகிரிய, தலவத்துக்கொட, மாலபே, ஹன்வெல்ல |

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2024.08.01 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2024.08.03**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 3/5 டி.பி. பானபொக்க வீதி, கம்பொள | கம்பொள, கெலிஓயா, புஸ்ஸல்லாவ |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 114, நுவரெலியா வீதி, தலவாக்கல | தலவாக்கல, பூண்டுலோயா, ஹட்டன் |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 20, கொழும்பு வீதி, கலுவெல்ல வீதி, காலி | காலி, காலி 2ம் கிளை, உடுகம, பத்தேகம, கராப்பிட்டிய, ஹிக்கடுவ, ஹபராதுவ, இமதுவ, யக்கலமுல்ல, அஹங்கம |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 4, வந்துரப்ப வீதி, அம்பலாந்தோட்ட | அம்பலாந்தோட்ட, அங்குணகொலபெலஸ்ஸ, சூரியவெவ, ஹம்பாந்தோட்ட, திஸ்ஸமஹாராம, கதிர்காமம் |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, புதிய நகரம், எம்பிலிப்பிட்டிய | எம்பிலிப்பிட்டிய, கொடக்கவெல |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 12, கொழும்பு வீதி, கம்பஹா | கம்பஹா, யக்கல, கம்பஹா 2ம் கிளை, மினுவான்கொட, திவுலப்பிட்டிய |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி | களுவாஞ்சிக்குடி, கல்முனை, பெரியகல்லாறு, பலுகாமம் |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 52/1 மருதம் கட்டிடம், கொடிக்காமம் வீதி, நெல்லியடி | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 16, வாழ்வுதயம் கொம்பிளக்ஸ், தலைமன்னார் வீதி, மன்னார் | மன்னார், வன்காலை |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 161, பிரதான வீதி, குளியாப்பிட்டி | குளியாப்பிட்டி, நாரம்மல, ஹெட்டிப்பொல, பன்னல |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, குருணாகல் வீதி, சிலாபம் | சிலாபம், மாதம்பே, பிங்கிரிய |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 66, பிரதான வீதி, அலவ்வ | அலவ்வ, பொல்கஹவெல, கிரியுல்ல |

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2024.08.01 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2024.08.04**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 39, 40, புதிய நகரம், கண்டி வீதி, மஹியங்கன | மஹியங்கன |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 147, திருகோணமலை வீதி, மாத்தளை | மாத்தளை |
